

# தமிழரசு


16-5-1991 ரூ.1





உதகையில் புதியதோர்
உல்லாசப் படகு!

புகைப்படம் உதவி: தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை



# இந்த இதழில்...


சுற்றுப்புறத் தூய்மையும் பொருளாதார வளர்ச்சியும் முரண்பட்டவையல்ல —மேதகு ஆளுநர் உரை ... 2

தேர்தல் - முக்கியச் செய்திகள் ... 3

மகளிர் மேம்பாடு ... 5

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழா ... 9

எழுச்சிக் கவிஞர் பாரதிதாசன் —மேதகு ஆளுநர் உரை ... 11

பத்திரிகையாளர் பாவேந்தர் ... 14

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சீரிய பணிகள் ... 17

இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடி ... 19

தமிழ்நாட்டில் வனவிலங்குச் சரணாலயங்கள் ... 23

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ... 27

மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 29

முனையிலே முகத்து நில் ... 33

மீன் வளர்ச்சி - மீனவர் மேம்பாடு ... 35

பாவேந்தரின் 'பாண்டியன் பரிசு' —ஒரு புதிய பார்வை ... 37

கலப்படமும் நுகர்வோர் விழிப்புணர்வும் ... 39

எலும்புப் புற்றுநோய் — இதோ ஒரு புதுச் சிகிச்சை ... 41



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

வைகாசித் திங்கள் - 2

மலர்: 21 இதழ்: 22

16-5-1991

# சுற்றுப்புறத் தூய்மையும்

# பொருளாதார வளர்ச்சியும்

# முரண்பட்டவையல்ல!




மேதகு ஆளுநர்
திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள்


"சுற்றுப்புறச் சூழ்நிலைகள் கெட்டுப்போவது ஊட்டியில் மட்டும் நடப்பது அல்ல. அது உலக அளவில், விஞ்ஞானிகளுக்கு அதிக கவலையைக் கடந்த 20 ஆண்டுகளாகத் தந்து கொண்டிருப்பது ஆகும். இதனால் பூமி மேலும் சூடாவது பற்றியும், பூமியின் மேல் பரப்புகளுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து பற்றியும், பாலைவனங்கள் பரவி விளைநிலங்கள் அழிந்து போகும் அபாயங்கள் பற்றியும், பலமுறை விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். வளர்ந்து விட்ட நாடுகளை மட்டுமே பாதித்து வந்த மாசு பட்ட சுற்றுச் சூழ்நிலை, இப்பொழுது ஏறத்தாழ அனைத்து நாடுகளையும் பாதிக்கிறது. வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் இந்தக் கோணத்தில் நாம் காண வேண்டி உள்ளது.

சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காதவாறு பொருளாதார மேம்பாட்டை அடைவது என்பது கடினமான செயலாக விளங்குகிறது. சுற்றுச்சூழல் அமைப்பில் முன்னேற்றம் குறித்தும் இயற்கையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்தும், திட்டமிடுபவர்களும், பொருளாதார நிபுணர்களும், சுற்றுச் சூழல் நிபுணர்களும் சரியாகத் தீர்மானிக்க இயலாதவர்களாகவே உள்ளனர். இதற்குக் காரணம் பொருளாதார வளர்ச்சியும், சுற்றுப்புறத் தூய்மையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையென்றும், பொருளாதார வளர்ச்சியாலோ, தொழிற்சாலைகள் அதிகரிப்பதாலோ, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது என்று கருதப் படுவதேயாகும். இதில் ஒன்றிருந்தால் மற்றொன்று இருக்கமுடியாது என்றே கருதப்படுகிறது.

எனவே, சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் வளர்ச்சித் திட்டங்களைத் தடுக்கின்றனர். பொருளாதார நிபுணர்கள் சுற்றுப்புறச் சூழலைப் பற்றிச் சற்றும் கவலை கொள்ளாது பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இருவரது வாதங்களும் சரியே என்றாலும் இரண்டும் நேர்மாறான கருத்துக்கள். அவை பொருளாதார முன்னேற்றத்திற்கோ, சுற்றுச் சூழலுக்கோ உதவாது".

"சமீப காலத்தில் ஊட்டி ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருப்பதால், ஊட்டியின் அழகைப் பராமரிப்பது மிகவும் அவசியமாகிறது. ஊட்டியின் பெருமைக்குரிய ஏரி, அழகை, இழந்து வருகிறது. இதன் அசுத்தத்தை நீக்க, கழிவு நீர் அகற்றும் திட்டம் இப்பொழுது நிறைவேற்றப் படுகிறது. 1990-91-ஆம் ஆண்டில் இதற்காக ரூ.1.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் திட்டக்குழு இதற்காக 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.1 கோடியை ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின் ஊட்டி இழந்துவிட்ட தன் பொலிவை மீண்டும் பெறும் என நம்புகிறேன். இந்த இடத்திற்கே உரித்தான கலைப்பொருட்களைப் பற்றி நன்கு விளம்பரப் படுத்தி ஊட்டியின் சுற்றுலா வளர்ச்சிக்கு மக்கள் உதவ வேண்டும்".

(4.5.91 அன்று உதகையில் நடைபெற்ற கோடை விழாத் தொடக்க நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து).


# தேர்தல்: சில முக்கியச் செய்திகள்

★ தமிழ்நாட்டில் மொத்தம் 39 மக்களவைத் தொகுதிகள் இருக்கின்றன. எல்லாத் தொகுதி களிலும் பலமுனைப் போட்டிகள் இருந்தபோதிலும் திண்டிவனம் தொகுதி ஒன்றில் மட்டுமே மும் முனைப் போட்டி உள்ளது. அதேபோல, அதிக பட்ச வேட்பாளர்கள் தென்சென்னைத் தொகுதி யிலே போட்டியிடுகிறார்கள்; தென் சென்னைத் தொகுதியில் போட்டியிடுவோர் எண்ணிக்கை 28. தமிழ்நாட்டின் மொத்த மக்களவைத் தொகுதி களிலும் 461 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்!

★ தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் மொத்தம் 2834 வேட்பாளர்கள் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருக் கிறார்கள். இவற்றில்- பெரணமல்லூர், சேந்த மங்கலம், நன்னிலம் ஆகிய மூன்று தொகுதிகளில் மட்டுமே மிகக் குறைந்த வேட்பாளர்கள் போட்டி யிடுகிறார்கள்; இத்தொகுதிகளில் தலா மூன்று வேட்பாளர்களே போட்டியிடுகின்றனர்! மாவட்ட வாரியாகப் பார்க்கும்போது- செங்கை அண்ணா மாவட்டத்தில்தான் அதிக அளவில், அதாவது 422 பேர் போட்டியிடுகிறார்கள். மிகக்குறைந்த அளவில் வேட்பாளர்கள் போட்டியிடும் மாவட்டம் நீலகிரியாகும்; அங்கே மொத்தத்தில் 28 பேர்களே இத்தேர்தலில் போட்டியிடுகிறார்கள்!

★ பஞ்சாப், அசாம் மாநிலங்களில் ஜூன் மாதத் திலும் - மற்ற சட்டமன்றங்களுக்கு மக்களவைத் தேர்தலுடன் இம்மாதம் 20,23,26 ஆகிய தேதி களிலும் வாக்குப்பதிவு நடக்கிறது.

★ செங்கை அண்ணா மாவட்டம் பள்ளிப்பட்டு சட்டமன்றத் தொகுதியில் 264 பேரும், திருச்சிராப் பள்ளி மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 249 பேரும் (1.5.91 நிலவரப்படி) போட்டியிடுகிறார்கள். இதனால் அவ்விருதொகுதி களுக்குமாக 2.5 அடி உயரமும், 2 அடி அகலமும், 2 அடி நீளமும் கொண்ட மிகப்பெரிய வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன; இந்தியாவிலேயே இப்படிப்பட்ட வாக்குப் பெட்டி வைப்பது இதுதான் முதல் தடவையாகும்! இத் தொகுதிகளுக்கான ஒவ்வொரு வாக்குச்சீட்டும் 61 செ.மீ. நீளம், 86 செ.மீ அகலம் இருக்கும்.



10.5.91 வரையில் சேகரிக்கப்பட்ட செய்தித் துளிகள்!

★ காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் மொத்தம் 43 பேர் போட்டியிடுகிறார்கள். இவர்களில் 7 வேட்பாளர் களின் பெயர்கள் 'இராமச்சந்திரன்' என்பதாகும். இரு வேட்பாளர்கள் 'பாலசுப்பிரமணியம்' என் றும், மற்றும் இரு வேட்பாளர்கள் 'புகழேந்தி' என்றும் பெயருடையோராவர்! ஆலம்பட்டி வேலாயுதம் என்ற சிறைக்கைதியும் இங்கே ஒரு தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்!

★ மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.சந்திர சேகர் உத்திரப் பிரதேசத்திலுள்ள பலியா தொகுதி யில் போட்டியிடுகிறார்; அவரை எதிர்த்து 21 பேர் போட்டியிடுகிறார்கள். ஃபதேபூர் தொகுதி யில் போட்டியிடும் முன்னாள் பிரதமர் திரு.வி.பி.சிங்கை எதிர்த்து 34 பேர் போட்டியிடுகிறார்கள். அமேதி தொகுதியில் போட்டியிடும் முன்னாள் பிரதமர் திரு.ராஜீவ் காந்தியை எதிர்த்து 41 பேர் போட்டியிடு கிறார்கள்.

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர் கோவில் மக்களவைத்தொகுதி-கிள்ளியூர், விளவங் கோடு, திருவட்டார் சட்டப்பேரவைத் தொகுதி ஆகியவைகளில் மலையாள மொழி பேசுவோர் அதிகமிருப்பதால்- அத்தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுகள் தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மும்மொழிகளில் அச்சடிக்கப்படும் என்று அறிவிக் கப்பட்டிருக்கிறது.

★ தமிழ்நாட்டில் நடைபெறும் மக்களவைத் தேர்தலை மேற்பார்வையிடத் தேர்தல் கமிஷன் மத்திய அரசின் உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 13 பேரைப் பார்வையாளர்களாக நியமித்திருக்கிறது. இவர்கள் ஒவ்வொருவரும் தலா மூன்று மக்களவைத் தொகுதிகளில் பணியாற்றுவார்கள்!

★ இந்தியாவெங்கும் பரவலாக நடக்க விருக்கும் மக்களவை மற்றும் சட்டப் பேரவைத் தேர்தல்களில் மொத்தம் 26,600 வேட் பாளர்கள் போட்டியிடுகிறார்கள். தேர்தல்

நடைபெறவிருக்கும் 537 மக்களவைத் தொகுதி களில் 9,107 வேட்பாளர்கள் போட்டியிடு கிறார்கள். தமிழ்நாடு, அரியானா, உத்திரப் பிரதேசம், மேற்கு வங்கம், கேரளம், பஞ்சாப், அசாம் ஆகிய 7 மாநிலங்களிலும் புதுவை யூனியன் பிரதேசத்திலும் உள்ள 1,464 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 17,500 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்!

★ புதுவை யூனியன் பிரதேசத்தில் உள்ள ஒரே ஒரு மக்களவைத் தொகுதிக்கு 13 பேர் போட்டி யிடுகிறார்கள்; அங்குள்ள 30 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு 208 பேர் போட்டியிடுகிறார்கள்!

★ இந்தப் பொதுத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ்நாட்டில், பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளாகத் தேசியக் கட்சிகள் 9ம், மாநிலக் கட்சிகள் 3ம் அங்கீகரிக்கப்படாத, பதிவு செய்யப் பட்ட கட்சிகள் 42ம் போட்டியிடுகின்றன!

★ செங்கை-அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த வி.டி.ஆர். வீரப்ப கவுண்டர் என்பவர், சில அரசியல் கட்சிகளின் முக்கியத் தலைவர்களை எதிர்த்துப் போட்டியிட 8 இடங்களில் வேட்பு மனுத் தாக்கல் செய்திருக்கிறார்.


★ தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் பார்வை யாளர்களாக 78 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழக அரசின் தேர்தல்துறை மூலம் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். இந்த அதிகாரிகள் ஒவ்வொருவரும் தலா மூன்று தொகுதிகளைக் கவனித்துக் கொள்ளு வார்கள்!

★ இந்தத் தேர்தலில், இந்தியா முழுமையிலுமாக- 24 முன்னாள் முதலமைச்சர்கள், 3 மாநில முதல்வர்கள் மக்களவை-சட்டமன்றம்-யூனியன் பிரதேசத் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள்!

★ இந்தியாவிலேயே மிகப்பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் உள்ள 85 பாராளுமன்றத் தொகுதிகளில் 1,650 வேட்பாளர்களும், 425 சட்டமன்றத் தொகுதிகளுக்கு 10,000 வேட்பாளர் களும் போட்டியிடுகிறார்கள்!

★ தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடும் மொத்த வேட்பாளர்கள் எண் ணிக்கை, மாவட்ட வாரியாக வருமாறு: சென்னை 214, செங்கை-அண்ணா 422, சிதம்பரனார் 81, கோயம்புத்தூர் 214, தருமபுரி 74, திண்டுக்கல்-காயிதேமில்லத் 60, காமராசர் 118, கன்னியா குமரி 67, மதுரை 187, நீலகிரி 28, வட ஆர்க்காடு அம்பேத்கர் 87, பசும்பொன் தேவர் திருமகன் 34, பெரியார் 132, புதுக்கோட்டை 44, இராமநாதபுரம் 36, சேலம் 188, தென்னார்க் காடு 150, தஞ்சாவூர் 123, திருச்சிராப்பள்ளி 396, நெல்லை கட்டபொம்மன் 120, திருவண்ணா மலை சம்புவராயர் 59. ஆக மொத்தம் 2,834 வேட்பாளர்கள்.

★ இந்தத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களுக் கெனக் கூடுதலாக 310 சின்னங்கள் தேர்தல் கமிஷனால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.






★ இந்த மக்களவைத் தேர்தலில் மொத்தம் 51 கோடியே 41 இலட்சத்து 26 ஆயிரத்து 380 வாக்காளர்கள் வாக்களிக்க விருக்கின்றனர். இதில்- 24 கோடியே 38 இலட்சத்து 70 ஆயிரத்து 209 பேர் பெண் வாக்காளர்கள். ஏறத்தாழ பாதிக்குப் பாதியளவில் பெண் வாக்காளர்கள் இருந்தபோதிலும் போட்டியிடும் வேட்பாளர் களில் 2 சதவிகிதம் பேர்களே பெண்கள்!

★ பாராளுமன்றத் தேர்தலில் 1989-இல் போட்டி யிட்டவர்கள் 6,000 வேட்பாளர்களே; இந்தமுறை அதைவிட 4,000 வேட்பாளர்கள் அதிகமாகப் போட்டியிடுகிறார்கள்.

★ 19.4.91 முதல் 8 நாட்களில் சுமார் 30,000 வேட்பாளர்களால் தமிழகத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவைகளில் 500 மனுக்கள் 27.4.91-இல் நிராகரிக்கப்பட்டன.

★ 1989-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற 234 தொகுதிகளில் மொத்தம் 6,049 வேட் பாளர்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர்; இந்தத் தேர்தலில் 4,617 வேட்பாளர்களே வேட்பு மனுத்தாக்கல் செய்தனர். இது, கடந்த தேர்தலை விட 1,432 குறைவு ஆகும். 1989 நவம்பரில் நடை பெற்ற 543 தொகுதிகளுக்கான மக்களவைத் தேர்தலில் 771 பேர் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தனர்; இப்போதோ 671 பேரே மனுத் தாக்கல் செய்துள்ளனர். இதுவும் கடந்த முறையை விட 100 குறைவு ஆகும்.

★ சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி சட்ட மன்றத் தொகுதியில் போட்டியிடத் திருமதி காளியம்மாள் என்ற 102 வயதுப் பெண்மணி வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

★ தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தமிழகத் திலேயே மிகக் குறைந்த வேட்பாளர்கள் மோதும் தொகுதி சேலம் மாவட்டத்தில் உள்ள சேந்த மங்கலம் ஆகும். அங்கு 4 வேட்பாளர்களே களத்தில் உள்ளனர்.

**தொகுப்பு:**
**இல.இராசேந்திரன்**

# மகளிர் மேம்பாடு



"விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி" எனும் அமைப்பின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ரூ.4,592 இலட்சம் செலவில் தருமபுரி, சேலம், தென்னார்க்காடு, மதுரை, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 55,000 மகளிர் 7 ஆண்டுகளில் பயன் பெறும்பொருட்டு "தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" எனும் புதியதோர் பெருந்திட்டத்தை வகுத்து 1989-90 ஆண்டிலிருந்து தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தத் துவங்கியுள்ளது.

பொருளாதார மற்றும் சமூக நிலையைக் குறிக்கும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இம்மூன்று மாவட்டங்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மகளிருடைய பொருளாதார சமூக நிலையையும், அவர்தம் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் பொருட்டு அவர்களைச் சிறு குழுக்களாக இணைத்து அக்குழுவினரது வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்வதும், மாறிவரும் சமூக சூழ்நிலையைக் குறித்த விழிப்புணர்ச்சியை அவர்களுக்கு ஏற்படுத்தி அதற்கேற்பத் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள அவர்களது தன்னம்பிக்கையை வளரச் செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.4,592 இலட்சங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுவருமானம் ரூ.6,400 க்குக் குறைவாக உள்ள குடும்பத்தைச் சார்ந்த 18 முதல் 55 வயதிற்குட்பட்ட மகளிர் குழுக்களாக அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் சுமார் 15 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட தொழில் நடத்துவது தொடர்பாகக் கடனுதவி அளிக்கப்படுகிறது. உறுப்பினர்கள் குழு சேமிப்பு நிதிக்





செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.முத்துராமலிங்கம் என்றும் இயற்பெயர் கொண்ட கவியரசர் இளந்தேவன் அவர்களுக்குப் 'பாவேந்தர் விருது' 29.4.91 அன்று பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழாவில், மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களால் வழங்கப்பட்டது.

கவியரசர் இளந்தேவன் அவர்கள் ஏற்கெனவே பல பரிசுகளைப் பெற்றவர். 'புகாரில் ஒரு நாள்' என்னும் இவரது கவிதை இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பரிசு பெற்றது. 'கனவு மலர்கள்' என்னும் கவிதை நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுள்ளது.

மரபில் புதுமையைப் படைக்கும் சிறப்பாலும், கவியரங்கங்களில் பெரும் வெற்றியை ஈட்டும் திறத்தாலும் நாடறிந்த கவிஞராய் விளங்குபவர் கவியரசர் இளந்தேவன்.

பத்து நூல்கள் எழுதியுள்ள இவர், இலக்கியச் செல்வர், இலக்கிய வேந்தர், கவித்தென்றல், கவிமாமணி, கவியரசர், கவிஞர் திலகம் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் அறிந்த பிற மொழிகள் ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம்.

'தமிழரசு' இவரைப் பாராட்டி வாழ்த்துகிறது.

காகத்தங்களுடைய பங்குத் தொகையை ஒழுங்காகச் சேமிப்பு செய்யும் பழக்கத்திற்குக் கொண்டு வரப்படுகிறார்கள். இந்நிதி இக்குழுவினராலேயே நிர்வகிக்கப்படுவதோடு வசூலிக்கப்பட வேண்டிய வட்டி விகிதம், திரும்பச் செலுத்த வேண்டிய கால வரம்பு ஆகிய நிபந்தனைகள் குறித்து குழுக்களே முடிவெடுக்கும்.

குழுவின் உறுப்பினர்கள் தாங்களே தேவைகளை உணர்ந்து



நான்காம் அட்டை

பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழாவில் சிறப்பிக்கப்பட்ட பெருமக்கள்.


முறையாகச் செயல்பட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களான குழு சேமிப்பு நிதி மற்றும் முன்னேற்ற நிதி ஆகியவை உறுப்பினர்களுக்கு குறுகிய காலக் கடனுதவி பெற ஒரு மாற்று ஏற்பாடாக அமைவதோடு, குறிக்கோள்களை நிறைவேற்ற சீரிய முறையில் செயலாற்றவும் உதவும். குடும்பத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள மகளிர்க்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இத்திட்டம் பெருமளவில் மகளிர்க்கு நில ரீதியான உற்பத்தியைப் பெருக்குவதற்கும் மற்றும் நிலமற்ற பெண்களின் பொருளாதாரச் செயல்பாடுகளை உயர்த்துவதற்கும் உறுதுணையாக உள்ளது. நில ரீதியில் பொறியியல் வேளாண்மை, விவசாயம், தோட்டக்கலை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, எண்ணெய் வித்துக்கள், நில ரீதியல்லாத கறவைமாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத் தொழில்கள் போன்றவைகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனீட்டாளருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கும் நிதி உதவியைப் போன்று மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, இம்மகளிர் ஆண்டு நிகர வருமானமாக ரூ.3,600 முதல் ரூ.8,000 வரை பெற வாய்ப்பளிக்கிறது. ஆண்டுதோறும் பெரும்பான்மையான மகளிரின் சமூக மதிப்பை உயர்த்துவதில் அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மைராடா (Myrada) என்கின்ற புகழ்பெற்ற நிறுவனம் பெரும் பங்கை வகிக்கின்றது.

இத்திட்டத்தின்கீழ் 1989-90-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் ரூ.27.56 இலட்சங்கள் செலவில் 540 மகளிர் பயனடைந்துள்ளார்கள். மேலும் 1990-91-ஆம் ஆண்டில் ரூ.134.93 இலட்சங்கள் செலவில் 2,633 மகளிர் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டம் 1991-92-ஆம் ஆண்டு சேலம், தென்னார்க்காடு, மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1991-92-ஆம் ஆண்டில் 7,500 மகளிர் ரூ.488.21 இலட்சங்கள் செலவில் பயனடைவார்கள். ●

# படமும் செய்தியும்




கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் கலந்து கொண்டு பட்டங்கள் வழங்கினார் (3.5.91).

மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் நீலகிரி கோடை விழாவினைத் தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சியினைப் பார்வையிட்டார். நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் செல்வி.லீனா நாயர், இ.ஆ.ப. மற்றும் செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி.ஜெயந்தி, இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர் (4.5.91).








பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி, மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள் எழுதிய ''காவிய காலம்'' என்ற நூலினை வெளியிட்டார். முதல் பிரதியை ஆளுநரின் ஆலோசகர் திரு.வே.கார்த்திகேயன் அவர்கள் பெற்றுக் கொண்டார் (22.4.91).

மதுரையில் சித்திரைப் பொருட்காட்சியை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க.கணேசன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ராஜேஷ் கக்கர், இ.ஆ.ப. அவர்கள் திறந்து வைத்தார் (21.4.91).





# பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழா



**பா**வேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழா, ஏப்ரல் திங்கள் 28,29 இரு நாள்கள் சென்னை கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடந்தது. 28.4.91 அன்று காலை பாவேந்தரின் ஒளிப்படக் காட்சி திறந்து வைக்கப்பட்டது.

பேராசிரியர் சாலமன் பாப்பையா தலைமையில் வழக்காடு மன்றம் நடந்தது. இதில் டாக்டர்பா.வளனரசு டாக்டர் சக்தி பெருமாள், டாக்டர் சொல்விளங்கும் பெருமாள், வழக்குரைஞர் த. இராமலிங்கம் ஆகியோர் பேசினர்.

பிற்பகல், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. திரு.கே.மலைச்சாமி இ.ஆ.ப., திரு. சு. ஸ்ரீபால் இ.கா.ப., திரு. எஸ். இராமநாதன் இ.கா.ப., திரு. கே. அலாவுதீன் இ.ஆ.ப., திரு. க. கணேசன் இ.ஆ.ப., திரு. டி. இராதாகிருஷ்ணன் இ.கா.ப., திரு. இரா. கிருஸ்துதாஸ் காந்தி இ.ஆ.ப., திரு. கே. சண்முகநாதன் த.கா.ப., ஆகியோர் பேசினர்.

மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க. கணேசன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

மேதகு ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார். பாவேந்தர் பாரதிதாசன் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்களை வெளியிட்டார். ஆராய்ச்சியாளர்கள், நூலாசிரியர்கள், கவிதைப் போட்டி

பாரதிதாசன் பல்கலைக்கழகம் தயாரித்த சிறப்புமலர் வெளியீடு.





யில் தேர்ந்தெடுக்கப்பட்ட நூறு கவிஞர்கள் ஆகியோரைப் பாராட்டிப் பரிசுகள் வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிர மணியம், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சே. சாதிக் ஆகியோர் பேசினர். செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. இரா.நடேசன் நன்றி கூறினார்.

பிறகு, பாவேந்தரின் 'தேனருவி' மெல்லிசை - நடன நிகழ்ச்சி நடந்தது.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சி**

29.4.91 அன்று காலை உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் கவி யரங்கம் நடந்தது. கவிஞர் மீ. இராசேந்திரன், கவிஞர் மரியதாசு, கவிஞர் இளந்தேவன், கவிஞர் ஆண்டாள் பிரியதரிசினி, டாக்டர் பெரு. மதியழகன், டாக்டர் இராச லட்சுமி இராதாகிருஷ்ணன், கவிஞர் ரவிபாரதி ஆகியோர் பங்கேற்றனர்.

பிற்பகல், கருத்தரங்கம் நடை பெற்றது. முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமை வகித்தார். டாக்டர் சிலம்பொலி செல்லப்பன், டாக்டர் இளவரசு, கவிஞர் மு. மேத்தா, டாக்டர் ஆறு. அழகப்பன், டாக்டர் தி. முருகு ரத்தினம், டாக்டர் சோ. ந. கந்த சாமி, டாக்டர் அ. மணவாளன் ஆகியோர் பேசினர்.

அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது. விழாவிற்கு வந்திருந்தவர் களைச் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசுகையில், ''பாவேந்தர் பாரதிதாசன் நூற் றாண்டு விழா தமிழ்நாட்டில் ஓராண்டு விழாவாகக் கொண் டாடப்பட்டது. பாவேந்தர் விருது பெறும் 23 கவிஞர்களுக்கு ரூபாய் 2,30,000 மதிப்பிற்கான பொற் கிழி வழங்கப்படுகிறது. பாவேந்தர் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப் பட்டு, அவர் குடும்பத்தினருக்கு ரூ.8 இலட்சம் நிதி உதவி அளிக்கப் பட்டது. பாரதிதாசன் மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகங் களின் நூல்கள் வெளியிடப்பட்டன. பாவேந்தர் பாரதிதாசன் நூற் றாண்டு விழாவையொட்டி 100 கவிஞர்களுக்கு ரூ.500 வீதம் பரிசும், சான்றிதழும் வழங்கப் பட்டது'' என்று கூறினார்.

பாவேந்தரின் புதல்வர் திரு. மன்னர் மன்னன் அவர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகையில், பாவேந்தரின் நூல்கள் மக்களைச் சென்றடைய வேண்டு மென்ற கோரிக்கை பூர்த்தி செய்யப் பட்டதாகவும், பாவேந்தரின் நூற் றாண்டு விழாவினையொட்டி பல நூற்றுக்கணக்கான கவிஞர்களைப் பாராட்டுவது மகிழ்ச்சிக்குரியது என்றும் கூறினார்.

விழாவில் கலந்து கொண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ச.முத்துக் குமரன் அவர்கள் பேசுகையில், ''பல்கலைக் கழகம் என்ற சொல் சென்ற நூற்றாண்டில் இல்லை. இந்தச் சொற்றொடரைத் தமிழில் தவழ விட்டவர் பாவேந்தர் பாரதி தாசன். இந்தச் சொற்றொடர் வழக்கத்திற்கு வந்து அரை நூற் றாண்டுதான் ஆகிறது. பாவேந்தர் ஒரு இயற்றமிழ்க் கவிஞர்; இசைத் தமிழ்க் கவிஞர்; நாடகக் கவிஞர். தமிழ் இசை மறுமலர்ச்சிக்குப் பாவேந்தர் செய்த தொண்டு பெரும் மதிப்பிற்குரியது. கட்டாயக் கல்வி வேண்டுமென்பதே கவிஞர் கொள்கை'' என்றார்.

விழாவிற்குத் தலைமையேற்று ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் பேசுகை யில், ''பாவேந்தர் முற்போக்கான கருத்துக்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார். பாவேந்தர் படைப்புகளிலிருந்து நாம் அற்புதமான சொற்களைக் கையாள முடிகிறது'' என்று கூறினார்.

பின்னர் மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பாவேந்தர் உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

முன்னதாக, பாவேந்தர் பாரதி தாசன் நூற்றாண்டு விழாவை யொட்டி பாரதிதாசன் பல்கலைக் கழகம் தயாரித்த சிறப்பு மலரை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட, ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. ராமச்சந்திரன் அவர்கள் முதல் இதழைப் பெற்றுக் கொண்டார். பாவேந்தரோடு பழகி, அவர் வழி வந்த 5 தலைசிறந்த தமிழறிஞர்கள் பாராட்டப்பட்டு, ஆளுநர் அவர் களால் சிறப்புச் செய்யப்பட்டனர். ஓவியக்கலை வல்லுநர்கள் 6 பேருக்குக் 'கலைச்செம்மல்' விருதுகளும், ஓவிய இலக்கியத் திறனாய்வாளர் ஒருவருக்குக் ''கலைத் திறனாய் வாளர்'' விருதும், 23 கவிஞர் களுக்குப் பாவேந்தர் விருதும் ஆளுநர் அவர்களால் வழங்கப் பட்டன. (பாவேந்தர் விருது கவிஞர் ஒருவருக்கு ரூ.10,000 வீதம் 23 கவிஞர்களுக்கு ரூ.2,30,000 மதிப் பிற்கான பொற்கிழி வழங்கப் பட்டது).

விழாவில் பாவேந்தரின் மகன் திரு. மன்னர் மன்னன் மற்றும் பாவேந்தரின் இரு மகள்களுக்கு ஆளுநர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.க.கணேசன் இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

பிறகு பாவேந்தரின் 'புரட்சிக் கவி' காவியக் கூத்து நடந்தது.

**- நமது செய்தியாளர்.**

மனிதனது நியாயமான போராட்டக் குணத்தின் உருவகமாகவும், சமுதாயத்தில் ஆதரவற்ற, அழுத்தப்பட்ட, அநீதியிழைக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காகவும் அயராது உழைத்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் என்னை ஈடுபடுத்திக் கொள்வதிலும், இந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

'பேனா முனையே வாள் முனையை விட
வலிமை வாய்ந்தது'

என்பது பழமொழி. பல நூற்றாண்டுகளாகவே இந்த உண்மை உலக சரித்திரத்தில் நிரூபணமாகி இருக்கிறது.

சில கவிஞர்கள் தோன்றுவார்கள், மறைந்து போவார்கள். ஆனால் பாரதிதாசன் நமது சமூகத்தின் சீரழிவினை எதிர்க்கும் 'வீரராக' நமக்கு மத்தியில் உலவியவர். மூடநம்பிக்கை, பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போர்க்குரல் எழுப்பிய எழுச்சிக் கவி அவர். மேலும் மதவாதம், சமூகத்தின் உதவாத மரபுகள் ஆகியவற்றின் மீது படிந்திருந்த அழுத்தமான தூசியைத் துடைத்தெறிய கவிக்குரல் எழுப்பியவர் அவர். உழைப்பின் வெற்றியை உலகுக்குக் காட்டுவதற்காக உரத்த குரலில் அதைக் கவிதையாக்கியவரும் அவரே.




'செய்யும் தொழிலே தெய்வம்;
தொழிலாளர்களே வணங்க வேண்டிய தெய்வங்கள்'

என்பது பாரதிதாசன் கருத்து. இயற்கை தமிழகத்திற்கு வழங்கிய கொடை பாவேந்தன் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்.

*1908*-ஆம் ஆண்டு மகாகவி பாரதியாரைச் சந்திக்கும் மகத்தான வாய்ப்பு கனகசுப்புரத்தினமாம் பாரதிதாசனுக்குக் கிடைத்தது. மற்றவர்களைப் போலவே பாரதியின் அறிவாற்றல், ஆளுமை, மற்றும் தன்னடக்கத்தால் இலக்கிய மாணவன் பாரதிதாசனும் ஈர்க்கப்பட்டார். பாரதியாரின் விருப்பப்படி இளங்கவியான பாரதிதாசன் தனது முதல் கவிதையைப் பாடி மகிழ்ந்தார். பிறகு பாரதியின் ஆதரவோடும், அரவணைப்போடும் அவரது புகழ்பெற்ற வாழ்வு புலரத் தொடங்கியது.

அதற்கு நன்றிக் கடனாகவும், பாரதியின் மேல் உள்ள ஈர்ப்பினாலும் அதுவரை கனகசுப்புரத்தினமாக இருந்த அவர் பிற்காலத்தில் இறவாப் புகழையும், பெருமைகளையும் தனக்கு வாங்கித் தந்த 'பாரதிதாசன்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார்.

இந்தியத் திருநாட்டின் மீது தீராக் காதலும், நாட்டுப் பற்றும் கொண்ட பாரதிதாசன், இந்திய விடுதலைக்கான புரட்சி இயக்கத் தலைவர்களோடு தோழமை பூண்டு தன்னுடைய உணர்ச்சிமிகு பாடல்களுக்கு வேண்டிய உத்வேகத்தைப் பெற்றார்.

# எழுச்சிக் கவிஞர் பாரதிதாசன்

**மேதகு ஆளுநர்**
**திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள்**

அடக்குமுறைக்காலத்தில் 'இந்தியா' பத்திரிகை நடத்துவதற்குப் பாரதியாருக்குரகசியமாக உதவியதோடு, நாட்டுப் பற்று மற்றும் உணர்ச்சி மேலிடும் கட்டுரைகள், கவிதைகள் பலவற்றை பாரதிதாசன் எழுதினார். மிகப் பெரிய சமுதாயச் சீர்திருத்த வாதி தந்தை பெரியாரை அவர் 1929-ஆம் ஆண்டு, சந்தித்த நிகழ்ச்சி அவரது வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது. பிறகு தந்தை பெரியாரின் 'குடியரசு' இதழுக்குக் கட்டுரைகள், கவிதைகள் படைக்கும் பணியினை வழக்கமாக்கிக் கொண்டார். அது மட்டுமல்ல, அவருடைய படைப்பிலே ஒரு மாற்றம்– அவருடைய எழுதுகோல் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை எதிர்க்கிற போர் ஆயுதமாக மாறியது.

சமுதாயத்தில் அப்போது நடைமுறையில் ஏழை எளியவர்கள், ஏதுமறியாதவர்கள், வாழ்வில் நம்பிக்கையிழந்த நலிந்தோர் ஆகியோர்களுக்கு எதிராக இருந்த முதலாளித்துவ அமைப்பை

யும், அதன் குறைபாடுகளையும், அநீதிகளையும் கடுமையாகச் சாடியவர் பாரதிதாசன். அறியாமை யின் திரையைக் கிழித்து, உரிமைக்குக் குரல் கொடுப்பதற்காக மக்கள் ஆமையைப் போல் அடங்கிக் கிடப்பதை நீக்க, ஆணையும் பெண்ணை யும் விழிப்படையச் செய்ய சிம்புட் பறவையே சிறகை விரித்தெழு! - என உயிர்த் தமிழில் உணர்ச்சி பூர்வமாகத் தமது பாடல் வரிகளால் உரிமைக்குரல் எழுப்பினார்.

போராட்டங்களிலேயே மகத்துவமிக்க சமுதாயப் புரட்சி தமிழகத்தில் ஏற்பட வேண்டும் என வேட்கை கொண்டவர் பாரதிதாசன். சமுதாய மாற்றத்தை உண்டாக்கக்கூடிய வலிமை சமூகப் புரட்சிக்கு உண்டு என்கிற தொலைநோக்குப் பார்வை அவருக்கு அன்றே இருந்தது. அப் போராட்டத்தின் விளைவாகக் கிடைக்கிற உயர்வு களின் மூலம் இயல்பாகவே தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகையும், நெறியான சமத்துவச் சமுதாயம் அமைய வாய்ப் பும் உருவாகும், என்பது பாரதிதாசன் நம்பிக்கை. அப்படிப்பட்ட சமுதாயத்தில் தான் மொழி, இலக்கியம், பண்பாடு வளர வாய்ப்புகள் உண்டு என்ற கருத்துக்குச் சொந்தக்காரர் பாரதிதாசன்.

அவரது கவிதைகள் சமூக மேம்பாட்டுக்கான செய்திகளைத் தாங்கி நிற்பதையே தமது நோக்க மாகக் கொண்டவை. 'அழகின் சிரிப்பு' கவிதை யில் அவர் இயற்கையைப் போற்றி வணங்கும் செயல் வெறும் கவிக் கற்பனையல்ல. நீல வானத் தின் வனப்புகளைப் பாடும் அதே நேரத்தில் உலக அமைப்பில் சாதி மற்றும் மத வேறுபாடுகளால் மதிப்பிழந்து போன மனிதர்களால் உருவாக்கப் பட்ட கீழ்மையைப் பற்றி அவர் வேதனைப்படு கிறார். தேசிய மறுமலர்ச்சி சார்ந்த விடுதலை வேட்கை கொண்டவரான அவர் நாட்டின் எல்லை களைக் கடந்து இந்த உலகத்தையே ஒரே இனமாக, மானிட இனமாகக்கருதிய அற்புதக் கவிஞர்.

காந்தி அடிகளின் கொள்கைகளில் பற்றுள்ள பாரதிதாசன் அவர் தொடக்கிய அகிம்சை வழியான சுதந்திரப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். 'எங்கே சுதந்திரம் குடியிருக்கிறதோ, அதுவே எனது நாடு' என்ற பெஞ்சமின் பிராங்ளின் கருத்தினைப்போல, சுதந்திரம் பற்றிய இதே சிந் தனையுடன் இருந்தவர் பாவேந்தர்.

பெண்களின் விடுதலைக்காகப் போராடிய பெருமைமிக்க கவி அவர். அநாகரிகமான மனி தாபிமானமற்ற சமூகக் கொடுமைகளான குழந்தை மணம், கைம்மை மற்றும் வரதட்சிணைக் கொடுமை யின் ஆதிக்கம் நிறைந்த காலம் அவர் வாழ்ந்த காலம். எதிர்ப்புகளுக்கு அஞ்சாது அவற்றைத் தீவிரத்தோடு சாடியவர் அவர். சமூகப் பார்வை யுடன் கூடிய கூர்த்த அறிவாதிக்கம் மிக்க அவருக்குப் பெண்கள் புழுவினைப் போல நடத்தப்படுவது, பொறுக்க முடியவில்லை. எனவே சமூகத்தில் விதவைகளுக்கு மரியாதை பெறுவதற்கும் விதவை மறுமணம் வேண்டும் என்பதற்கும் போர்ப் பரணி பாடினார். பாரதிதாசன் ஏற்றி வைத்த எரி சுடரை அணையாமல் பாதுகாப்பது நமது கடமையாகும். அதுதான் சமூகத்தில் புரையோடி இருக்கும் வரதட்சிணை என்ற நச்சினை அழிக்க முடியும். இந்தக் கொடுமைகளையெல்லாம் ஒழித்துக் கட்ட நாம் சட்டங்களை இயற்றியுள்ளோம். சட்டங்கள் மட்டுமே அந்தச் சாதனைகளைச் செய்துவிட முடியாது. இந்த மாற்றங்களைச் செய்கிற மனப் பக்குவம் மனிதர்களின் மனதிலிருந்து, உள்ளத் திலிருந்து உருவாக வேண்டும். ஆணுக்கு இணை யாகப் பெண் மதிக்கப்படாவிட்டால், சமுதாயத் தில் நிலவும் சுதந்திரத்திற்கு அர்த்தம் இல்லை.

தமது படைப்பான 'பாண்டியன் பரிசு' மூலம் பாரதிதாசன் சமத்துவச் சமுதாயத்தை நாட்டில் அமைக்கக்கனவு கண்டார். அவரது கனவு நன வாகிற வகையில் நாட்டில் முன்னேற்றம் நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவு ஒன்று கண்டறிவோம்'

என்று சொல்லியவர் பாரதிதாசன்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் உலகு அடையப் போகும் துன்பத்தையும் அதன் விளை வாக ஏற்படப் போகும் பொருளாதாரச் சிக்கல் மற்றும் குழப்பங்களையும் அவர் தொலைநோக்குப் பார்வையோடு பார்த்தறிந்தார். ஆனால் எந்தக் கவிஞருடைய சிந்தனையிலும் இடம் பெறாத குடும்பக் கட்டுப்பாடு, குழந்தைகள் பிறப்புத்

## சென்னையில் குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள்

சென்னை குடிசைவாழ் மக் களுக்கு ரூ.5.88 கோடி செலவில் 1472, மாடிக் குடியிருப்புக்களைக் கட்டித்தர அரசு அனுமதி அளித் துள்ளது.

இந்த மாடிக் குடியிருப்புக்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னையில் பிஷப் லேண்ட், வடக்கு கிரியப்பா சாலை, ராஜீவ்காந்தி நகர், கோரி மேடு அரிய இடங்களில் கட்டப் படும்.

இந்தத் திட்டத்திற்கான மொத்த செலவில் ரூ.5 கோடி 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து கடனாகவும், மீதித்தொகை மாநில அரசின் மானிய மாகவும் பெறப்படும்.

# பாரதிதாசனைப் போற்றுவோம்



**— கவிஞர் மலையமான்**

யார்இந்தப் பாரதி தாசன் என்றால்
ஆசான் மேல்கொண்ட மேன்மை பக்தியால்
பேரையே மாற்றிய கொள்கையின் குன்று;
தாய்மொழித் தமிழைத் தன்உயிர் என்ற
வாய்மை மொழியினன்; வள்ளல் நெஞ்சினன்;
ஒய்ந்து கிடந்த உணர்வைத் தூண்டி
மனவயல் பாய்ந்து வெள்ளமாய் ஓங்கினான்;
சாதி மதத்தின் சமூகத் தடைகளைப்
பாட்டுச் சம்மட்டியால் சமநிலைப் படுத்தப்
பாதி நூற்றாண்டு பெரும்பணி ஆற்றினான்;
வாடிக் கிடந்த நாடகத் துறைக்குச்
சிந்தனை ஊற்றின் செந்தமிழ் நீர்ஊற்றி
மேடையில் ஏற்றி மாலை சூட்டினான்;
நலிந்து மரணப் படுக்கையில் கிடந்த
தமிழிசை மங்கையின் நாடியைப் பிடித்து
வலிமைப் புத்தக ஊசியைப் போட்டான்;
உழைத்துச் சோர்ந்த உண்மை உடம்புகளை
உள்ள மஞ்சத்தில் படுக்க வைத்தே
வார்த்தை விசிறியால் களைப்பு மாற்றினான்;
பெண்மை பிழைக்க, வளரத், தழைக்க,
நன்மை வழிகள் பலப்பல சொன்னான்;
அழகின் சிரிப்பைத் தாளில் வடித்து
மொழித்தேன் குழைத்து ஊட்டிய மேலோன்;
கடுஞ்சொல் மருந்தைச் சமூகத்தின் வாயில்
நெடுநாள் ஊற்றினான் என்பதால், இவனைக்
கொடியவன் என்றார்; உடலில் பருத்துக்
கிடந்த கட்டியை அறுத்த கத்திஇவன்;
நூற்றாண்டு கண்டான், மானிடம் வாழ்த்த;
ஆற்றல் மறவனை அனைவரும் போற்றுவோம்!

*(பாட்னா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கவிதையரங்கில் படிக்கப்பட்ட கவிதை)*

தடுப்பு போன்ற நவீன விஞ்ஞான கருத்துக்களை வலியுறுத்திய முதல் தமிழ்க் கவிஞரான பாரதிதாசன் சிந்தனைச் சிறப்பு அவரது ஆழமான அறிவின் முதிர்ச்சியேயாகும்.

எல்லாவற்றையும்விட தாய்மொழியான தமிழ் மீது அவர் கொண்டிருந்த தீவிரக் காதல் அளவிட முடியாதது. அனைத்து மொழி இலக்கியங்களை யும் ஒப்பிடும்போது அவருக்குத் தமிழ் அமிழ்த மாகும். மற்ற மொழிகளிலிருந்து வேறுபட்டுச்சிறந் தோங்கும் தமிழையும் அதன் தனித்தன்மையையும் பாதுகாக்க அவர் அயராது உழைத்தார்.

இப்படிப்பட்ட பன்முக மாட்சி பெற்ற இலக்கிய வாதியும், சமூகச் சீர்திருத்தவாதியுமான பாவேந்தரின் நினைவைப் போற்றுகிற வகையில், அவரது பெயரில் ஒரு பல்கலைக் கழகம் திருச்சியில் நிறுவப்பட்டு நடைபெற்று வருகிறது. பாவேந்தர் பாரதிதாசன் விருதுகளை வழங்கி, அவரோடு பழகிய தமிழறிஞர்களை அரசு கௌரவித்து வருகிறது. இந்த நூற்றாண்டு விழா ஆண்டில் பாரதிதாசன் மரபு வழிவந்த 46 தமிழ்க் கவிஞர் களுக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வகையில் ரூ.4.60 இலட்சம் பொற்கிழி வழங்கு வதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.


பாரதிதாசனாரின் இலக்கியப் படைப்புகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடவும், அவரது பாடல்களை ஒலி நாடாக்களில் இசை யோடு பதிவு செய்து பரப்பவும் தமிழக அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

நேற்றைய தினம் பாரதிதாசனின் படைப்பு களின் மீது ஆராய்ச்சி செய்த மற்றும் புத்தகங்கள் எழுதிய 28 தமிழறிஞர்கள் பெருமையோடு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் இது தொடர்பாகக் கவிதைப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற 100 கவிஞர்களுக்குப் பாராட்டும், சன்மானப் பரிசும் வழங்கப்பட்டு இருக்கிறது. இன்று கவிஞர் பாரதிதாசனோடு பழகிய அவர் வழிவந்த 5 தலைசிறந்த தமிழறிஞர்கள் பாராட்டப் படுகிறார்கள். பாரதிதாசனின் கருத்துக்களையும், அவரது கொள்கைகளையும் பின்பற்றி முழுமை யான சமூக மறுமலர்ச்சிக்கு உதவுவதே நாம் அவருக்கு செய்யும் சிறந்த மரியாதை என நான் கருதுகிறேன்.

எனவே, இந்த நூற்றாண்டு நிறைவு நாளில், அவர் காட்டிவிட்டுப் போயிருக்கிற கடமைகளை விரைந்து நிறைவேற்றவும், அதன் மூலம் அவர் கனவு கண்ட சமத்துவம் மற்றும் அனைவர்க்கும் சமவாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நல்ல சமூக அமைப்பை உருவாக்கவும் உறுதிமொழி ஏற்றுக் கொள்வோம்.

நன்றி - வணக்கம்.

**(பாவேந்தர் பாரதிதாசன் நூற் றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை (29.4.91)**



# பத்திரிகையாளர் பாவேந்தர்

- பட்டுக்கோட்டை இராசேந்திரன்

**பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் மிகச் சிறந்த பத்திரிகையாளர். அவர் நடத்திய 'குயில்' வார ஏடே அதற்குத் தக்க சான்றாகும். 'குயில்' இதழில் இடம்பெற்றுள்ள பகுதிகள், அவை வெளிவந்த விதம் என்பன போன்ற சுவையான தகவல்களை இக்கட்டுரை விவரிக்கிறது.**

ஒரு பத்திரிகையானது பல்லாண்டுக் காலமாக நடத்தப் படுகின்ற பெருமை உடையதாக இருக்கக்கூடும்; ஆனால், ஒரே கொள்கைக் கோட்டில் இத்தனை ஆண்டுக் காலமும் நடந்தது, அல்லது நடந்து வருகிறது என்ற பெருமை பெற்ற தனியார் ஏடுகள் தமிழகத்தில் மிகச் சிலவே; அவற்றை விரல் விட்டு எண்ணி விடலாம்.

பத்திரிகை என்பது, மிகச் சரியான ஒரு பெண்ணுக்குரிய பத்தினித் தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்ற அவாமிகக் கொண்டிருந்தார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்; அந்தக் காரணத்தாலேதான், பத்திரிகை பற்றி தனது எழுத்தோவியத்திலே அவர்-

''காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்...''

- என்றெல்லாம் மிகச் சிறப்பாகச் சொல்லிவிட்டு

''- பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்தபத் திரிகைப் பெண்ணே!''

- என்று பத்திரிகையைப் பெண் என்று நயம்படக் குறிப்பிட்டார்.

சர்க்கஸில் கம்பிமேல் நடப்பது போல, ஒரு கொள்கை வழியிலேயே ஒரு பத்திரிகையை நடத்துவது தனியார் எவருக்கும் பெரும் தொல்லையாக இருக்கக்கூடும்; தடைக் கற்கள் பலவற்றைத் தாண்டியாக வேண்டிய நிலைமையும் நேரிடக் கூடும்; எனினும், தடந்தோள் உண்டென்ற துணிவோடு, தலைதாழாது நடப்பதே ஒரு சிறந்த பத்திரிகையாளருக்குரிய அடையாளமாக அவரால் ஆணித்தரமாகக் கூறப்பட்டது; கருதப்பட்டது.

ஆம்; அவர் தன்னுடைய 'குயில்' ஏட்டை அப்படித்தான் நடத்தி வந்தார்!

தனக்கு எதுவெல்லாம் 'சரி' என்று படுகிறதோ, அதையெல்லாம் 'குயில்' ஏடு மூலம் வெளியிட அவர் ஒரு போதும் தயங்கியதே இல்லை.

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தின் பின் சரியாகவோ, தவறாகவோ-தான் ஏற்ற கொள்கையிலிருந்து அவர் தவறியதில்லை.

1946-47-இல், புதுக்கோட்டையிலிருந்து 'குயில்' ஏடுகள் மூன்றே மூன்று தான் முழுச்சுவை மிக்கதாக வெளியிடப்பட்டன. பிறகு, புதுக்கோட்டையிலிருந்து 1948 வரை 11 'குயில்' ஏடுகள் பாகுநிகர் பாவேந்தரின் கவிச்சுவை தெறிப்பதாக வெளி வந்தன. அவையாவும் மாதம் ஒரு முறை என்ற அளவில் மலர்ந்தவை.

அதன் பிறகு- 1.6.1958-ஆம் ஆண்டிலிருந்துதான், 'குயில்' ஏடு கிழமை இதழாக, அதாவது வார ஏடாகப் புதுவையிலிருந்து வெளி வரத் தொடங்கியது. 7.2.1961 வரைதான் அந்தப் பயணமும் தடையில்லாதிருந்தது. பிறகு பல்வேறு காரணங்களினால் நிறுத்தப்பட்டு, 15.4.1962 முதல் மாதம் இருமுறை இதழாகச் சரியாக எட்டே இதழ்கள்

### முதல் இடம் - புத்தக சாலைக்கே!

**வீட்டிற்கோர் புத்தக சாலை வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலை மாறி, புத்தக சாலைக்கு அந்த இடம் தரப்பட வேண்டும். உணவு, உடை அடிப்படைத் தேவை - அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்.**

**—பேரறிஞர் அண்ணா**



வரை நடத்தி பிறகு நிறுத்தப்பட்டு விட்டது.

இப்படி, அந்த அருமையான 'குயில்' ஏடு, செத்துச் செத்துப் பிழைத்திடவும் பிறகு, அடியோடு பறக்கவே முடியாமல் அடங்கிவிடவும் காரணம் வேறெதுவும் இல்லை; கொண்ட கொள்கையிலிருந்து நழுவ.. தன் மனத்திற்குப்பட்ட.. எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்.. தமிழெங்கள் உயிருக்கு நேர்.. என்ற புரட்சிக் கவிஞரின் அழுத்தமான கொள்கைகள்தான் - ஆணித்தரமான எழுத்துக்கள்தான் காரணம்.

- 'குயில் மீண்டும் வெளிவருகிறது. தமிழர்கள் ஆதரிக்க! குயில், பாட்டும் உரைநடையுமாக வெளிவரும், குயில், தமிழின் அருமை பெருமைகளைக் கூறும். தமிழ்மேல் பகைவர் வீசிய-வீசுகின்ற குப்பை கட்குப் புயலாகும். அதன் உண்மை அழகுக்கு விளக்காகும்.

- குயில், தமிழறம் தமிழொழுக்கம் முதலியவை இன்னவையென்றும் சாதி என்ற அழுக்கற்றவர் தமிழர் என்றும் பாடும்.

- குயில், எல்லாம் உடையவர் தமிழர் என்றும், அவர்பால் இன்று இல்லாதது ஒற்றுமை உணர்ச்சி ஒன்றே என்றும்.

- குயில், அரசியல் சோலையில் புகும். மக்களியல் மாந்தளிர் உண்ணும். பொருளியற் பண்பாடும்.

இவ்வாறெல்லாம் 1.6.1958 குயில்' ஏட்டில் அதனுடைய அலது தன்னுடைய கொள்கை இன்னதென்னப் பாவேந்தரால் விளக்கிச் சொல்லப்பட்டது.

'குயில்' வெளியீட்டகம் 'குயிலகம்' என்று குறிப்பிடப்பட்டது. அதன் நிர்வாகியான புரட்சிக் கவிஞரின் மாப்பிள்ளை 'அமைச்சர்' என்று குறிப்பிட்டார். ஏடுகளில் மலர் - இதழ் என்று போடுவார்கள் அல்லவா? குயிலைப் பொறுத்த வரை அந்த முறையானது 'குயில்:!' - 'இசை:!' என்ற வகையில் குறிப்பிடப்பட்டது.

12 பக்கமிருந்த குயிலில், அப்போது முன்பக்க அட்டையில் புரட்சிக் கவிஞரின் கவிதைதான் இடம் பெறும். அதுவும் அப்போதைய அரசியல் நிலவரம் பற்றியதாகவே இருக்கும். மற்றபடி பெரும்பாலான பக்கங்களிலும் அவரது கவிதையே அணி செய்யும். இடையிடையே உரைநடைக் கட்டுரைகளும், ஏன்-சிறுகதையும்கூட இடம் பெற்றன.

'குயில்' என்ற, ஏட்டின் முன் பக்கப் பெயரை ஒட்டி, 'கிழமை இதழ்- ஆசிரியர் பாரதிதாசன் - விலை 13 காசுகள், புதுச்சேரி, 8.9.59 செவ்வாய்' என்ற வகை அறிவிப்புகள் இருக்கும்.


பாவேந்தரை அவ்வப்போது வெளி ஊரிலிருந்தெல்லாம் பலரும் பார்த்துப் பேசி மகிழவந்து போவதுண்டு. அப்படி வருகிறவர்களில் சிலர், அவருக்குப் பிடித்தாற்போலப் பேச வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு வருவார்கள். அவர்கள் முன், பாவேந்தர், எடுப்பார் கைப் பிள்ளையாகிவிடுவதைப் பல சந்தர்ப்பங்களில் நான் நேரில் பார்த்தவன். அதன் பிரதிபலிப்பு, அந்த வாரக் குயிலில் பாவேந்தரின் கைவண்ணமாகப் பளிச்சிடும்.

சில முரட்டுத்தனமான அரசியல் கட்டுரைகளால், அனல் பறக்கும் அவருடைய சில கவிதைகளால்தான் அப்போதைய 'குயில்' ஏடு விற்பனை வீழ்ச்சியடைந்தது. இது பாவேந்தருக்கே தெரியும்; ஆனாலும், அதற்காகத் தான் கொண்ட கொள்கையில் அவர் பின்வாங்க முன்வரவே இல்லை. அந்தக் கட்டுரையைப் பாதியில் நிறுத்தவும் இல்லை. இப்படிச் சில வகைகளில், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பதில் அவர் விதிவிலக்கு!

நான் துணையாசிரியராகப் பணியாற்றி வந்த 'குயில்' ஏட்டில், பாவேந்தர் மட்டுமல்ல; மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர், பாவலர் பாலசுந்தரம், புலவர் மு. இராமநாதன், கவிஞர்கள் மா.முத்து, தமிழ்க்கோவன், ஆ.அழகன், சித்தன், புலவர் பழனி வேலன், உ.வே.பாலு, கு.சிவமணி, கா.வேழவேந்தன், துரைமாணிக்கம், வை.மாணிக்கசாமி, தமிழவேள், தகட்டூர் மா. இராமலிங்கம், மாரி, நல்லியக்கோடன், சேலம் பூங்குன்றன், சி.எ.முகிலன், தஞ்சை தமிழ் மன்னன், கடலூர் வீ.கு.சிவா, முருகு சுந்தரம், தமிழன்பன், புதுவை வ. பொன்னம்பலம், நெற்குப்பை பனை சண்முகம், வ.சக்காராம், சென்னை சுந்தரவடிவேலு, சைதை ஓடையான், தமிழ்த்துளி, ஈரோடு குமணன், புலவர் தொல்காப்பியன், வே.தில்லைநாயகம் போன்றவர்களெல்லாம் அப்போது தொடர்ந்து எழுதி வந்தார்கள்.

பாவேந்தர், தானெழுதும் கவிதைகளில் எல்லாம் தனது பெயரைப் போட்டுக் கொள்ளுவதில்லை. 'நினைவுறுத்துகிறோம்' என்ற தலைப்பில் 'இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும், ஆசிரியரால் எழுதப்படுபவையே' என்றோர் அறிவிப்பு அமைச்சர் பெயரால் வெளியிடப்படும்; அவ்வளவே!

'குயில்' ஏட்டில், நாட்டுப் பிரச்சினை பற்றித்தலையங்கம் பாவேந்த



● **கல்வியறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**

**—தந்தை பெரியார்**

ராலேயே அவ்வப்போது எழுதப் படும். அதுமட்டுமல்ல; சிறுகதை, நாடகம், வந்தவர் மொழியா? செந் தமிழ்ச் செல்வமா?, அறிவியல் குறிப்புகள், ஆய்வுக் கட்டுரை, 'சொல் லாய்வு, செய்திகள், வள்ளுவர் உள்ளம் என்ற திருக்குறள் விளக்கம், பாட்டுக்கு இலக்கணம், கேட்டலும் கிளத்தலும் (கேள்வி-பதில்) போன்ற பல எழுத் தோவியங்கள் அவரால் தொடர்ந்து எழுதப்பட்டன.

அப்போது பாவேந்தரால் எழுதப் பட்ட 'படம் இயக்கியின் தங்கை' சிறு கதைபற்றி அந்நாளில் பலர் புகழ்ந்து எழுதியதுண்டு.

புதுவை அரசியல் நிலவரங்களும் பாவேந்தரால் விட்டுவைக்கப்பட வில்லை; ஒருமுறை புதுவை அரசு மகப்பேறு மருத்துவப்பிரிவைக் கண் டித்து எழுதிவிட்டு, அதற்கான விசா ரணைக்காக மாப்பிள்ளையே போய் வர நேர்ந்தது.

'இலக்கியப் போட்டி' என்றொரு பகுதி. போட்டி என்றால் எப்படித் தெரியுமோ? இதோ உதாரணத்திற்கு ஒன்று-

'இட்ட அடி நோவ எடுத்தஅடி
கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய...

- பாடலின் அடுத்த இரண்டு அடிகளைக் கம்பர் பாடியதாகச் சொல்லப்படுகிறது அல்லவா? அந்த இரண்டு அடிகளையும் அம்பிகா பதியே பாடினால் என்ன பாடி யிருப்பான்? எழுதியனுப்புக!

இப்படித்தான் போட்டிகள் அமைந் திருக்கும். சுற்றுப்பயணம் ஏது மின்றிப் புதுவையில் இருக்கும் காலத்தில், நாள் தவறாமல் குயில கத்திற்கு வந்து விடுவார் பாவேந்தர். தானெழுதியவற்றின் புரூப்களைத் தானே படித்துச் சரிபார்ப்பது அவர் வழக்கம்.

'குயில்' இதழின் கடைசிப் பக் கத்தின் அடியில் 'இம்பிரிண்ட்' இவ்வாறு அந்நாளில் போடப்பட்டது.

- ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர் பாரதிதாசன், புதுச் சேரி. அச்சிடுவோர், மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.

குயிலகத்தில் இருந்த நாங்கள் மட்டுமல்ல; புதுவையைச் சேர்ந்த பலரும் பாவேந்தரைக் 'கவிஞர்' என்று மட்டுமே குறிப்பிடுவார்கள். மற்றும் சிலர், பள்ளியில் ஆசிரிய ராக அவர் பணிபுரிந்த காலத்தினர் என்பதாலோ என்னவோ - 'வாத்தி யார்' என்றே குறிப்பிடுவார்கள்.

நூற்றாண்டு விழாக்காணும் அவர் புரட்சிக் கவிஞர் மட்டுமல்ல, திறம் மிக்க பத்திரிகையாசிரியரும் ஆவார் என்பதை நான் அருகிருந்து கண்ட வன் என்பதை நினைவு கூர்வதில் மகிழ்கிறேன். ●

# பைந்தமிழ்ப் பாவேந்தன்

எடுப்பு

**பைந்தமிழ்ப்பா வேந்தனென்று பாரதியின் தாசனவன்**
**பாட்டுலகில் ஞாயிறென நின்றானடி! - அவன்**
**பாவையர்கு டும்பவிளக் கென்றானடி!**

(பைந்தமிழ்ப்பா...)

தொகுப்பு

**செந்தமிழில் சொல்லெடுத்து செங்கரும்புக் காதலினை**
**தேனிசையில் பாடிவந்த குயிலாமடி! - இயற்கை**
**சிந்துமெழி லில் மகிழ்ந்த மயிலாமடி!**

(பைந்தமிழ்ப்பா...)

முடிப்பு

**முத்தமிழும் ஒங்குமுழு மூச்சுடனே செய்தசெயல்**
**முத்திரையாய் எப்பொழுதும் பொன்றாதடி! - அவன்**
**முத்தொழிற்பாட் டாளியுயர் வுக்குழைத்துப் பெற்றபுகழ்**
**முச்சுடர்போல் மண்ணுலகில் குன்றாதடி!**

(பைந்தமிழ்ப்பா...)

**பெண்ணுரிமை பேசியவன் பெண்ணடிமை போக்குதற்கு**
**பீடுடன்போர் தன்னெழுத்தில் தொடுத்தானடி! -அவன்**
**மண்ணுரிமை வேண்டும்பொது மைப்புரட்சி நாடகங்கள்**
**வண்ணமுடன் வார்த்தெடுத்துக் கொடுத்தானடி!**

(பைந்தமிழ்ப்பா...)

**தமிழம் செ. பன்னீர் செல்வம்**

# அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் சீரிய பணிகள்

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு நாடுவோர் நம் நாட்டில் ஏராளம். அவர்களில் பெரும்பாலோர் இடைத்தரகர்களிடமும், தனியார் நிறுவனங்களிடமும் பல ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொடுத்து ஏமாறுகிறார்கள். இதுபோன்று ஏமாற்றத்தைத் தவிர்க்கவும், நம்பிக்கையான சேவை பெறவும் தமிழக அரசுக்குச் சொந்தமான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் (Overseas Manpower Corporation) கடந்த 11 ஆண்டுகளாக அரிய தொண்டு செய்து வருகிறது. இது தவிர, கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாடு செல்ல பாஸ்போர்ட் எடுத்துத் தருவது மற்றும் பாஸ்போர்ட் சம்பந்தமான எல்லா வேலைகளையும் செய்து தருகிறது.

இந்நிறுவனம் தகுதி பெற்ற நபர்களைப் பதிவு செய்து சவுதி அரேபியா, அமெரிக்கா, குவைத், ஓமான், ஏமன், ஐக்கிய அரபு குடியரசு (துபாய்), ஜோர்டன், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்து நல்ல பெயரையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளது.

வளைகுடா நாடுகளில் இந்தியப் பணியாளர்களுக்கு நிறைய தேவை இருக்கிறதென்றும் வளைகுடா போரின் முடிவிற்குப் பின் இது மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அமெரிக்க நாட்டில் செவிலியர் (நர்ஸ்) பதவிக்கு ஆயிரக்கணக்கில் தேவை இருக்கிறது.

விருப்பமுள்ளவர்கள் இலங்கைத் தலைநகர் கொழும்பு சென்று, நுழைவுத் தேர்வு எழுதி, அமெரிக்காவில் பணி செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் அமெரிக்க நிறுவனம் ஒன்றின் துணைகொண்டு இந்நிறுவனம் செய்கிறது. இத்தேர்வுகளின் மூலம் பல செவிலியர்கள் இதுவரை அனுப்பப்பட்டுள்ளனர்.

**பதிவு செய்யும் முறை**

எந்த ஒரு தொழிலிலாவது குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற்று, பாஸ்போர்ட் வைத்துள்ளவர்கள் இந்த நிறுவனத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். தமிழக அரசின் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் ரூ.75 கொடுத்து அதற்கான பதிவு விண்ணப்பத்தைப் பெற்று, அதைப் பூர்த்தி செய்து அதனுடன் அனுபவச் சான்றிதழ்கள் இணைத்து அனுப்பிப் பதிவு செய்து கொள்ள வேண்டும், தபாலிலும் பதிவு செய்து கொள்ளலாம். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை தங்களின் பெயர்ப் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் ரூ.10 செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**தேர்ந்தெடுக்கும் முறை**

குறிப்பிட்ட தொழிலுக்கு ஆட்கள் தேவை என வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து தகவல் வந்ததும், அவர்கள் கேட்டிருக்கும் தகுதிக்கேற்ப, பதிவு செய்தவர்களின் விண்ணப்பங்களை எடுத்து, அவர்களை நேர்முகத் தேர்வுக்கு இந்நிறுவனம் அழைக்கிறது. நேர்முகத் தேர்வில் வெளிநாட்டு நிறுவனத்தின் அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து உரிய பணிக்கான தொகையைப் பெற்று விசா படிவம், விமான பயணச் சீட்டு முதலியன பெற்ற பின் சம்பந்தப்பட்ட நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

**ஏ. சண்முகம் இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

**பாஸ்போர்ட் சேவை**

வேலைக்காக வெளிநாடு செல்வோரின் வசதிக்காகவும், பொதுமக்களின் வசதிக்காகவும், இந்நிறுவனம் பாஸ்போர்ட் எடுத்துத் தருவது, பாஸ்போர்ட் புதுப்பித்தல் மற்றும் பாஸ்போர்ட் சம்பந்தமான அனைத்து வேலைகளையும் செய்து தருகிறது. புதிதாகப் பாஸ்போர்ட் எடுக்க விரும்புவோர் தங்களுடைய பள்ளிச் சான்றிதழ், குடும்ப அட்டை (ரேஷன் கார்டு) மற்றும் 7 புகைப்படங்களுடன் உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டில் வேலை தேடுபவர்கள் இடைத்தரகர்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறாமல் இருக்கவும், நம்பிக்கையான சேவை பெறவும் தமிழக அரசின் நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 18-ஏ, முதல் குறுக்குத் தெரு, சி.ஐ.டி. காலனி, மைலாப்பூர், சென்னை-4-இல் உள்ள அலுவலகத்தின் உதவியை நாடினால் நல்லது.

இதுவரை ஆயிரக்கணக்கில் தமிழக மக்கள் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற இந்நிறுவனம் உதவி செய்துள்ளது. குறிப்பாக சவுதி அரேபியாவுக்கு ஆயிரக்கணக்கில் மருத்துவர்களையும், மருத்துவம் சார்ந்த பணியாளர்களையும் அனுப்பியிருக்கிறது. அங்கு அனுபவமிக்க நம் நாட்டு மருத்துவர்களுக்கு நல்ல மரியாதையும், வரவேற்பும் இருக்கிறது. அவர்களுக்கு அதிக ஊதியமும், நல்ல வசதியும் செய்து

கொடுக்கப்படுகிறது. பெரும்பாலும் இந்நிறுவனம் சவுதி அரேபியாவின் தேவைகளுக்குத் தமிழக அரசின் மருத்துவத்துறையில் வேலைபார்க்கும் மருத்துவர்களையும் இதரப் பணியாளர்களையும் அரசின் அனுமதி பெற்று அனுப்பி வந்தது. இதனால் குறிப்பிட்ட ஆண்டுகள் பணியாற்றிய பின் மீண்டும் அவர்கள் அரசுப் பணியில் சேர வசதியாய் இருந்தது. ஆனால், தமிழக அரசின் சமீபத்திய ஆணையின்படி அரசுப் பணியாளர்கள் வெளிநாட்டில் வேலை செய்ய விரும்பினால் தங்களுடைய வேலையை ராஜினாமா செய்தோ அல்லது சுயவிருப்பத்தில் ஓய்வு பெற்றுத்தான் சேர வேண்டும் என்றிருக்கிறது. இதனால் இந்நிறுவனத்தின் மூலம் சவுதிக்குச் செல்லும் அரசு மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்தது. ஆனால், அயல்நாட்டில் பணிபுரிய இத்தகைய அனுபவமிக்க நபர்களே தேவைப்படுகின்றனர். தற்போதுள்ள தமிழக அரசின் விதிமுறைகளைத் தளர்த்தினால் அரசுத்துறையில் அனுபவம் பெற்ற மருத்துவர்கள் வெளிநாடு சென்று பணிபுரிந்து தங்கள் வீட்டையும் தமிழ்நாட்டையும் மேம்படுத்த இயலும்.


அண்டை மாநிலமான கேரள அரசு வெளிநாடு சென்று வேலை செய்ய விரும்பும் அரசுப் பணியாளர்களுக்கு அவர்களுடைய மொத்த பணிக்காலத்தில் 10 ஆண்டுகள் வரை விடுமுறை எடுத்துக் கொண்டு வெளிநாட்டில் பணிசெய்து மீண்டும் அரசுப் பணிக்குத் திரும்பலாம் என்றிருந்த ஆணையைத் திருத்தி 15 ஆண்டுகள் வரை விடுமுறை பெறலாம் என்று 1987-ஆம் ஆண்டு ஆணையிட்டுள்ளது. இதனால் கேரள அரசுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலாவணியாகக் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகத்தில் கடந்த ஆண்டு இறுதிவரை சுமார் 4,000-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பதிவு செய்து அரசுப் பணிக்காகக் காத்திருக்கிறார்கள். தற்போது அரசில் பணிபுரியும் மருத்துவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதால் ஏற்படும் காலி இடங்களில் வேலைவாய்ப்பகத்தில் பதிவுசெய்து காத்திருக்கும் மருத்துவர்களை நிரப்புவதன் மூலம் உள்நாட்டு வேலையின்மை பிரச்சினையை ஓரளவு தீர்க்க இயலும். அன்னியச் செலாவணியும், அயல்நாட்டு அனுபவமிக்க மருத்துவர்களையும் எதிர்காலத்தில் தமிழகம் பெற இயலும். ●



## டாக்டர் அம்பேத்கர் எழுதிய முக்கிய நூல்கள்

1) இந்தியாவில் சாதிகள்
2) இந்திய சிறுபான்மையினரும், பரிகாரமும்.
3) பூனா ஒப்பந்தம்.
4) சாதியை ஒழிக்க வழி.
5) பெடரேஷனும், சுதந்திரமும்.
6) ரானடே, காந்தி, மற்றும் ஜின்னா
7) ஷெடியூல்டு மக்களுக்கு அடிமையிலிருந்து விடுதலை.
8) ஷெடியூல்டு மக்களுக்கு காங்கிரசும்-காந்தியும் செய்ததென்ன?
9) சமூகத் தடைகளும் அதனைப் போக்கும் வழிகளும்.
10) சூத்திரர்கள் என்பவர்கள் யார்?
11) மாநிலங்களும் சிறுபான்மையோரும்.
12) மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு.
13) இந்திய தேசிய லாப பங்கு வீதம்.
14) ரூபாயின் பிரச்சினை
15) கௌதம புத்தரும் கார்ல் மார்க்சும்.
16) மொழிவாரி மாநிலங்களைப் பற்றிய சிந்தனைகள்.
17) இந்து மத தத்துவம்.
18) இந்தியாவில் நடந்த புரட்சிகளும்—எதிர்ப் புரட்சிகளும்.
19) இந்துமதப் புதிர்கள்.
20) தீண்டப்படாதோரும்—தீண்டப்படுவோரும்.
21) சாதியும் மதமாற்றமும்.
22) பாகிஸ்தான்(அ)இந்தியப் பிரிவினை.
23) ஜனநாயக வெற்றிப்பணிக்கான முன் நிபந்தனைகள்
24) விடுதலைக்கு வழி என்ன?
25) புத்தமத எழுச்சியும், வீழ்ச்சியும்
26) காந்தியும், காந்தியிசமும்.
27) இந்துப் பெண்டிரின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
28) புத்தரும் அவரின் தம்மமும்.



# இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடி

அண்மையில், நாடு முழுவதும் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள் தொகை 84 கோடியே 30 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த 1901-ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது.

கடந்த பிப்ரவரி மாதம் நாடு முழுவதும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்தது. இலட்சக்கணக்கானோர் இக்கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டனர். வீடு வீடாகச் சென்று ஒவ்வொருவரிடமும் சாதி, மதம், தொழில், படிப்பு போன்ற பல விவரங்களைச் சேகரித்தனர்.

அதன் அடிப்படையில், நாடு முழுவதும் உள்ள மக்கள் தொகை விவரம் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி இந்தியாவின் இப்போதைய மக்கள் தொகை 84 கோடியே 39 இலட்சத்து 30 ஆயிரத்து 861 (84,39,30,861) என மதிப்பிடப்பட்டுள்ளது.

**மக்கள்தொகை விவரம் வருமாறு:**

| | | |
|---|---|---|
| மொத்தம் | ... | 84,39,30,861 |
| ஆண்கள் | ... | 43,75,97,929 |
| பெண்கள் | ... | 40,63,32,932 |

**கடந்த 1981-1991-ஆம் ஆண்டில் உயர்ந்த, இந்திய மக்கள் தொகை:**

| | | |
|---|---|---|
| எண்ணிக்கை | ... | 16,06,01,764 |
| சதவீதம் | ... | 23.50 |
| மக்கள்தொகை நெருக்கம் | ... | ஒரு சதுர கி.மீட்டருக்கு 267 பேர். |

**பெண்கள்: 1000 ஆண்களுக்கு 929 பெண்கள்**

| | | |
|---|---|---|
| கல்வி அறிவு | ... | 52.11 சதவீதம் |
| ஆண்கள் | ... | 63.86 சதவீதம் |
| பெண்கள் | ... | 39.42 சதவீதம் |

**முன்னணி மாநிலம்: கேரளா**

| | | |
|---|---|---|
| சதவீதம் | ... | 90.59 சதவீதம் |
| 1981-இல் கல்வி அறிவு | ... | 43.56 சதவீதம் |
| உயர்வு | ... | 8.55 சதவீதம் |

கல்வி அறிவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 63.72 சதவீதத்தினர் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

இந்த சென்சஸ் கணக்கை பார்க்கும்போது ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும் இந்தியாவில் பெண்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1901-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் 1,000 ஆண்களுக்குச் சமமாக இருந்த பெண்கள் எண்ணிக்கை வருமாறு:

| | | |
|---|---|---|
| 1901 | — | 972 |
| 1911 | — | 964 |
| 1921 | — | 955 |
| 1931 | — | 950 |
| 1941 | — | 945 |
| 1951 | — | 946 |
| 1961 | — | 941 |
| 1971 | — | 930 |
| 1981 | — | 934 |
| 1991 | — | 929 |

★ இந்தியாவின் மக்கள் தொகை: 84,39,30,861

★ தமிழ்நாட்டின் மக்கள் தொகை: 5,56,38,318

★ கல்வி அறிவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது.

★ தமிழ்நாட்டில் 63.72 சதவீதத்தினர் கல்வி அறிவு பெற்றுள்ளனர்.

★ சென்னை மாநகர மக்கள் தொகை. 37,95,028

பெண்கள் எண்ணிக்கை குறைந்து வரும் அதே நேரத்தில், படித்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1951-ஆம் ஆண்டு முதல் ஆண்-பெண் கல்வி அறிவு பெற்றவர்கள் சதவீதம் வருமாறு:

| ஆண்டு | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1951 | 18.33 | 27.16 | 8.86 |
| 1961 | 28.31 | 40.40 | 15.34 |
| 1971 | 34.45 | 45.95 | 21.97 |
| 1981 | 43.56 | 56.37 | 29.75 |
| 1991 | 52.11 | 63.86 | 39.42 |

கடந்த 1971-1981-ஆம் ஆண்டில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 24.66 சதவீதமாக இருந்தது. 1981-1991-ஆம் ஆண்டில் இதில் 1.16 சதவீதம் குறைந்து உள்ளது.

குளிர் காலமாதலால், இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு காஷ்மீர் மாநிலத்தில் மட்டும் நடக்கவில்லை. வரும் ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை அங்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.

**மாநிலம் வாரியாக மக்கள் தொகை விவரம் வருமாறு:**

| மாநிலங்கள் | மக்கள் | வளர்ச்சி வீதம் 1981-1991 | மக்கள் தொகை நெருக்கம் 1991 |
|---|---|---|---|
| ஆந்திரா | 66,304,854 | +23.82 | 241 |
| அருணாசலப் பிரதேசம் | 858,392 | +35.86 | 10 |
| அசாம் | 22,294,562 | +23.58 | 284 |
| பீகார் | 86,338,853 | +23.49 | 497 |
| கோவா | 1,168,622 | +15.96 | 316 |
| குஜராத் | 41,174,060 | +20.80 | 210 |
| அரியானா | 16,317,715 | +26.28 | 369 |
| இமாசலப் பிரதேசம் | 5,111,079 | +19.39 | 92 |
| காஷ்மீர் | 7,718,700 | +28.92 | 76 |
| கர்நாடகா | 44,817,398 | +20.69 | 234 |
| கேரளா | 29,011,237 | +13.98 | 747 |
| மத்தியப் பிரதேசம் | 66,135,862 | +26.75 | 149 |
| மகாராஷ்டிரா | 78,706,719 | +25.36 | 256 |
| மணிப்பூர் | 1,826,714 | +28.56 | 82 |
| மேகாலயா | 1,760,626 | +31.80 | 78 |
| மிசோரம் | 686,217 | +38.98 | 33 |
| நாகலாந்து | 1,215,573 | +56.86 | 73 |
| ஒரிசா | 31,512,070 | +19.50 | 202 |
| பஞ்சாப் | 20,190,795 | +20.26 | 401 |
| ராஜஸ்தான் | 43,880,640 | +28.07 | 128 |
| சிக்கிம் | 403,612 | +27.57 | 57 |
| தமிழ்நாடு | 55,638,318 | +14.94 | 428 |
| திரிபுரா | 2,744,827 | +33.69 | 262 |
| உத்திரப் பிரதேசம் | 138,760,417 | +25.16 | 471 |
| மேற்கு வங்கம் | 67,982,732 | +24.55 | 766 |
| அந்தமான் | 277,989 | +47.29 | 34 |
| சண்டிகார் | 640,725 | +41.88 | 5,620 |
| தத்ராநகர் ஹவேலி | 138,542 | +33.63 | 282 |
| தாமன், டையூ | 101,439 | +28.43 | 906 |
| டில்லி | 9,370,475 | +50.64 | 6,319 |
| லட்சத்தீவு | 51,681 | +28.40 | 1,615 |
| பாண்டிச்சேரி | 789,416 | +30.60 | 1,605 |

உலக மக்கள் தொகையில் 16 சதவீதத்தினர் இந்தியாவில் உள்ளனர். இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா உள்ளது.



**காதலுக்கு வழிவைத்துக்**
**கருப்பாதை சாத்தக்**
**கதவொன்று கண்டறிவோம்**
**இதிலென்ன குற்றம்?**

**— பாவேந்தர் பாரதிதாசன்**

## தமிழ்நாட்டின் மக்கள் தொகை

இந்தியாவின் மிகப் பெரிய புள்ளி விவரக் கணக்கெடுப்பாக விளங்கும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கடந்த நூறாண்டுக் காலமாக இடைவிடாது நடைபெற்று வருகிறது.

1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பதின்மூன்றாவது கணக்கெடுப்பாகவும், இந்தியா விடுதலை பெற்ற பின் நடைபெறும் ஐந்தாவது கணக்கெடுப்பாகவும் விளங்குகிறது.

1.3.1991 அன்று இந்தியாவின் மக்கள்தொகை 84 கோடியே 39 இலட்சத்து 30 ஆயிரத்து 861. இதில் ஆண்களின் எண்ணிக்கை 43 கோடியே 75 இலட்சத்து 97 ஆயிரத்து 929. பெண்கள் 40 கோடியே 63 இலட்சத்து 32 ஆயிரத்து 932. அனைத்திந்திய அளவில் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் உள்ளனர். ஒரு சதுர கிலோ மீட்டர்

பரப்பளவில் 267 மக்கள் வசித்து வருகின்றனர். ஏழு வயதுக்கு மேற்பட்டவர்களில் படித்தவர்கள் 52.11%. படித்த ஆண்கள் 63.86. படித்த பெண்கள் 39.42.

இந்தியாவிலேயே அதிக மக்கள் தொகை உள்ள மாநிலம் உத்திரப்பிரதேசமாகும். இந்த மாநில மக்கள்தொகை 13 கோடியே 87 இலட்சத்து 60 ஆயிரத்து 417. இரண்டாவதாக வருவது பீகார் (8,63,38,853); 3-வது மாநிலம் மகாராஷ்டிரா (7,87,06,719); 4-வது மேற்கு வங்கம் (6,79,82,732); 5-வது ஆந்திரா (6,63,04,854); 6-வது மத்தியப் பிரதேசம் (6,61,35,862); 7-வது மாநிலமாக வருவது, தமிழ்நாடு (5,56,38,318).

தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் ஆண்கள் 2,82,17,947. பெண்கள் 2,74,20,371 ஆவர். தமிழ்நாட்டில் 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் உள்ளனர். 1 சதுர கி.மீட்டருக்கு வசிக்கும் மக்கள் தொகை 428. படித்தவர்கள் 63.72 சதவீதம். படித்த ஆண்கள் 74.88 சதவீதம். படித்த பெண்கள் 52.29 சதவீதம். 1981-91-இல் வளர்ந்துள்ள மக்கள்தொகை 14.94 சதவீதம். (1981-இல் மொத்த மக்கள்தொகை 4,84,08,077). 1981-இல் 1000 பேருக்கு 28 என்று இருந்த பிறப்பு விகிதம் 1989-இல் 23.1 ஆகக் குறைந்தது. 1981-இல் 11.8 ஆக இருந்த இறப்பு விகிதம் 1989-இல் 8.6 ஆக குறைந்துள்ளது.

இந்திய மக்கள்தொகையில் 6.59 சதவீதம் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். தமிழ்நாட்டில் அதிக மக்கள்தொகை உள்ள மாவட்டம் தென் ஆர்க்காடு (48,70,871). அடுத்து வருவது செங்கை-அண்ணா (46,20,967), தஞ்சை (45,26,709), திருச்சி (41,14,323). குறைந்த மக்கள்தொகை உள்ள மாவட்டம் நீலகிரி (7,04,827). சென்னையின் மக்கள்தொகை (37,95,028), 1 சதுர கி.மீட்டருக்கு அதிக மக்கள் வசிக்கும் மாவட்டம் சென்னை (21,811). 1 சதுர கி.மீட்டருக்கு மிகவும் குறைந்த அளவில் மக்கள் வசிக்கும் மாவட்டம் தர்மபுரி (249).

1981-இல் ஆயிரம் ஆண்களுக்கு 977 பெண்களைக் கொண்ட தமிழ்நாட்டில் 1991-இல் ஆயிரம் ஆண்களுக்கு 972 பெண்கள் உள்ளனர். ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரத்திற்கும் அதிகமாக பெண்கள் உள்ள மாவட்டங்கள் சிதம்பரனார் (1,047), திருநெல்வேலி-கட்டபொம்மன் (1,036), பசும்பொன் தேவர் திருமகன் (1,029), இராமநாதபுரம் (1,020), புதுக்கோட்டை (1,006). பெண்கள் குறைவாக உள்ள மாவட்டம் கோவை (1000-க்கு 910), சென்னை (930), சேலம் (932).




''பிறப்பு விகிதத்தில், தென் மாநிலங்களில் தமிழ்நாடுதான் அபாயத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது, இந்தியா முழுமைக்கும் பிறப்புச் சதவிகிதம் 1988-இல் ஆயிரத்திற்கு 31.5-லிருந்து, 1989-இல் 30.5 ஆகக் குறைந்துள்ளது. இதே காலகட்டத்தில் தென்மாநிலங்களில் ஆந்திராவில் 1988-இல் 27.4. ஆக இருந்த விகிதம் 1989-இல் 25.6 ஆகக் குறைந்துள்ளது. ஆயிரத்திற்கு 1.5 வீதம் குறைந்துள்ளது. கர்நாடகத்தில் 1988-இல் 28.7 ஆக இருந்த பிறப்பு விகிதம் 27.9 ஆக 1989-இல் ஆயிரத்திற்கு 0.5 வீதம் குறைந்துள்ளது. கேரளத்தில் 1988-இல் 20.3 வீதமாக இருந்தது 1989-இல் 19.8 ஆகக் குறைந்துள்ளது ஆயிரத்திற்கு 0.5 வீதம் குறைந்துள்ளது.

''தமிழ்நாட்டில் மட்டும் சரிந்து கொண்டே வந்த பிறப்பு விகிதம், 1988-ஐ விட 1989-இல் அதிகரித்துள்ளது! 1988-இல் ஆயிரத்திற்கு 22.7 விகிதமாக இருந்த பிறப்பு, 1989-இல் ஆயிரத்திற்கு 23.1 விகிதமாக அதாவது 0.4 விகிதம் கூடியுள்ளது. இது பார்ப்பதற்குச் சிறிய தொகையாக இருந்தாலும், இது ஒரு அபாய அறிகுறி. இந்தப் போக்கை ஒட்டு மொத்த முயற்சியுடன் தடுத்து நிறுத்தாவிட்டால் ஆபத்து. இதற்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்''.

- சென்னை மாநகராட்சி சார்பில் நடந்த நட்சத்திரக் கலை விழாவில் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து (8.4.91)

# தமிழ்நாட்டு மக்கள் தொகை - படிப்பறிவு

| மாவட்டம் | மொத்த மக்கள் தொகை | ஆண்கள் | பெண்கள் | படித்தவர்கள்⊙ | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| தமிழ்நாடு | 55,638,318 | 28,217,947 | 27,420,371 | 30,383,416 | 18,066,226 | 12,317,190 |
| 1. சென்னை | 3,795,028 | 1,966,408 | 1,828,620 | 2,753,094 | 1,525,769 | 1,227,325 |
| 2. செங்கை-அண்ணா | 4,620,967 | 2,361,017 | 2,259,950 | 2,654,763 | 1,573,942 | 1,080,821 |
| 3. வட ஆர்க்காடு-அம்பேத்கர் | 3,000,208 | 1,510,157 | 1,490,051 | 1,572242 | 942,766 | 629,476 |
| 4. தருமபுரி | 2,395,606 | 1,232,292 | 1,163,314 | 954,156 | 596,509 | 357,647 |
| 5. திருவண்ணாமலை-சம்புவராயர் | 1,997,458 | 1,007,566 | 989,892 | 903,421 | 570,834 | 332,587 |
| 6. தென் ஆர்க்காடு | 4,870,871 | 2,475,544 | 2,395,327 | 2,228,722 | 1,408,126 | 820,596 |
| 7. சேலம் | 3,914,239 | 2,025,652 | 1,888,587 | 1,862,719 | 1,150,648 | 712,071 |
| 8. பெரியார் | 2,322,851 | 1,184,629 | 1,138,010 | 1,131,671 | 699,609 | 432,062 |
| 9. நீலகிரி | 704,827 | 354,732 | 350,095 | 449,508 | 257,352 | 192,156 |
| 10. கோயம்புத்தூர் | 3,531,078 | 1,848,629 | 1,682,449, | 2,146,864 | 1,265,603 | 881,261 |
| 11. திண்டுக்கல்-காயிதேமில்லத் | 1,768,679 | 896442 | 872,327 | 891,074 | 546,720 | 344,354 |
| 12. திருச்சிராப்பள்ளி | 4,114,323 | 2,074,415 | 2,039,908 | 2,211,211 | 1,337,304 | 873,907 |
| 13. தஞ்சாவூர் | 4,526,709 | 2,268,389 | 2,258,320 | 2,609,228 | 1,529,357 | 1,079,871 |
| 14. புதுக்கோட்டை | 1,322,494 | 659,241 | 663,253 | 661,604 | 410,133 | 251,471 |
| 15. பசும்பொன் தேவர் திருமகன் | 1,074,989 | 529,703 | 545,286 | 591,357 | 356,260 | 235,097 |
| 16. மதுரை | 3,447,595 | 1,748,126 | 1,699,469 | 1,836,012 | 1,107,881 | 728,131 |
| 17. காமராசர் | 1,554,350 | 779,086 | 775,264 | 852,680 | 512,427 | 340,253 |
| 18. இராமநாதபுரம் | 1,135,887 | 562,387 | 573,500 | 595,879 | 356,912 | 238,967 |
| 19. சிதம்பரனார் | 1,455,796 | 711,087 | 744,709 | 920,049 | 502,711 | 417,338 |
| 20. திருநெல்வேலி கட்டபொம்மன் | 2,493,189 | 1,224,319 | 1,268,870 | 1,409,304 | 814,274 | 595,030 |
| 21. கன்னியாகுமரி | 1,591,174 | 797,914 | 793,260 | 1,147,858 | 601,089 | 546,769 |

⊙ 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 0-6 வயதுள்ள குழந்தைகள் படிப்பறிவற்றவர்களாக் கருதப் படுகின்றனர்.

## பிறப்பு விகிதம் குறைந்திட...

மகளிர் மன்றங்கள் உள்ளிட்ட பல தொண்டு நிறுவனங்கள், மத்திய, மாநில அரசுகள் செயல் படுத்தி வந்த பல நல வாழ்வுத் திட்டங்களில் ஈடுபட்டு ஒத்துழைப்பு கொடுத்து வந்தன.

குறிப்பாக, பல தொண்டு நிறுவனங்கள் குடும்ப நலத் திட்டத்தில் மிக் ஆர்வம் காட்டி, குடும்ப நல நிலையங்களை நடத்தியும், நோய்த் தடுப்பு முனைப்பு இயக்கங்கள் நடத்தியும் குடிசைப் பகுதிகளைத் தத்து எடுத்துக் கொண்டும், மக்களை நலவாழ்வுத் திட்டங்களில் ஈடுபாடு ஏற்படச் செய்யும் முயற்சிகளில் அரசுடன் ஒத்துழைத்து வந்தன. மக்கள் தொகையையும், அத்துடன் பிறப்பு விகிதத்தையும் கட்டுப்படுத்துவதில் பேரார்வம் காட்டி வந்தன.

அதன் காரணமாக, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்து வந்திருந்தாலும், 1989 முதல் இது சற்று அதிகரித்து இருப்பதை அறிய அதிர்ச்சியாக உள்ளது.

ஆகையால், இதுவரை அரசுடன் ஒத்துழைத்து வந்த தொண்டு நிறுவனங்களில் பல ஒன்று கூடி ஒரு கூட்டமைப்பை டாக்டர் நஞ்கண்ட ராவ் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தியுள்ளது.

இது, பிறப்பு விகிதத்தைக் குறைக்க அரசு, விளம்பரம் மற்றும் நலக் கல்விப் பணிகளை மேலும் அதிகமான அளவில் மேற்கொள்ள வற்புறுத்தும்.

# தமிழ்நாட்டில் வனவிலங்குச் சரணாலயங்கள்

**கோ.வி. இராமசுவாமி**

**உ**லகின் நிலப்பரப்பளவில் இந்தியா ஏழாவது பெரிய (*3.2* மில்லியன் *ச.கி.மீட்டர்*) நாடு ஆகும். இதில் தமிழகம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் கொண்ட பகுதியாகும். இந்நிலப் பரப்பளவில் இருபதாயிரம் சதுர கிலோ மீட்டர் காடுகளாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழகத்தில் பல்வேறு வகைப்பட்ட வனவிலங்குகள் காணப்படுகின்றன. தொழில் வளர்ச்சி யாலும் வேளாண் பரப்பு விரிவாக்கப் படுவதாலும் இயற்கைக் காடுகள் மனி தனால் கையகப்படுத்தப்படுவதால் பல வனவிலங்குகளின் வாழிடங்கள் அழிக்கப் படுவதைத் தடுக்க இந்திய அரசு 1972-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை அறிவித்தது. இச் சட்டத்தின்படி பல காடுகள் 'பாது காக்கப்பட்டவை' (Protected Reserve Forests) என்று அறிவிக்கப்பட்டு வனத் துறையினரால் கண்காணிக்கப்படுகின்றன.

வனவிலங்குப் புகலரண்களும் பல ஏற்படுத்தப்பட்டு வனவிலங்குகள் பாது காக்கப்படுகின்றன.

தமிழகத்தில் பின் குறிப்பிடப்படும் 8 வனவிலங்குப் புகலரண்கள் உள்ளன. (ஏழு சரணாலயங்கள், ஒரு தேசியப் பூங்கா) 1. முதுமலை (நீலகிரி மாவட்டம்), 2. ஆனைமலை (கோவை மாவட்டம்), 3. முண்டந்துறை (திருநெல்வேலி), 4. களக்காடு (திருநெல்வேலி), 5. கோடிக் கரை (தஞ்சாவூர்), 6. வேடந்தாங்கல் (செங்கல்பட்டு), 7. வேட்டங்குடி (இராம நாதபுரம்), 8. கிண்டி மான்கள் தேசியப் பூங்கா (சென்னை).

**முதுமலை சரணாலயம்**

மலைகளின் அரசியாம் நீலகிரி மலை யில் *321* சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ள இப்புகலிடம் மேற்குத் தொடர்ச்சி மலையில் நீலகிரி-மைசூர் நெடுஞ்சாலையிலுள்ள முக்கியமான வன விலங்குப் புகலரண் ஆகும். *1940*-ஆம் ஆண்டு முதல் இது புகலரணாக உள்ளது.

தமிழ்நாட்டிலேயே மிக அதிகப் பார் வையாளர்களைக் கவர்ந்திழுக்கும் யானை களின் புகலிடம் இதுவாகும். இங்கு மடிப்பு மலைத் தொடர்களும், குன்று களும் பெரும்பள்ளத்தாக்குகளும், மலைச் சரிவுகளும் காணப்படுகின்றன. இலை யுதிர் புதர்க் காடுகள், இலையுதிர்க் காடுகள் மற்றும் பசுமை மாறாக் காடு களின் தாவர வகைகள் இங்கே காணப் படுகின்றன.

உலகின் மிகப்பெரிய தாவர உண வினமான யானை, பைசன் எனப்படும் காட்டு எருதுகள் (Gaur) கூட்டம் கூட்ட மாக இப்புகலரணில் காணப்படும். இவை களைத் தவிர புள்ளிமான் (Spotted deer) சாம்பார் மான் (Sambur deer) நான்கு கொம்பு மான், குரைக்கும் மான் (Barking deer) மலபார் அணில், பறக்கும் அணில், அனுமான் குரங்கு, நீலகிரிக் குரங்கு, முள்ளம்பன்றி, கரடி, புலி, நரி, செந்நாய் (Red dog) ஆகிய பாலூட்டிகளும், மலைப்பாம்பு சாரைப் பாம்பு, அரசநாகம் (King Cobra) உடும்புகள், சதுப்பு முதலை ஆகிய ஊர்வனவும் காணப் படுகின்றன.

இப்புகலரணை ஒலிமயமாக்குபவை வண்ண வண்ணப் பறவைகளாகும். மயில்கள், பச்சைக் கிளிகள், கௌதாரிகள், குயில்கள், ஹார்ன்பில்கள் ஆகியன. இப்புகலிடத்தில் பார்வையாளர்கள் தங்குவதற்கு வனத்துறையின் ஓய்வு விடுதி களும், படுக்கையறைக் கூடங்களும் உள்ளன. இப்புகலரணைப் பார்வையிட ஏற்ற காலம் சனவரி முதல் மார்ச் வரை யாகும்.

**ஆனைமலை புகலரண்**

தமிழகத்தின் மிகப்பெரிய புகலர ணாகிய இது கோயம்புத்தூர் மாவட்டத் தில் உள்ளது. கேரள மாநில எல்லை வரை விரிந்துள்ள இப்புகலரண் கொடு










முடிகளைக் கொண்ட மலைப்பகுதியாகும். பொள்ளாச்சியிலிருந்து 50 கி.மீ. தூரத்திலுள்ளது.

இப்புகலரணில் பசுமை மாறாக் காடுகளும், இலையுதிர்க் காடுகளும் காணப்படுகின்றன. யானை, காட்டு எருமை, சாம்பார்மான், புள்ளிமான், குரைக்கும் மான், எலிமான், நீலகிரி ஆடு, புலி, சிறுத்தை, செந்நாய், காட்டுப் பன்றி, நீலகிரிக் குரங்கு, அனுமான் குரங்கு ஆகிய பல விலங்குகள் காணப்படுகின்றன.

**முண்டந்துறை புலிகள் சரணாலயம்.**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு வெகு அருகாமையில் உள்ள இப்புகலரணில் பசுமை மாறாக் காடுகள் செழிப்புடன் காணப்படுகின்றன. இப்புகலரணில் தாமிரவருணி ஆறு செல்வதால் கரையோரங்களில் மிகச் செழிப்பான காடுகள் காணப்படுகின்றன.

இந்த இயற்கைக் காடுகளைத் தவிர வனத்துறையினர் சந்தனக் காடுகளையும், தேக்குமரக் காடுகளையும் ஏற்படுத்திப் பராமரித்துப் பாதுகாக்கின்றனர். இப்புகலரணில் சேர்வலாறு அணைக்கட்டுக் கட்டியதால் பரந்த பல பகுதிகள் நீரில் அமிழ்ந்து விட்டன. புலிகளும் சிறுத்தைகளும் இங்குக் காணப்படும் புலால் உணவினவாகும். நெடிதுயர்ந்த மரங்கள் இருப்பதால் குரங்கு வகைகளாகிய நீலகிரிக் குரங்கு, அனுமான் குரங்கு, சிங்கவால் குரங்கு, தேவாங்கு ஆகிய அனைத்தும் காணப்படுகின்றன.



இவைகளைத் தவிர செந்நாய், கரடி, புள்ளிமான், சாம்பார் மான், குரைக்கும் மான், எலிமான், காட்டுப் பன்றிகளும் பல்வகைப்பட்ட பறவைகளும் இப்புகலிடத்தில் காணப்படுகின்றன.

**களக்காடு புகலரண்**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குநேரி தாலூக்காவில் உள்ள வனவிலங்குகள் புகலரணாகிய இதில் மடிப்பு மலைகளும், சிறு குன்றுகளும் காணப்படுகின்றன. இப்புகலரணை மணிமுத்தாறு, பச்சையாறு மற்றும் பல ஆறுகளின் கிளைகள் பாய்ந்து செழிப்பாக்குகின்றன.

பசுமைமாறாக் காடுகளின் தாவரங்களும், கோடைக்கால இலையுதிர்த் தாவரங்களும், முட்காடுகளின் தாவரங்களும் நிறைந்துள்ள இப்புகலிடத்தில்






உலகிலேயே மிக அரிதான சிங்கவால் குரங்கு (Lion-tailed macaque) மிக அதிக எண்ணிக்கையில் (200) காணப் படுகிறது.

### கோடிக்கரை புகலரண்

தஞ்சை மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரையோரத்தில் வேதாரண்யம் அருகே 25 ச.கி.மீ. பரப்பளவில் விரிந் துள்ளது இப்பறவைகள் புகலிடமாகும். உப்பங்கழிகளும். முட்புதர்களும் கொண்ட இப்புகலரணில் வெளிமான்கள் (Black buck) மிக அதிக எண்ணிக்கையில் (2,000) காணப்படுகின்றன. இப்புகலரணுக்கு 175 வகையான பறவையினங்கள் ஆண்டொன்றுக்கு வருவதாகக் கணக் கிடடு உள்ளனர்.

அக்டோபர், நவம்பர் மாதங்களில் 10,000-இல் இருந்து 30,000 வரை கூட்டம் கூட்டமாக பூநாரைகளும் (Flamingo), செங்கால் நாரைகளும், கரண்டி மூக்கு நாரைகளும் (Spoon bills), வண்ண நாரைகளும் (Painted stork) இப்புகலிடத்தில் உப்பங்கழிகளில் நிறைந்திருப்பது கண்ணுக்கு விருந்தாகும்.



### வேடந்தாங்கல் பறவைகள் புகலரண்

தென்னிந்தியாவில் காணப்படும் மிக தொன்மையான பறவைகள் புகலரணாகிய இது செங்கல்பட்டு மாவட்டத்தில் 74 ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளது. இதில் 30 ஏக்கர் பரப்பளவில் வேடந்தாங்கல் ஏரியும் அதன் கரையும் உள்ளன. வடகிழக்குப் பருவ காலத்தில் நீர் நிறைந்து காணப்படும் இவ் ஏரியில் உள்ள கடப்ப மரங்களும், கரையோரத்தில் உள்ள கருவேல மரங்களும் பல் வகைப் பறவையினங்கள் கூட்டம் கூட்டமாகக் கூடுகட்ட இடமளிக்கின்றன. சாம்பல் நாரை (Grey heron), நீர்க்காகம் (Cormorants), பாம்புத் தாரா (Darter), வெள்ளை நாரை (White Ibis), கரண்டி மூக்கு நாரை, கூழைக்கடா (Pelicans), வண்ணநாரை போன்ற பல பறவைகள் கூடுகட்டி வாழ்வதைக் கண்டுகளிக்கலாம்.

1986-ஆம் ஆண்டில் சுமார் 50,000 பறவைகள் இங்கு இருந்ததாகக் கணக் கிடப்பட்டுள்ளன. சனவரி, பிப்ரவரி மாதங்களில் மிக அதிகமாகப் பறவைகளைக் கண்டு மகிழலாம்.

### வேட்டங்குடி புகலரண்

இராமநாதபுரத்தில் உள்ள திருப்பத்தூர்க் கோட்டத்தில் உள்ள வேட்டங்குடி ஏரி, நீர்ப் பறவைகளின் புகலிடமாகக் காட்சியளிக்கிறது. இங்குப் பல்வகைப் பட்ட நாரைகள் கூடுகட்டி வாழ்வதால் இவைகளின் கீச்சு, மூச்சு ஒலி எப் பொழுதும் நிறைந்திருக்கும், நீர்க்காகம், இரவு நாரை (Night Heron), கரண்டி மூக்கு நாரைகள் போன்ற பல்வேறு வகைப்பட்ட நீர்ப் பறவைகளின் புகலிடமாக உள்ள இதனைப் பார்வையிடச் சிறந்த காலம் ஆகஸ்ட் முதல் ஏப்ரல் வரை ஆகும்.

### கிண்டி தேசிய பூங்கா

சென்னையில் ஆளுநர் இல்லத்தின் பின்புறமுள்ள மூன்று ஏக்கரில் பரந்து கிடக்கும் இப்பூங்காவில் தற்பொழுது ஒரு உயிர்க் காட்சியகமும், பாம்புப் பண்ணையும், மான்கள் பூங்காவும் காணப்படுகின்றன. முட்காடுகளும், புதர்க்காடுகளும் நிறைந்த இப்பூங்காவில் புள்ளிமான்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இவைகளோடு வெளிமான்களும் (Black bucks) உள்ளன

தமிழகத்துப் புகலரண்களில் தமிழ் நாட்டில் காணப்படும் மிக அரிய விலங்குகள் பாதுகாப்போடு பலகிப் பெருகுகின்றன. இப்புகலிடங்களுக்குக் குழந்தைகளுடன் சென்று பார்த்து இவ்விலங்குகளின் வனப்பையும், இயற்கைச் சூழலில் இவ்விலங்குகள் சுகமாக வாழ்வதையும் கண்டுகளித்து உளப்பூர்வமான மகிழ்ச்சியை நாம் அடையலாம்.

**நன்றி: "கலைக்கதிர்"**

# சிறுசேமிப்புத் துறை




எதிர்பாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

## வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

### தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/MS/91/ARIES

## இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-

ரூ.50,000/- வரை தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி பெறுங்கள்.

**கூடுதல் சலுகைகள்:**

* இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
* சொத்து வரிவிலக்கு
* உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

**யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.**
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
**அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம்** மற்றும்
இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.

# பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வே**ளாண்மைக்கு நீர், நிலம் மற்றும் விதை, உரம், பூச்சிமருந்து ஆகியவை இன்றியமையாத தேவைகளாகும். இவற்றில் நீர் கிடைத்தற்கரிய பொருளாக ஆகிவிடுமோ என்கின்ற நிலை ஏற்பட்டு வருகின்றது. மக்கள் தொகைப் பெருக்கம், தொழில் வளம் ஆகியவற்றினால் தேவைக்கேற்ப, நீர் கிடைப்பது சிரமமாக உள்ளது. அதற்குக் காரணம் காலத்தில் மழை பெய்யாது வான் பொய்ப்பதும், பெய்யும் மழையும் குறைவாக இருப்பதனாலும் தான்.

ஆகவே, கிடைக்கும் நீர், சரிவரப்பயன்படுத்திக் கொள்ளப் படுதல் வேண்டும். ஆனால், கிடைக்கும் நீர் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறதா எனில், 'இல்லை' என்று கூறிடும் நிலையே உள்ளது. ஏனெனில் பாசன நீர் பல வழிகளில் வீணாகிறது.

பெரும்பாலும் வயலுக்கு வயல் பாசனம் தான் நடைபெறுகிறது. அதனால் ஒரு வயல் முழுவதற்கும் நீர் பாய்ந்தவுடன்தான், அடுத்த வயலுக்கு நீர் பாய்ச்ச முடிகிறது. அதனால் வயலில் தேவைக்குமேல் நீர் நிற்க வழி ஏற்படுகிறது.

மேலும், பாசன நீர் செல்லும் வாய்க்கால்கள் மேடு பள்ளங்களாகவும், வளைவுகளாகவும் இருப்பதனாலும், பாசன நீர், வாய்க்கால்களில் விரைவாகச் செல்ல இயலாது போகிறது. வாய்க்கால்களின் கரைகள் சரிவர இல்லாதிருந்தாலும், கரை உடைப்பெடுத்து, பாசன நீர் வீணாகிறது. மண் வாய்க்கால்களாக இருப்பதனால், பாசன நீர் நிலத்தில் உறிஞ்சப்பட்டும் வீணாகிறது. வாய்க்கால்களில் புல், பூண்டுகள் வளர்வதனால், நீர் பாயும் வேகம் தடைப்படுவதோடு, ஓரளவு நீர் புல் பூண்டுகளால் கிரகிக்கப்பட்டு வீணாகிறது. வயல் வரப்புகளில் எலி வளைகள் இருப்பின் அவற்றில் செல்வதாலும் ஓரளவு நீர் வீணாகிறது. முன் மடைதாரர்களுக்குத் தேவைக்கு அதிகமான நீர் கிடைப்பதாலும், கடை மடைதாரர்களுக்கு மிகவும் குறைவாக அல்லது பாசன நீர் கிடைக்காமலே போவதாலும் நீர் வீணாவது மட்டுமின்றி மகசூலும் பாதிக்கப்படுகின்றது.

---


**நா. துரைசாமி,**
**உதவி செயற் பொறியாளர்**
**வாரபந்தி, ஈரோடு.**


---

இக்குறைகளைக் களைந்து, பாசனப் பகுதியைச் சேர்ந்த அனைத்து நிலங்களுக்கும், பாசன நீர் கிடைத்திட வழிவகைகள் செய்திடுவதே பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மண் வாய்க்கால்கள் கரை வாய்க்கால்களாக அமைக்கப்படுகின்றன. தேவையான இடங்களில் ஆங்காங்கே பகிர்மானத் தொட்டிகள், வண்டிப் பாதைகள், நீர் அளவை கட்டுமானங்கள் ஆகியவை கட்டப்படுகின்றன.

தலைமடை, இடைமடை, கடைமடை ஆகிய பகுதிகளில் நிலம் எங்கிருப்பினும், அனைத்திற்கும் தேவையான பாசன நீர், தேவையான காலத்தில் கிடைக்கும்படி ஆவன செய்யப்படுகிறது.

விவசாயிகளின் தேவை அடிப்படையில், ஒவ்வொரு மதகிலும் செய்யப்பட உள்ள திட்டப்பணிகள் தீர்மானிக்கப்படுகின்றன. அதன் பின்னரே, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் திட்டப்பணி செயலாக்கப்படுகிறது. திட்டப்பணியின் செயலாக்கம், பெரும்பாலும் விவசாயிகள் சங்கங்களின் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளைத் தனித்தனியாகவும், குழுக்களாகவும், சந்தித்து விவசாயிகள் சங்கம் அமைக்கும் பணி பாசனச் சமூக அமைப்பாளர்களால் செய்யப்படுகிறது. இவ்வாறு திட்டப்பணிகளின் செயலாக்கத்தில் விவசாயிகள் நேரிடையாகப் பங்கு பெறும் நிலையினால், விவசாயிகளுக்குமனநிறைவு ஏற்படுகிறது. இவ்வாறு அவர்கள் திட்டப் பணிகளில் ஈடுபாடு கொள்வதால், அவைகளை அவர்கள் சொந்த உடைமையாகக் கருதும் நிலை ஏற்படுகிறது. அதனால் அவை நன்முறையில் பராமரிக்கப்பட ஏதுவாகிறது.

பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்யப்படும் திட்டப்பணிகளில், 5 முதல் 8 எக்டேர் வரை செய்யப்படும் பணிகளுக்கான செலவுத் தொகை முழுவதும் மானியமாகும். 5 முதல் 8 எக்டேருக்குக் குறைவாக உள்ள பரப்பில் செய்யப்படும் திட்டப் பணிகளின் செலவில் 50 சதவிகிதம் மைய அரசும், 50 சதவிகிதம் மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. அந்தச் செலவில் மைய அரசு 25 சதவிகிதம் மாநில அரசு 25 சதவிகிதம் மானியமாக அளிக்கின்றன. எனவே, விவசாயிகள் 50 சதவிகிதம் அளவு தொகையினைச் செலுத்தினால் போதும். அந்தத் தொகையும் திட்டப் பணி செயலாக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர், மூன்றாம் ஆண்டிலிருந்து ஐந்து சம தவணைகளில் வசூல் செய்யப்படுகிறது.

# நூல் நயம்

### கவிக் கொண்டல் கவிதைகள்

**ஆசிரியர்:** மா. செங்குட்டுவன்

**வெளியீடு:**

தாமரைச் செல்வி பதிப்பகம்
14/3, பீட்டர்ஸ் குடியிருப்பு
சென்னை-600 014.

விலை: ரூ.12 பக்கம்: 127

**தி**த்திக்கும் தேன் கவிதைகளின் தொகுப்பு இது.

தமிழ், தமிழர், தமிழ்நாடு குறித்த கவிதைகளும், வரலாறு, சமுதாயம், தலைவர்கள் குறித்த கவிதைகளும் நம் எண்ணத்தை ஈர்க்கின்றன.

மறைமலை யெனுந்தமிழ் உறைமலையே
மதிநிறை உரைதரு பெருந்தருவே!
மணங்கமழ் தனித்தமிழ் உதிர்குலையே!
மறைத்தமிழ் ஒலியெழும் அதிர்கலமே!

— என்று மறைமலையடிகளாரின் மாண்பினைக் கூறும் பாங்கு மகிழ்தற் குரியது.

அறிவியல் வந்ததைக் குறிப்பிடும்போது,

'மந்திர தந்திரம் எல்லாமும்
மாயமாய் மறைந்தன அறிவியலால்!'

என்கிறார்.

எழுத்தாளன் நிலையைப் படம் பிடிக்கும் கவிஞர், 'தன்மான இலக்கியங்கள் படைப்பீர் இன்றே!' என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

நல்ல கவிதைத் தொகுப்பு.

### விளையும் பயிர்

**ஆசிரியர்:** ஸ்வீட்லின் பிரபாகரன்

**வெளியீடு:**

நவ்தின் பிரகாஷன் கேந்த்ரா
த.பெ.எண்: 1585
டெல்லி-110 006

விலை: ரூ.8.00 பக்கம்: 23

**ப**ணிக்குச் செல்லும் சிறுவர்கள் பற்றிய அலுவலகங்கள், குறைந்த கூலி, கொத்தடிமைத் தனம், கொடுமைகள், ஆகியவற்றை விவரிக்கிறது இந்நூல். இவற்றுக்கெல்லாம் வழிவகை என்ன? அதை விளக்குவதே இந்நூல். அனைவரும் படிக்கலாம்.

—குமார்

### பாட்டு வரும்

**ஆசிரியர்:**

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்,

**வெளியீடு:**

சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

விலை: ரூ.21 பக்கம்: 112

**யா**ர் கவிஞர்?

''எல்லோரும் கவிஞர்தாம்; இன்ப துன்பம்
இதயத்தை மிகவதிகம் தாக்கும் நேரம்''

எப்போது பாட்டு வரும்?

''பாட நினைத்திடு பாட்டுவரும்
பாட்டுவரும் தினம் பாட்டுவரும்''

யார் அழிவதில்லை?

''அழிவிலாக் காவி யங்கள்
ஆக்கிடும் கவிஞ ரெல்லாம்
அழிந்ததே இல்லை யிங்கே
அவனியில் பிறந்த பின்னர்''

- இப்படிக் கவிதைக் கனிகளைச் சுவைத்துக் கொண்டே போகலாம். இந்தத் தொகுப்பில் 51 கவிதைகள் உள்ளன.

இறைவனைப் பாடும் கவிஞர், இனிய காதலையும் பாடுகிறார்; அதே சமயத்தில் இந்தச் சமுதாயத்தையும் படம் பிடிக்கிறார். கவிஞரின் சிந்தனைப் பிழிவுகள், நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

### பறவைகள் பலவிதம் (இரண்டாம் பகுதி)

**ஆசிரியர்:** மலையமான்

**வெளியீடு:**

ஒளிப் பதிப்பகம்
68, ரங்காச்சாரி சாலை
சென்னை-600 018

விலை: ரூ.13 பக்கம்: 111

**ப**றவைகள் பல விதம்; ஒவ்வொன்றும் ஒரு விதம். அவற்றை விளக்குகிறது இந்நூல்.

பறவைகள் பற்றிய முக்கியமான செய்திகள் மனத்தைக் கவர்கின்றன.

ஆந்தை, இசைக்குருவி, கருங்குருவி, கிவி, குருவி, நெருப்புக்கோழி, மரங்கொத்தி, இப்படிப் பல்வேறு பறவைகள் குறித்த சுவையான தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பறவைகள் பற்றிய பழமொழிகளும், உவமைகளும் இந்நூலில் உள்ளன.

### குறைந்த செலவில் வீடு கட்டுவது எப்படி?

**ஆசிரியர்:** ஏ.கே.சேஷய்யா

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்
107 ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சூளைமேடு, சென்னை-600 094.

விலை: ரூ.12 பக்கம்: 108

**வீ**டு கட்ட சிறந்த மனைகளைத் தேர்ந்தெடுப்பது, வீட்டிற்குத் திட்டமிடுதல் முதற்கொண்டு அனைத்துத் தேவைகளையும் சிறந்த முறையில் அனுபவ ரீதியில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

சரியான மனைகள் வாங்குவது, தரமான பொருள்களை வாங்குவதன் அவசியம், கட்டடப் பொருட்களை கவனமாகப் பாதுகாத்தல், சிக்கனம், அரசிடம் விண்ணப்பித்தல், கட்டடத் தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விதம் முதலான யோசனைகளை ஆசிரியர் வழங்குகிறார்.

வீடு கட்ட முனைவோர் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

—என். இளங்கோ.

### முதல் உலகத் தமிழர் மாநாட்டு மலர்-1990 (கோலாலம்பூர்)

**வெளியீடு:**

உலகத் தமிழர் மாமன்றம்
20, ஐந்தாம் தெரு, லேக் ஏரியா,
நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

விலை: ரூ. பக்கம்: 274

**கோ**லாலம்பூரில், கடந்த ஆண்டு டிசம்பர் திங்கள் நடந்த முதல் உலகத் தமிழர் மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட கண்கவர் சிறப்பு மலர் இது.

அறிவியலின் அசுர வேகத்தைச் சித்திரிக்கும் வண்ண முகப்பு அருமை.


மலர் முழுவதும் பல்சுவைக் கட்டுரைகள் மணம் வீசுகின்றன. தித்திக்கும் தேன் கவிதைகள் கருத்தைக் கவர்கின்றன. தமிழின் தொன்மையும் சிறப்பும் பல கட்டுரை, கவிதைகளில் மிளிர்கின்றன.

பாவேந்தர் பாட்டோவியங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் காட்சிகளாகும்.

தமிழ் இலக்கியக் காட்சிகள், ஆய்வுக் கட்டுரைகள் எல்லாம் படிப்போர் சிந்தனைக்கு விருந்தூட்டுவனவாகும், செய்திகள் தொகுப்பு, அச்சு அமைப்பு அனைத்தும் அழகுற அமைந்துள்ளன. மலர்க் குழுவினரைப் பாராட்ட வேண்டும்.

மொத்தத்தில் இது ஒரு தமிழ்க் கலைக் களஞ்சியம்.

—பி.வி. கிரி



# மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

மதுரை மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளும், வளர்ச்சிப் பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன

ஆதிதிராவிடர்களுக்கு, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 2,300 கான்கிரீட் குழும வீடுகளைக் கட்டித்தர அரசு குறியீடு நிர்ணயித்ததில், இதுவரை 2,280 குழும வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 20 குழும வீடுகள் ) மார்ச் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்.


தமிழ்நாட்டிற்கு மேலும் கூடுதலாக 8,000 குழும வீடுகள் ஒதுக்கீடு செய்ததில், மதுரை மாவட்டத்திற்கு மட்டும் 1,000 குழும வீடுகள் கட்ட அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 1,000 குழும வீடுகள் கட்டும் பணி மிக விரைவாக நடைபெற்று வருகிறது. தலா ரூ.65 ஆயிரம் வீதம் மதுரை மாவட்டத்தில் 102 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.66 இலட்சத்து30 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்த்தில் 102 ஊராட்சி மன்றக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன

இதேபோல் ஒவ்வொரு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் வீதம் 18 பள்ளிக் கட்டடங்கள் கட்ட ரூ.22 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17 பள்ளிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன் மீதமுள்ள ஒரு பள்ளிக் கட்டடம் மேல்கூரை போடும் அளவிற்கு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடமும் மிக விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

இம்மாவட்டத்தில் 69 கி.மீ. தார்ச்சாலைகள் போடுவதற்காக அரசு குறியீடு நிர்ணயித்துள்ளது. 134 கி.மீ. தூரத்திற்குக் கல்சாலைகள் அமைக்க குறியீடு நிர்ணயித்ததில், 129 கி.மீ. தூரம் கல்சாலைகள் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. மேலும் இம்மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள் விவசாயம் செய்வதற்கு ஜீவன்தாரா திட்டத்தில் 100 கிணறுகள் வெட்டுவதற்கு ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன, சிறுபாசனத் திட்டத்திற்கு ரூ.140 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன் மேலும் 37.5 இலட்சம் செலவில் 35 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 8,400 நபர்களுக்குக் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயித்ததில் 9,409 நபர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 600 பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் இந்த மாதம் இறுதிக்குள் கொடுக்கப்படும். சாண எரிவாயுத் திட்டத்தில் 450 பேர்களுக்குக் குறியீடு நிர்ணயித்ததில் 400 பேர்களுக்கு மானியத்துடன் சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டு விட்டன. சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தில்ரூ.50இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் மின்னல் வேகத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்காகப் பெரியகுளம் கோட்டத்திற்கு மதுரையிலிருந்து செய்தியாளர் குழு சென்றது. வீரபாண்டிக் கிராமத்தில் சிறப்பான முறையில் நடைபெற்று வரும் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்தில் முதற்கட்டமாக 19 ஆதிதிராவிடர்களுக்குத் தலா ரூ.3,200 வீதம் ரூ.60,800 கடன் கொடுக்கப்பட்டு, பால்மாடுகள் வாங்கப்பட்டுள்ளன. இதில் ரூ.30,400 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தில் 196 உறுப்பினர்கள் உள்ளார்கள். நாள் ஒன்றுக்கு



அதோடு தொடர்புடைய தொழிலாக அமைவதாலும், எங்களுக்குப் பால் மாடு வளர்ப்பது மிகவும் லாபமாக உள்ளது''

கோட்டூர், கிராமத்தில் ரூ.2,84,000 செலவில் ஆதிதிராவிடர்களுக்கு கட்டப்பட்டுள்ள 20 கான்கிரீட் வீடுகளையும், தர்மபுரி, வைகை புதூர், ஜெயமங்கலம் ஆகிய இடங்களில் கட்டி முடிக்கப்பட்ட ஆதிதிராவிடர் குழும குடியிருப்புகளையும் செய்தியாளர்கள் சென்று பார்வையிட்டார்கள். வெங்கடாசலபுரம், இலட்சுமிபுரம் ஆகிய இடங்களில் தலா ரூ.65,000 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி மன்றக் கட்டடங்களையும், சாண எரிவாயுத் திட்டத்தில் அமைக்கப்பட்ட சாண எரிவாயு அடுப்பையும் பார்வையிட்டு அதன் பலன்களையும், நன்மைகளையும் பயனாளிகளிடத்தில் கேட்டறிந்தார்கள். வெங்கடாசலபுரத்தில் வரதவெங்கடரமண மேல்நிலைப்பள்ளியில் சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தில் 4 ஏக்கர் நிலத்தில் 16 ஆயிரம் சவுக்கு மரக்கன்றுகள் நட்டு நல்லமுறையில் வளர்க்கப்பட்டு வருவதையும், பார்த்தார்கள். அம்மாபுரம் முதல் சொக்கத்தேவன்பட்டி வரையில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகளையும் செய்தியாளர் குழு பார்வையிட்டது.

1,250 லிட்டர் பால் இச்சங்கத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் இப்பகுதி மக்கள் நல்ல பலன் பெறுகிறார்கள்.

மொட்டையாண்டி என்பவரைச் சந்தித்து, இது குறித்துக் கேட்டபோது கூறினார்—

''பால்மாடு மூலம் என் குடும்பம் நல்ல நிலையினை அடைந்துள்ளது. விவசாயக் கூலிகளான நாங்கள் காலை 5 மணிக்கு பால் கறந்து பின்னர் விவசாய வேலைக்குச் சென்று வேலை முடித்து 2 மணிக்குப் பின்னர் நானும் என் மனைவியும் அப்பகுதியிலே புல் அறுத்து மாட்டுக்குத் தீவனமாகக் கொண்டு வருவோம் பின்னர் மாலை 3 மணிக்குப்பால் கறப்போம். இவ்வாறு ஒரு நாளைக்கு ஏறக்குறைய 12 லிட்டர் பால் கறக்கிறோம். ஒரு லிட்டர் ரூ.3.70 வீதம் ரூ.44.40 வருமானம் கிடைக்கிறது. இதில் மாட்டுத் தீவனத்திற்கு ரூ.15 செலவாகிறது. மீதம் ரூ.29.40 கிடைக்கிறது. விவசாயம் எங்களுக்கு முக்கியத் தொழிலாக இருப்பதாலும் இது



# உன்பெயர்தான் வரலாற்றில் நிலைக்கணும்



மாணவர் பக்கம்:

**கலைப்பொழிலன்**

**தப்புகளைச் செய்யாமல் இருக்கணும் - தம்பி**
**தன்னலத்தை எந்நாளும் மறக்கணும்;**
**எப்பவுமே எளியோரை மதிக்கணும் - தம்பி**
**எந்நாளும் உறுதியோடு நடக்கணும்!**

**கல்வியினைக் கசடறவே கற்கணும் - தம்பி**
**கற்றபடி சிறப்பாக நடக்கணும்;**
**செல்வத்தைச் சேர்ப்பதற்கு உழைக்கணும் - தம்பி**
**சேர்த்தவற்றில் வறியவர்க்கு உதவணும்!**

**சாதிமத பேதங்களை மறுக்கணும் - உண்மை**
**சாத்திரங்கள் கூறும்நெறி சிறக்கணும்;**
**சாதனைகள் புரிந்திடவே துடிக்கணும் - உன்னைச்**
**சார்ந்தவர்கள் துயர்களைய நினைக்கணும்!**

**ஏழையென்று இகழாமல் இருக்கணும் - அவர்**
**இல்லாமை போக்கநீயும் துடிக்கணும்;**
**ஊழைவெல்ல எப்போதும் உழைக்கணும் - தம்பி!**
**உன்பெயர்தான் வரலாற்றில் நிலைக்கணும்!**

## அறிவுச் சுடர்

● ''ஸ்பா ஆப் சௌத்'' (SPA OF SOUTH) என்று எது அழைக்கப்படுகிறது?

குற்றாலம்.

'ஸ்பா என்பது பெல்ஜியத்தில் உள்ள ஒரு இடம். அங்கு பல்வேறு நீரூற்றுகள் உண்டு; அந்த நீரூற்றுகள் மருத்துவக் குணங்களைக் கொண்டதாக இருந்தன. அதனைத் தொடர்ந்து மருத்துவக் குணங்கள் அடங்கிய ஊற்று நீர் இடங்களெல்லாம் 'ஸ்பா' என்று அழைக்கப்பட்டன.

● இவ்வாண்டு என்ன ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது?

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 'இந்தியாவுக்கு வாருங்கள்' (VISIT INDIA) ஆண்டாகக் கொண்டாடப்படுகிறது.

● களக்காடு வனவிலங்கு சரணாலயத்தின் முக்கியத்துவம் என்ன?

சிங்கவால் குரங்கின் (LION TAILED MACAQUE) புகலிடம். சுலபமாகப் பயப்படக்கூடிய மிருகம். தாழ்வான பகுதிகளில் அவைகளைப் பார்க்க முடியாது. அழிந்து வரும் இவ்வினத்தைக் காப்பதற்காக இந்தச் சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. மக்களைப் பார்த்தவுடன் மரங்களின் மேல் கிளைகளில் ஒளிந்து கொள்ளும் தன்மையுடையவை.

● தமிழ்நாட்டில் எங்கெங்கு வானொலி நிலையங்கள் உள்ளன?

1. சென்னை, 2. திருச்சிராப்பள்ளி, 3. கோயம்புத்தூர், 4. திருநெல்வேலி, 5. மதுரை, 6. நாகர்கோவில். நாகர்கோவில் வானொலி நிலையம் நாட்டிலேயே முதல் மாவட்ட வானொலி நிலையம் (FIRST DISTRICT RADIO STATION) என்ற பெருமையுடையது. திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய நிலையங்கள் பொன்விழா கொண்டாடியுள்ளன. நமது நாடு சுதந்தரம் அடைந்தபொழுது ஆறே நிலையங்கள் இருந்தன. அவற்றில் இரண்டு தமிழ்நாட்டில்.

**காலமென்ற மாபெருங்கடல் நடுவே அமைந்த கலங்கரை விளக்கங்கள் புத்தகங்களே.**

**—விப்பிள்**

● ஒரு ரூபாய் நோட்டில் யாருடைய கையெழுத்து இருக்கும்?

இந்திய அரசின் நிதி அமைச்சகச் செயலர் கையெழுத்து ஒரு ரூபாய் நோட்டில் இருக்கும். இரண்டு ரூபாய்க்கு மேல் ரிசர்வ் வங்கியின் கவர்னர் கையெழுத்து இருக்கும்.

● காவிரி வடி நிலத்தில் பெட்ரோல் எங்கு அதிகமாகக் கிடைக்கிறது?

நரிமணம்.

● ஆர்.எல்.ஈ.ஜி.பி. (RLEGP) என்றால் என்ன?

ஊரக நிலமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் Rural Landless Employment Gurantee Programme.

● ஸ்ரீ ஹரிகோட்டா எங்குள்ளது? அதன் முக்கியத்துவம் என்ன?

ஆந்திரப் பிரதேசம் நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது. இந்தியாவின் செயற்கைக்கோள் செலுத்தும் இடமாகும். (SATELLITE LAUNCHING CENTRE)

● ஆப்பிள் (APPLE) என்றால் என்ன? அது எந்த ஆண்டு எங்கிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது?

அரைன் பாஸஞ்சர் பேலோடு எக்ஸ் பிரிமெண்ட் (ARAINE PASSENGER PAYLOAD EXPERIMENT) 1981-இல் பிரெஞ்ச் நாட்டில் உள்ள டிராம்கோரா (TIROMDHORA) என்ற இடத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

● நமது நாட்டில் உயர்ந்த இராணுவ (GALLANTRY) விருது எது?

பரம் வீர் சக்கரா.

● யூனியன் பிரதேசமான அந்தமான் நிக்கோபார் பகுதிகளில் மொத்தம் எத்தனைத் தீவுகள் உள்ளன?

204 தீவுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**தொகுப்பு**
**டாக்டர் ஜி.எஸ். விஜயலட்சுமி**
**- நன்றி: 'திட்டம்'**

## வளமான வாழ்வுக்கு
## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்
அளிக்கும்
# விஜய்
## உரங்கள்




**மதராஸ்**
**பெர்ட்டிலைசர்ஸ்**
**லிமிடெட்**

VIJAY

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

தேசீய பொருளாதாரத்தின்
மூலாதாரம், பொதுத்துறை...
அதன் வலிமையைப் பெருக்குவோம்.

HTA 7343



# முனையிலே முகத்து நில்

டாக்டர் சுந்தரசண்முகனார்

**1948** அல்லது 1949-ஆம் ஆண்டாயிருக்கலாம் என எண்ணுகிறேன். புதுவையில், முன்பு 'டுப்ளே தெரு' என்று பெயர் வழங்கப்பட்டதும் இப்போது 'நேருவீதி' என்று பெயர் வழங்கப்படுவதுமாகிய சிறப்புறு கடைவீதியின் மையத்தே 'கெப்ளே தியேட்டர்' என்னும் ஓர் அரங்கம் இருந்தது. அதில், மேடை நாடகம், திரையோவியம், சொற்பொழிவு முதலியவை இடம்பெற்று வந்தன.

ஒரு நாள் அந்த அரங்கத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்திற்குப் பாவேந்தர் தலைமை தாங்கிச் சொற்பொழிலாற்றினார். அவர் அங்கே கூறிய கருத்துகளுள் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்:

ஔவையார் தம் 'ஆத்திசூடி' என்னும் நூலில், போர்க்களத்தில் சென்று நிற்காதே என்னும் பொருளில் 'முனை முகத்து நில்லேல்' என்று எழுதி வைத்துள்ளார். இது எவ்வாறு பொருந்தும்? புதுச்சேரியில் சண்டை நடந்தால் நான் திண்டிவனத்துக்கு ஓடி விடுவதா? ஔவையார் கூறியிருப்பது கோழைத் தனத்துக்கு இட்ட வித்தாகும். அதனால், சுப்பிரமணிய பாரதியார் தமது 'புதிய ஆத்திசூடி' என்னும் நூலில் போர்க்களத்திலே போய்

# முத்தமிழிலும் வல்லவர்

ஒரு சிலருக்கு எழுத்தாற்றல் இருக்கும்- ஒரு சிலருக்குச் சொல்லாற்றல் மாத்திரம் இருக்கும்- எழுதும் வன்மை, சொல்லும் வன்மை இரண்டும் அமையப் பெற்றவர் எங்களாசிரியர் பாரதிதாசனார். கவி எழுதுவதற்கும் பாவேந்தரிடமே நாங்கள் கற்றுக் கொண்டோம்; ஒரே முறையில் ''தமிழ் பிரவே'' தேர்வில் பெரும் பாலோர் வெற்றி பெற்றோம். பின்னர், ஆசிரியர் பயிற்சிக்கும், வகுப்பில் பாடங்கள் நடத்தும் முறைகளையும் நாளடைவில் எங்களுக்குக் கற்றுக் கொடுத்து வந்தார். பிரஞ்சு அரசு நடத்திய ஆசிரியர் பணித் தேர்வில் முதல் முறையிலேயே வெற்றி பெற்று நான் ஆசிரியர் பணியில் அமர்ந்தேன்; அவர் மறைவு வரையில் மாதத்தில் ஒரு முறையாவது அவரைப் போய்ப் பார்க்காமல் இருந்ததில்லை. அதன் பிறகும் கூட நான் அவர் குடும்பத்தவரைப் பார்க்காமலிருந்ததில்லை!

ரெட்டியார்பாளையம் எமேன் சரவானும், பாரதிதாசனாரும் சிறந்த நண்பர்கள். எமேன் சரவான் ''பாரத மாதா'' பத்திரிகை நடத்தி வந்தார். அதற்குப் பாரதிதாசனார் பாடல்கள் எழுதிக் கொடுத்தார். ஒருமுறை ஆயுதபூசையின்போது, ரெட்டியார்பாளையம், ''அன்னை நிலையம்'' பள்ளியில், ''கொய்யாக் கனி'' நாடகத்தை, பொன்னு தெலாபோன், பிரஞ்சு பேராசிரியர் லாம்பர் சரவான் தலைமையில் நடத்தினார். சந்தனசாமியும் அதில் நடித்தார். அந்நாடகத்திற்குப் பாவேந்தர் எழுதிய பாடல்களில் ஒன்று பின்வருமாறு தொடங்கியது:

''கண்டதும் காதல் கொண்டேனே-
இனியானே, பெருமானே,
கெண்டை தானோ விழிகள்!
கற்கண்டு தானோ சொற்கள்!
இனியானே , நான் சகியேனே,
பூமானே!''

பாரதிதாசனார் சிறந்த நாடக ஆசிரியராகவும் இருந்தார்- கல்வித் துறைத் தலைவர் போல் எழா செலேன் அவர்கள் தன் குடும்பத்துடன் அந்த நாடகத்தைக் காண வந்தார்.

புதுவை, கல்விக் கழகத் தலைவர், இரா.தேசிகப் பிள்ளை அவர்களுடனும் பாரதிதாசனார் நெருங்கிய நண்பராக இருந்தார். இவ்வாறு, பாவேந்தர், இயல், இசை, நாடகம், முத்தமிழிலும் வல்லவராகவும், நல்லாசிரியராகவும் சிறந்து விளங்கினார். திரைப்படத் துறையில், பி.ஜி.வேங்கடேசனுக்கும், மங்களத் திற்கும் பாடல்கள் எழுதக் கற்றுக் கொடுத்தார். பாரதிதாசனார் புகழ் வளர்க! வாழ்க!

—புலவர் பால.எல்லப்பிள்ளை



**பொன்னாடையும், பொற்கிழியும் வழங்கப்பட்ட மறுநாளில் எடுக்கப்பட்ட படம். பாவேந்தருடன், பேரறிஞர் அண்ணா, என்.வி. நடராசன், டி.வி. நாராயணசாமி மற்றும் பல நண்பர்கள் உள்ளனர்.**

முதலிலே நில் என்னும் பொருளில் 'முனையிலே முகத்து நில்' என்று எழுதியுள்ளார்- என்பதாகக் கவிஞர் ஒரு கருத்து வெளியிட்டார். இந்தக் கருத்து எனக்குப் பிடித்தமாக இல்லை.

அப்போது கவிஞர் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று கொண்டிருந்தேன். ஒரு நாள் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டுக் கவிஞரிடம் பின்வருமாறு கூறினேன்:-

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் சிறுசிறு பகுதிகட்கெல்லாம் அரசர்கள் இருந்து தமக்குள் அடிக்கடி போர் செய்து கொண்டிருந்தனர். நாட்டில் நிகழ்ந்த பல்வேறு போர்க் கொடுமைகளைக் கண்டு வருந்திய அன்னை ஔவையார் உலகில் இப்போரே கூடாது எனப்பட்டறிவின் வாயிலாகத் தமது அறிவுரையை உலகத்தாருக்கு வழங்கினார். மேலும், ஔவையார் அதே ஆத்திசூடி நூலில் மற்றோரிடத்தில், உலகத்தில் போரே நடக்கக் கூடாது என்னும் பொருளில் 'போர்த்தொழில் புரியேல்' என்று கூறிவைத்துள்ளார். இதற்கும் ஏட்டிக்குப் போட்டியாகப் பாரதியார் தமது புதிய ஆத்திசூடி நூலில் 'போர்த் தொழில் பழகு' என்று எழுதிவைத்துள்ளார். ஆனால், பாரதியாரின் பாடலுக்கு ஒரு வகையான வழுவமைதி கூறலாம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டு கொண்டிருந்த காலத்தில், இந்திய மக்களுட் பலர் அவர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தனர். அவ்விடுதலை வீரர்களுள் பாரதியாரும் ஒருவர். எனவே, இந்திய மக்கட்கு வீர உணர்வை ஊட்டுவதற்காக, அவர், 'முனையிலே முகத்து நில்', 'போர்த் தொழில் பழகு' என்னும் புரட்சிக் கருத்தை வீசியிருக்கலாம். இது காலச் சூழ்நிலைக்கு ஏற்பக் கூறப்பட்டிருக்கலாம்.

எனவே, ஔவையாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் தர வேண்டும்; பாரதியாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் தரவேண்டும். ஆனால், போர்த்தொழில் புரிவது இந்தக் காலத்திற்கு ஏலாதது; இந்தக் காலத்துக்கு ஔவையார் கூற்றே பொருந்தும் - என்று கவிஞரிடம் துணிந்து கூறினேன். ஈண்டு, கவிஞரின் படைப்பாகிய

புதியதோர் உலகம் செய்வோம்-
கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு
சாய்ப்போம்'

(பாரதிதாசன் கவிதைகள்- முதல்தொகுதி) என்னும் பாடல் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது.

நான் கூறியதை அமைதியாகவும் வியப்புடனும் கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் பின்வருமாறு கூறி என்னை மடக்கி விட்டார்:

போர் கூடாதுதான். ஔவையார் கூறியிருப்பதும் ஒரு வகையில் சரிதான். ஆனால் ஔவையாரின் கூற்று இந்தக் காலத்திற்குப் பொருந்தாது. ஏனெனில், நாம் தமிழ் நாட்டில் வீழ்ந்து கிடக்கின்ற தமிழை மீட்க வேண்டும் - சாதி மதப் பூசல்களை வெல்ல வேண்டும் - அதற்காக நம் மக்கட்கு மற உணர்வு ஊட்டப்பட வேண்டும். அந்தப் பணிக்கு உறுதுணையாக நாம் பாரதியாரின் பாடல்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்-என்று கவிஞர் கூறினார். நான் ஏற்றுக் கொண்டவன் போல் வாய் பேசாது இருந்து விட்டேன்.

(— 'பாரதிதாசரொடு பல ஆண்டுகள்' என்ற நூலிலிருந்து.)

★ தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அல்ல; பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது; இது அடிமைத் தனத்தைவிட மிக மோசமானது!

—டாக்டர் அம்பேத்கர்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்



# மீன் வளர்ச்சி மீனவர் மேம்பாடு

**பொ**துமக்களின் மீன் உணவு தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகவும் தீவிர நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை 10.12.1980 முதல் திருநெல்வேலியில் தொடங்கப்பட்டது. இம்முகமையின் பணிகள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன்வளர்ப்பிற்குத் தகுதியான நீர்நிலைகளைச் சீரமைப்புச் செய்து மீன் உற்பத்திக்கான அதிகப் பட்ச அளவு நீர்ப்பரப்பினைத் தயார் செய்தல்; மீன்வளர்ப்பில் நவீன தொழில் நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்து பொதுமக்களின் மீன் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்தல்; செயல்முறைகளை தீவிரப்படுத்துவதன் மூலம் மேன்மேலும் அதிக அளவு நீர்ப்பரப்பினை மீன் வளர்ப்பிற்குக் கொண்டு வருதல்; மீன் வளர்ப்பதற்கு முன்வரும் நபர்களுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளில் பயிற்சி அளித்து, மீன் வளர்ப்பினால் ஏற்படும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தி, அதன்மூலம் புறநகர் வாழ் மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துதல் ஆகியவை இம்முகமையின் குறிக்கோள்களாகும்.

திருநெல்வேலி, சிதம்பரனார் மாவட்டங்களிலுள்ள நீர்நிலைகளில் மீன் வளர்ப்பிற்குத் தகுதி வாய்ந்தவை எவை என்பது பற்றி அளவாய்வு செய்யப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட நீர்நிலைகள், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து (வருவாய்த்துறை, பஞ்சாயத்து, நகராட்சி, அறநிலையத்துறை மற்றும் தனியார்) நீண்டகால குத்தகைக்கு (10 ஆண்டுகள்) முகமையின் கீழ் முதல் கட்டமாக எடுக்கப்படுகிறது. மீன் வளர்ப்பினை மேற்கொள்ளுவதற்காக விண்ணப்பித்துள்ள நபர்களில் தகுதியானவர்கள் துணைக் குழுவின் மூலம் தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். ஒரு எக்டேர் நீர்ப்பரப்பளவுள்ள குளம் ஒரு நபருக்கு ஒதுக்கப்படுகிறது. அதற்கு மேல் உள்ள நீர்ப்பரப்பிற்கு ஏற்றவாறு மீன்வளர்ப்போர் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டு நீர்நிலைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மீன்வளர்ப்போருக்கு மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு ஏற்றவாறு குளங்களைத் தயார் செய்தல், உரமிடுதல், மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், உணவு இடுதல் மற்றும் இனம் சம்பந்தமாக முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. குளங்கள் தயார் செய்யப்

**ஆர்.எஸ்.இராஜன்**
முதன்மை நிர்வாக அலுவலர்,
மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை,
திருநெல்வேலி.

பட்ட பிறகு கலப்பு இன மீன் வளர்ப்பிற்காக கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதாக்கெண்டை, வெள்ளிக்கெண்டை, புல்கெண்டை இன மீன்குஞ்சுகளை இருப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விரைவில் வளர்ச்சி அடையும் மேற்கண்ட இன மீன் குஞ்சுகள் முகமையின் மூலமாக வாங்கப்பட்டு ஒரு எக்டேருக்கு 5,000 மீன்குஞ்சுகள் வீதம் இருப்பு செய்யப்படுகிறது. பின்னர் மீன் குஞ்சுகள் போதுமான அளவு வளர்ச்சி அடைந்து விட்டனவா என்றும் உணவு மற்றும் உரம் இடும் முறையில் மாற்றம் ஏதாவது தேவையா என்பதை அறியவும் சோதனை மீன் பிடிப்பு பணி அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு மாதமும் இதன் வளர்ச்சி பற்றி அறியப்பட்டு விரிவாக்கப் பணி பார்க்கப்படுகிறது. 8 முதல் 10 மாதங்களானதும் மீன்களைப் பிடித்து விற்பனை செய்து மீன் வளர்ப்போருக்கும், பொது மக்களுக்கும் உணவுக்கு மீன் கிடைக்கவும் இம்முகமையின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இதன் மூலமாக மீன் வளர்ப்போருக்குச் சுயவேலைவாய்ப்பு அளிப்பதுடன் இலாபகரமான தொழிலுக்கு உதவுவதோடு, மீன் உற்பத்தியையும் ஒரு எக்டேருக்கு 1,000 கிலோ முதல் 1,500 கிலோ வரை பெருக்குவதற்கும் வழி வகுக்கப்படுகிறது. ஒரு எக்டேருக்கு 3,000 கிலோ மீன் உற்பத்தி என்ற உச்சநிலைக் குறியீட்டை அடைய குறிப்பிட்ட சில குளங்களைத் தேர்வு செய்து அதில் இம்முகமையின் நவீன திட்டங்களையும் தொழில் நுட்ப உதவிகளையும் செயல்படுத்தி ஏனைய மீன் வளர்ப்போருக்கு உதாரணமாகவும் ஆர்வத்தினைப் பெருக்குவதற்கும் முகமை செயலாற்றி வருகிறது. வங்கிகள் மூலமாக மீன்குஞ்சு கடன், மராமத்துக் கடன் முதலியவைகள் மீன் வளர்ப்போருக்கு கிடைக்க உதவி செய்வதன் மூலம் அவர்களின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தினையும் இம்முகமையின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது.

முகமையினால் தேர்வு செய்யப்பட்ட குளங்களுக்கு முகமையின் மூலம் விநியோகிக்கப்படும் உயர் தரப் பெருங்கெண்டை மீன்குஞ்சுகளின் தொகையை ஒரு தேசிய வங்கி மூலம் உடனாக மீன் வளர்ப்போர் பெற இம்முகமை ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு மீன்குஞ்சுகள் வாங்குவதற்காகவும் உரம் மற்றும் உணவு வாங்குவதற்காகவும் மீன் வளர்ப்போர். பெறும் உள்ளீட்டு கடனில் முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகிதம் மானியம் முகமையினால் வழங்கப்படுகிறது. இது போன்று குளத்தை மேம்படுத்தவும் மராமத்து பணி பார்க்கவும் செலவிடப்படும் தொகைக்கு முதல் ஆண்டிற்கு மட்டும் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது.



• நமக்குப் பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ, அதையே நாமும் பிறருக்குச் செய்வோமாக!

—காந்தியடிகள்

கடந்த 1990-91-ஆம் ஆண்டில் இம்முகமையின் திட்டத்தின் கீழ் 234.05 எக்டேர் பரப்பளவுள்ள 92 குளங்களில் 14,45,100 உயர் தரக் கெண்டை மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆண்டில் 1,87,380.650 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.10,52,659.55-க்கு மீன்வளர்ப்போர் அதனை விற்றுப் பயனடைந்துள்ளனர்.

இதுவரை இம்முகமையின் திட்டத்தினால் 306.38 எக்டேர் பரப்பளவுக்கு 131 குளங்கள் மீன் வளர்ப்பிற்காக மீன் வளர்ப்போருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 347 நபர்களுக்கு மீன்வளர்ப்பு பற்றிய குறுகிய காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1980-81-ஆம் ஆண்டிலிருந்து 1990-91-ஆம் ஆண்டு வரை 94,55,775 உயர்தர மீன்குஞ்சுகள் குளங்களில் இருப்பு செய்யப்பட்டு வளர்த்து ரூ.55,45,982.40 மதிப்புடைய 12,60,905.800 கிலோ மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இவ்வகையில் ரூ.75,853.00 உள்ளீட்டு மானியத் தொகையாக இம்முகமையினால் மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுநாள்வரை 106.38 எக்டேர் பரப்பளவு உள்ள 43 குளங்களில் மராமத்து பணி பார்க்கப்பட்டு அதற்காக ரூ.21,473.00 மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள முகமைக் குளங்களுக்கு விரலளவு மீன்குஞ்சுகள் பொதுவாக பல்வேறு இடங்களிலிருந்து வாங்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. வளர்ந்துவரும் இம்முகமைத் திட்டத்திற்கு ஈடு செய்யவும், பிற நிலையங்களிலிருந்து வாங்கப்படும் தேவையை இயன்ற அளவு தவிர்க்கவும் இம்முகமையின் மூலமாக மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து, வளர்த்து, தரமுள்ள விரல் அளவு மீன்குஞ்சுகளை மீன் வளர்ப்போருக்கு விநியோகிக்கும் வகையில் ரூ.5.01 இலட்சம் மீன் பண்ணை ஒன்று தேசிய புறநகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசால் மானியத்துடன் அனுமதிக்கப்பட்டு இம்மாவட்டத்திலிருக்கும் மணிமுத்தாறில் கட்டப்பட்டுள்ளது. இதன்படி 16 நாற்றங்கால்கள், ஒரு பம்ப் அறை, ஒரு பண்டக அறை அம்பை ஊராட்சி மூலமாக கட்டப்பட்டு மீன்குஞ்சு வளர்ப்பு பணி 10.9.85 முதல் நடைபெற்று வருகிறது.

1990-91-ஆம் ஆண்டில் அரசின் குறியீடான 55 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு சாதனை புரியப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,05,000 விரலளவு மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

**நுண்மீன்குஞ்சுகள் வளர்த்தல்**

இத்திட்டத்தின்படி மீன் வளர்ப்போர் மீன்குஞ்சு வளர்ப்பு பற்றி அறிந்து செயல்பட்டு மிதவைக் கூடுகள் மூலமாக அதனை வளர்த்து மீன்குஞ்சுகளை விற்று இலாபம் சம்பாதிக்கும் பொருட்டு இம்முகமை மீன்வளர்ப்போருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5 மீன்வளர்ப்போர் பயனடைந்து உள்ளார்கள். ஒவ்வொருவருக்கும் மானிய விலையில் 5 மிதவைக் கூடுகள் வழங்கப்பட்டுள்ளன.

# பாவேந்தரின் 'பாண்டியன் பரிசு' ஒரு புதிய பார்வை

பேராசிரியர்
டாக்டர் மா. சேசையா

**பா**வேந்தர் பாரதிதாசன் பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சார்ந்தவர். பாரதி அடிமைப்பட்ட நாட்டின் விடுதலைக்காகப் பாடினார் என்றால், பாரதிதாசன் நாட்டு மக்களின் பொருளாதார அரசியல் விடுதலைக்காகப் பாட்டிசைத்தார். பாரதி 'எளிய பதங்கள் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றையுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருகின்றான்' என்று கூறி, பைந்தமிழ் நாட்டிற்குப் 'பாஞ்சாலி சபதம்' தந்தான். அதைப் பின்பற்றி பாரதிதாசனும் 'பாண்டியன் பரிசை'த் தந்தார். தன் குருநாதன் பாரதி கூறிய இலக்கணத்திற்கு ஓர் இலக்கியமாக இருக்குமாறு செய்துள்ளார். தமது 'பாண்டியன் பரிசை'. தம் கற்பனையில் முகிழ்த்து எழுந்த ஒரு கதைக் கருவை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மரபிற்கு ஒரு சிறிதும் முரணாகாவாறு இக்காவியத்தை ஏறக்குறைய நானூறு எண் சீர் விருத்தங்களால் ஆக்கியுள்ளார்.

'பாண்டியன் பரிசை'ப் படிக்கின்றபொழுது நாம் இன்றைய தமிழ் உலகை மறந்து பழந்தமிழ் உலகில் உலவித்திரியும் உணர்வு ஏற்படுகின்றது. அதோடு, தமிழ்க் காவியம் ஒன்றை இத்துணை எளிமையான சொற்களால் ஏற்றமுடன் நடத்திச் செல்கிறாரே பாவேந்தர் என்ற பெருமகிழ்வும் ஏற்படுகின்றது. பாவேந்தரே தன் முன்னுரையில் ''தொடக்கப் படிப்பினரும் புரிந்து கொண்டார்கள் இச்செய்யுளின் பொருளை எனின் - அது தான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது'' என்று தமது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவ்வெண்ணம் முற்ற முடிய ஈடேறியது என்றால் அது மிகையல்ல.

ஆனால், அதேசமயத்தில் எளிய கவிதை என்று கூறி 'குழந்தைக் கவிதை' செய்துள்ளாரா என்றால் இல்லை, இல்லை, முக்காலும் இல்லை. பாவேந்தரின் சொற்களைப் பாலர்களும் புரிந்து கொள்வர். ஆனால், கூறவந்த பொருளை பூரணமாகக்கூறும் கூரிய சொற்கள் அவர்தம் சொற்கள். வெறும் உண்மையை மட்டும் அலப்பிக்கொட்டும் வெற்றுச் சொற்கள் அல்ல, மாறாக இதயத்தில் ஈட்டி போல் பாயும் ஏற்றமிகு எளிய சொற்கள். உணர்ச்சியைக்கொட்டி நம்மை காவியக் கோபுரத்தின் உச்சிக்குக் கொண்டு வைக்கும் ஒப்பற்ற சொற்கள். அறிஞர் ஜோவ்பர்ட் கூறுவது போல கவிதையில் வரும் ஒவ்வொரு சொல்லும் சுருதிகூட்டிய யாழின் நரம்பைச் சுண்டியவுடனே அதினின்றும் துள்ளியெழும் சுநாதம் போல் எழ வேண்டும். அப்படி எழும் பண்ணொலியில் பல்வேறு அதிர்வுகள் உதிரும். அதுபோல் கவிதைச் சொல் ஒவ்வொன்றிலும் பல்வேறு அதிர்வுகள் பாய்ந்து எழும்.

பாரதிதாசனிடம் மற்றொரு சிறப்பு, எதுகை, மோனை, இயைபு நயங்கள் உள்ள சொற்கள் அவரை அறியாமலேயே ஓடி வந்து அவர்தம் கவிதையில் உட்கார்ந்து கொள்ளுகின்றன. வேலன் பேழை தூக்கி வரும்போது அன்னம் இறந்த செய்தி கேட்டு அலறுகிறான் அப்போது,

பொய்யாத பாண்டியனார் பரிசை, உண்மை புலப்படுத்தும் பட்டயத்தைக் கொண்டு வந்து



வையாயோ என்றாயே வஞ்சி, தூக்கி வந்தேனே செந்தேனே எனக்கேன் பேழை' என்று அலறுகின்றான். அவ்வாறு அரற்றுகின்ற போது 'வந்தேனே', என்ற சொல்லுக் கருத்து எதுகை நயமும் இயைபும் கொண்டு, எளிய ஆனால் மிகப் பொருத்தமான மற்றொரு சொல் 'செந்தேனே' என்று வந்து விழுகிறது. 'வந்தேனே' என்பது வினைச் சொல். 'செந்தேனே' என்பது பெயர்ச் சொல். ஆனால் கவிதையில் இரண்டும் தம் 'வினை' 'பெயர்' நிலை ஒழித்து ஒரு தன்மைப்பட்டு ஒன்றிக் கலந்து இன்னொலி எழுப்பி நிற்கின்றன, கதைத் தலைவன், தலைவியரைப் போல.

அடுத்து கதைக்கு இன்றியமையாதது 'உணர்ச்சி'. உணர்ச்சிஅற்ற ஒன்றைக் கவிதை என்று கூறாது, வெறும் சொற்கூடு என்று சொல்ல முடியும். கவிதை உணர்ச்சிக் களஞ்சியம்; கவிதை உணர்ச்சியின் நிலைக்களம், வற்றாது ஓடி வளம் பெருக்கும் கங்கை போல் குன்றாது உணர்ச்சியைக் கொட்டி இதய நிலத்தை வளப்படுத்தும் இறவா ஆறு தான் கவிதை. நீரில்லா ஆற்றை நாம் மதியாதது போல், உணர்ச்சியற்ற கவிதையை மதிக்க இயலாது.

பாரதிதாசனின் 'பரிசில்' உணர்ச்சிக்குப் பஞ்சமேது. பக்கத்திற்குப் பக்கம் உணர்ச்சி கடலெனப் பொங்கிக்காட்டாறென ஓடி இதயத்தில் கரைகட்டிய நதியெனப் பாய்கிறது.

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒன்று பதம்' என்பது போல் ஒன்று சுவைப்போம். வேலன் அரற்றுகிறான்-கேளுங்கள். ''வெண்ணிலவை எட்டிவிட்டேன் என்றிருந்தேன், விண்ணின்று வீழ்ந்தேனே! தென்றல் காற்றின் பண்ணமைந்த தமிழ்ப் பொதிகை எனக்கே என்றேன். பாழ்ங்கிணற்றில் தூக்கி எறியப் பெற்றேனே, திண்ணெனவே இழந்தேனே! பசியைப் போக்கத் திரட்டியமுப் பழச்சாறே! என்னை விட்டு மண்ணடைந்தாய்! திருவிளக்கே இந்த வையகம் மடியவில்லை எனில் எனக்கிங் கென்ன வேலை'' இவ்வாறு உணர்ச்சி குமுறி எழுந்து கொந்தளித்துப் பாயும் கொஞ்சு தமிழ்ச் செய்யுட்கள் மலிந்த காவியம் இக்காவியம்.

அடுத்து, கவிதைக்கு அணி செய்வது அணியாகும். அணிகளுக் கெல்லாம் ஆதித்தாய் உவமை யாகும். இதனை, நம் புரட்சிக் கவி நயமுடன் பலவிடங்களில் கையாண் டுள்ளார். சில புதுமை வழியும் பொன்னான உவமைகளையும் கையாண்டுள்ளார்.

கிழவி 'ஆத்தாவும்' அவள் மகன் வீரப்பனும் வறுமையுற்ற போதும் இணைபிரியா திருந்தனர் என் பதைக்கூற வந்த நம் கவி வேந்தர் 'தேனடையும் ஈயும்போல் மகனும் தானும் வறுமையினும் செம்மை யினைக் காண்பா ராகி'' என்கிறார். தாய்க்கும் சேய்க்கும் தேனடையும் ஈயும் முறையே உவமையாகக் கூறப் படுகிறது. தேனடையும் ஈயும் என்பது பிரியாத நிலைக்குச் சிறந்த உவமை யாவதோடு, 'தேனடை' நமக்கு 'இனிப்பை' - இனிமையை நினை வூட்டுகின்றது. தாயும் மகனும் பிரியாது இணைந்திருந்த நிலையைக் கூற இதனினும் சிறந்த உவமை வேறுண்டோ?

இவ்வண்ணம், தம் குருநாதன் பாரதி எழுப்பிய குரலுக்குச் செவி சாய்த்து எழிற்காவியமாக இதனைப் படைத்து, தமிழறிந்த அனைவரும் படித்து மகிழும்படி செய்துள்ளார் கவிவேந்தர் பாரதிதாசன்.

''எளியநடை ஒன்றாலேயே'' தமிழின் மேன்மையை - தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை'' என்று முன்னுரையில் எக்காளமிடும் பாவேந்தர் அதில் அரிய வெற்றி கண்டுள்ளார் என் றால் அது மிகையாகாது. பழமை யைப் போற்றி, புதுமையைப் புகுத் திய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எப்பொருளையும் ஏற்றமிகு எளிய சொல்வழி எடுத்துரைக்கும் ஏந்தல் பாரதிதாசன். பொங்கும் இன்பத் தமிழால் தமிழனின் பூட்டிய நெஞ்சக் கதவை உடைத்துத் திறந்த பொற் புடைக் கவிஞன் பாரதிதாசன். பைந் தமிழ் வழி பாங்கான கவிதை செய்து பாரெல்லாம் போற்ற வாழும் பாவேந்தர் பாரதிதாசன். பாண்டியன் பரிசை நமக்குத் தந்த பாவலர் தலைவன் பாரதிதாசன்.

வாழ்க! பாவேந்தர்.

# கவிதை மலர்கள்



## புதுவைக் குயில்!

—கவிஞர் முருகுவண்ணன்

பாரதியார் கண்ட புதுவைக்குயில்!-நான்கு
பாவும் விரித்த பைந் தோகைமயில்!
பாரதி தாசன் நீ புரட்சிக் கனல்!-நாட்டில்
பாய்ந்த தன் மானக் கவிதைப் புனல்!

பாரதி தாசன்நின் கவிதை எலாம்-கமழ்
பைந்தமிழ்ப் பூம்பொழில்; தேனமுதம்!
பாரதி தாசன்நின் பாடல் எலாம்-தமிழ்ப்,
பண்பாட்டு வானின் 'இசையமுதம்!

## குடும்ப விளக்கை ஏற்றியவன்!

—கவிஞர் பூங்கோவன்

கொஞ்சும் தமிழைப் போற்றியவன் - நல்ல
குடும்ப விளக்கை ஏற்றியவன்!
அஞ்சும் தமிழரை மாற்றியவன்-பெண்
அடிமைத் தனத்தைத் தூற்றியவன்!

செந்தமிழ்த் தேனீயாய்ச் சுற்றியவன்-என்றும்
சீர்மிகுங் கொள்கையைப் பற்றியவன்!
சிந்தனை வளரத் தூண்டியவன்;-தமிழர்
சேர்ந்து வாழ்ந்திட வேண்டியவன்!

## தமிழின் சுவைக்கீடோ?

—புலவர் இரா.சுப்பிரமணியன்

குயில்பாட்டும், கோல மயில்பாட்டும், திங்கள்
வெயில்பாட்டும், விண்மீன்கள் பாட்டும்-
மயல்காட்டும்
கன்னித் தமிழ்வாய், கனிவாய், துணிவாயாம்
பன்மொழிவாய் பாவேந்தர் வாய்!

கனிச்சுவையும் முற்றல் கழைச்சுவையும் பாலின்
தனிச்சுவையும் தேனின் சுவையும்-இனிதெனினும்
எந்தம் தமிழின் சுவைக்கீடோ? பாவேந்தர்
தந்தபா வுக்கெப்பா நேர்.

# கலப்படமும் நுகர்வோர் விழிப்புணர்வும்

**கே.மலைச்சாமி இ.ஆ.ப.**
**ஆணையாளர்,**
**உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை**

நம்மில் பலரும், கலப்படத்தைப் பற்றிக் கவலையுடன் பேசிக் கொள்கிறோம். உணவுப் பொருட்களில் கலப்படம், கட்டடப் பொருட்களில் கலப்படம், பெட்ரோல், டீசலில் கலப்படம் என்று எந்தப் பொருளை எடுத்தாலும் கலப்படம் செய்து கொள்ளை லாபம் அடித்து குறுகிய காலத்தில் பெரும் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாய் பல வியாபாரிகள் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட பொருட்களை வாங்கி உபயோகிப்போர், கலப்படமா? இல்லையா? என்று பார்த்த அளவில் கண்டுபிடிக்காத வரையில், மிகவும் திறமையாகக் கலப்படம் செய்கின்றனர்.

அரிசியில் அரிசி போன்ற கல்லையும், நெய்யில் இதரக் கொழுப்புகளையும், தேனில் வெல்லப் பாகினையும், சமையல் எண்ணைகளில் விலை குறைந்த வாசனையற்ற ரப்பர் எண்ணெய் போன்றவற்றையும், துவரம் பருப்பில் கேசரி பருப்பையும் கலந்து விடுகின்றனர்.

இப்படிப்பட்ட கலப்படப் பொருட்களை உண்பவர்கள், உடல் ஊனம், கண்பார்வை இழப்பு, உடல் வாதம், மாரடைப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் விரைவில் தாக்கப்படுகிறார்கள்.

கட்டடப் பொருட்களான சிமெண்டில் சாம்பல் அல்லது வேறுமாதிரியான களிமண் பொடி ஆகியவற்றைக் கலந்து விற்கிறார்கள். இதனால் கட்டப்படும் கட்டடம் என்ன ஆகும்? பெட்ரோலில் விலை குறைந்த டீசலையும், டீசலுடன் மண்ணெண்ணையும் கலக்கிறார்கள். இவற்றை உபயோகிப்பதால் வண்டிகள் கூடிய சீக்கிரம் பழுதடைந்து பெரிய பொருட் செலவை ஏற்படுத்தி விடுகின்றன.

இப்படிப்பட்ட கலப்படக் கொடுமைகளுக்கு முடிவு? இதனை ஒரு விழிப்புள்ள நுகர்வோர் இயக்கத்தினாலேயே முறியடிக்க முடியும். பல்வேறு நோய்களுக்கு மூலகாரணமே உணவுப் பொருட்களில் கலப்படம்தான் என்பது மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட வேண்டும். இக்கலப்படக் கொடுமைகளைத் தவிர்ப்பதில் நுகர்வோரின் பணிதான் முதலில் ஆரம்பிக்கிறது. எந்தப் பொருளை வாங்கினாலும் அதன் தரத்தினை அறிந்த பிறகே வாங்குவது என்பதனை உறுதியாகக் கொள்ள வேண்டும்.

படித்த, நகர்ப்புற மக்களுக்கு இது சாத்தியமாகலாம். படிப்பறிவில்லாத மற்றும் கிராமப்புற மக்களின் நிலை? இங்குதான் பலதரப்பினரின் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

நுகர்வோர் நலனுக்காகச் செயல்படும் சமூகசேவை நிறுவனங்கள், கிராமங்களில் படிப்பறிவு குறைந்த மக்களிடையே சென்று, கலப்படக் கொடுமைகளைப்பற்றி பிரசாரம் செய்யவேண்டும். எப்படியெல்லாம் கலப்படம் செய்யப்படுகிறது? சில எளிய முறைகளால் எப்படி கலப்படத்தை கண்டுகொள்ளலாம்? என்பன போன்றவற்றை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தரத்திற்கும் கலப்படமின்மைக்கும், சுத்தத்திற்கும் உத்தரவாதம் அளிக்கும் "அக்மார்க்" முத்திரையிட்ட உணவுப் பொருட்களையும், ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட இதர வீட்டு உபயோகப் பொருட்களையும், நுகர்வோர் வாங்கி உபயோகிக்க ஆரம்பித்தால், கலப்படப் பொருட்கள் சந்தைக்கு வருவது நின்று விடும். மேலும் விலை குறைவாக உள்ளது என்று தரமற்ற பொருட்களை நாடுவது தீராத துன்பத்திற்கு வழிவகுக்கும். அக்மார்க், ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் போலிப் பொருட்கள் வராதா என்ற சந்தேகம் ஏற்படலாம். இப்படிப்பட்டவற்றை விற்றால் தண்டனை மிகவும் கடுமையானதாயிருக்கும் என்பது வியாபாரிக்குத் தெரியுமாதலால் கலப்படத்தின் அளவு நிச்சயம் குறைந்துவிடும்.

ஒரு பொருளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதனை உறுதியிட்டுக் கூற ஒரு ஆய்வுக் கூடத்தாலேயே முடியும். இப்படிப்பட்ட அரசு ஆய்வுக்கூடங்கள், சென்னையில் கிங் நிலையம் (கிண்டி), பாளையங்கோட்டை, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. இவை சுகாதாரத் துறையின் கீழ் இயங்குகின்றன.

கலப்படமாக இருக்கலாம் என்று சந்தேகப்படும் பொருட்களை மாதிரி எடுத்து, இந்த ஆய்வுக்கூடங்களுக்கு அனுப்ப நுகர்வோருக்கே தற்போது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1954-ஆம் ஆண்டின் உணவுக் கலப்படத் தடைச் சட்டத்தின் பிரிவு 12-ன்படி மாதிரிகளை எடுத்து அனுப்பவும், கலப்படம் செய்யப்பட்டுள்ள தாய் உறுதியானால், இச்சட்டம் பிரிவு

20ன்படி வணிகரின் மீது குற்ற வழக்கு தொடரவும் நுகர்வோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் உள்ளது என்பது இன்னமும், நுகர்வோர் பலருக்குத் தெரியாததே கலப்படப் பேர்வழிகள் இன்னமும் அழிந்து போகாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

கலப்படம் பற்றி நுகர்வோரிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்ற நிலை ஏற்பட்டால், கலப்படக்காரர்களும் தரமான பொருட்களை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

தரமான பொருட்கள் நுகர்வோருக்குக் கிடைக்கும் நோக்கில் அரிசி, நெல், கோதுமை, சோளம், கம்பு உள்ளிட்ட பல தானியங்கள், பயறுவகைகள், பருப்பு, சமையல் எண்ணெய்கள், தேயிலை, காப்பி பொடிகள், பால், தேன், நெய் போன்ற 30 அத்தியாவசியப் பண்டங்களுக்கு அரசு தரம் நிர்ணயம் செய்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குக் குறைவான தரத்தில் விற்பனை செய்வது கூட, கடுமையான தண்டனைக்கு ஆளாக்கும். கலப்படப் பொருட்களைப் பற்றியும், தரமற்ற பொருட்களைப் பற்றியும் நுகர்வோர் தகவல் கிடைத்தால் சென்னை எழிலகத்தில் உள்ள உணவுப்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளருக்கோ, பொதுச் சுகாதாரம் மற்றும் காப்பு மருந்துகள் துறை இயக்குநருக்கோ அல்லது மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் மாவட்டச் சுகாதார அலுவலர்களுக்குத் தகவல் தெரிவித்தால், உடன் தவறிழைப்போர் தண்டிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கலப்படங்களைப் பற்றி அறிந்து கொள்வதாலும், தரமான அக்மார்க், ஐ.எஸ்.ஐ. போன்ற பொருட்களைக் கேட்டு வாங்கி உபயோகிப்பதாலேயுமே கலப்படத்தை முழுமையாக நீக்க முடியும். இதற்கு நுகர்வோரின் விழிப்புணர்வே முக்கியமாகும்.●

## குடிநீர்த் திட்டப் பணிகள்

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களில் சுமார் 81,728 ஆழ்துளைக் கிணறுகள், 35,247 வடி முனைக் குழாய்கள் மற்றும் 21,626 மின்விசைப் பம்புகள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றில் எந்த ஒரு குடிநீர்க் குழாய் பழுதடைந்தாலும், அது 48 மணி நேரத்திற்குள்ளாகவே செப்பனிட்டுச் சீராக்கப்பட்டு வருகிறது. இப்பணி மாவட்ட அளவில் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு ரூ.6 கோடி இணை மானியம் அளித்துள்ளது. இத்தொகையைக் கொண்டு குழாய்க் கிணறுகள், திறந்த கிணறுகள் தோண்டப்படுவதுடன் தற்போதுள்ள கிணறுகளும் ஆழப்படுத்தப்படும். தவிர, மேல்நிலை நீர்தொட்டிகள், தரைமட்ட நீர்த்தொட்டிகளை அமைக்கவும், இவற்றிற்குப் புதிய நீர் ஆதாரங்களைக் கண்டு பிடிக்கவும், குடிநீர் வழங்கும் குழாய்களை விரிவாக்கவும் இந்த இணை மானியம் பயன்படுத்தப்படும்.

பழுதடைந்த கைப்பம்புகளை உடனுக்குடன் செப்பனிட்டுச் சீராக்கித் தடையின்றிக் குடிநீர் வழங்கத் தேவையான உதிரிபாகங்களை வாங்கித் தயார் நிலையில் வைத்துக் கொள்வதற்காக ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


**தமிழரசு**

**சந்தா விவரம்**

தமிழ் ......... ஓராண்டு = ரூ.24
அரையாண்டு = ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு = ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# எலும்புப் புற்றுநோய்

## இதோ ஒரு புதுச்சிகிச்சை


**நம் உடலில் ஏற்படும் நோய்கள் பல; அவற்றில், நமது எலும்புகளில் உண்டாகும் எலும்புப் புற்றுநோய் மிகவும் கொடியது ஆகும். அந்த நோய்க்குத் தக்க சிகிச்சையளித்து நிவாரணம் காண்பதில் கைதேர்ந்த முடநீக்கியல் நிபுணரான டாக்டர் மயில்வாகனன் நடராசன் M.B.D.Orth., M.S.Orth., M.Ch.Orth.(Eng.), Ph.D. அவர்களைச் சந்தித்து, எலும்புப் புற்றுநோயும் அதற்கான அபூர்வ சிகிச்சை முறையும் பற்றிக் கேட்டறிந்து தொகுத்தளிக்கிறார் நமது சிறப்புச் செய்தியாளர் பி.எல்.ஆர்.**

**ப**த்து காலன் தண்ணீர், ஏழு பார் சோப்புகள் செய்யத் தேவைப்படும் கொழுப்பு, பல்லாயிரம் பென்சில்கள் செய்வதற்குத் தேவைப்படும் பாஸ்பரஸ், மூன்று அங்குல ஆணி செய்வதற்கான இரும்பு, சின்னதொரு கோழிக் கூட்டிற்கு வெள்ளையடிக்கப் போதுமான சுண்ணாம்பு ஆகியவற்றுடன்- சிறிது மக்னீசியமும் கந்தகமும் உடையதே நமது உடல். நம்முடைய உடலில் உள்ள மொத்த எலும்புகளின் எண்ணிக்கை 206 ஆகும்.

''எலும்புகளில்-முக்கியமானவை, முக்கியமற்றவை என்று நாம் எதையும் இனம் பிரித்துச் சொல்ல முடியாது. ஆனால் - நம்முடைய மூளை, இதயம், சிறுநீரகம் போன்ற உள் உறுப்புகள் எலும்புகளின் பாதுகாப்பிலேயே உள்ளன. அதனால், அப்படிப்பட்ட பகுதிகளில் உள்ள எலும்புகளே முக்கியமானவை என்று சொல்லி விடலாமா என்றால் அது தான் இல்லை!

''எலும்பே இல்லாத ஒரு மனித உருவத்தைக் கற்பனை செய்து பார்த்தோமானால், எலும்பினுடைய முக்கியத்துவம் தெரியும். வெறும் சதைக்கோளம் மட்டுமே, ஓர் அழகிய உருவமாகி விடுமா? அதனால் நிமிர்ந்து நிற்க முடியுமா? உட்கார முடியுமா? ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போக - வரத் தான் முடியுமா?

''எலும்பு இல்லையானால் மனித இனத்திற்கு நடமாட்டமே இல்லாமல் ஆகிவிடும். அசைவே வாழ்க்கை;



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தோள்பட்டை எலும்பும், செயற்கை உலோக எலும்பால் சீர் செய்யப்பட்ட தோள்பட்டை எலும்பும் (எக்ஸ்ரே-படம்).



முடநீக்கியல் நிபுணர் டாக்டர் மயில்வாகனன் நடராசன்.

வாழ்க்கையே அசைவு. மிருகங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல!''

''ஒரு மனிதனை நடமாடச் செய்வதில், கால் எலும்பானது முக்கியப் பங்கு வகிக்கிறது; அவனுக்கு ஆக வேண்டிய காரியங்களைச் செய்வதில், கை எலும்பு முக்கியத்துவம் பெறுகிறது...''



எலும்புப் புற்றுநோய்க்கு இலக்கான இடதுகால் எலும்பை அகற்றிவிட்டு செயற்கை உலோக எலும்பு பொருத்தப்பட்ட பெண்மணி

—இவ்வாறு மனித உடலில் உள்ள எலும்புக் கூட்டின் இன்றியமை யாமை பற்றிச் சொல்லிக் கொண்டே போனார் டாக்டர் மயில்வாகனன் நடராசன். அதைத் தொடர்ந்து அவருடைய பேச்சு, புற்றுநோயின் பக்கம் திரும்பியது.

''புற்றுநோய் ஒருவருக்கு இன்ன காரணத்தால்தான் வரும் என்று நாம் திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது; அதுபற்றிய ஆராய்ச்சி இன்னமும் உலகளவில் தொடர்ந்து நடந்து வருகிறது. ஆனால், அதற்குத் தகுந்த சிகிச்சைகள் கண்டுபிடிக்கப் பட்டு விட்டன. வாயில்... தொண்டை யில்... மார்பில்... வயிற்றில்... இரத்தத்தில் என்று, கிட்டத்தட்ட மனித உடலின்அங்கங்களிலெல்லாமே பெரும்பாலும் புற்றுநோய் வருவது உண்டு. எலும்பில்கூட அப்படிப் பட்ட புற்றுநோய் ஏற்பட்டு, உயிருக்கே மிகச் சீக்கிரத்தில் உலை வைத்து விடக் கூடும்!''

—இவ்வாறு பேசிக்கொண்டே சென்ற டாக்டரிடம் நாம் குறுக்கிட் டோம்.

''உடலின் எந்த இடத்திலுள்ள எலும்பில் பெரும்பாலும் புற்று நோய் வரக்கூடும்?''

''அப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது; எல்லாவகை எலும்பிலும் வரலாம்!''

''எலும்பில் புற்றுநோய் கண் டிருப்பதற்கான முக்கிய அறிகுறி என்ன?''

''எலும்பில் முதலில் ஒரு சிறிய கட்டி இருப்பதுபோல நெருடலாக நமக்குத் தெரியும். அது சிறியதாக இருக்கும்போது வலியிருக்காது; அந்தக் கட்டியானது வளர வளர வலியெடுக்கும். ஆரம்பத்திலேயே அதைக் கவனிக்காமல் விட்டுவிட் டால், நுரையீரல் வரையில் அந்தப் புற்றுநோய் பரவி உயிராபத்தையே உண்டாக்கிவிடும்''.

''இத்தனை வயதுள்ளவர்களுக் குத்தான் எலும்புப் புற்றுநோய் வரும் என்று ஏதாவது கணக்கு உண்டா?''

''அப்படியொன்றும் இதற்கு வயது வரம்பெல்லாம் இல்லை; எந்த வயதிலும் வரக்கூடும். ஆனால் ஒன்று - எலும்புப் புற்றுநோய் என்பது யாருக்காவது மிக அபூர்வ மாகத்தான் ஏற்படும். இது ஒரு மோசமான வியாதி. காலில் புற்று நோய் வந்தால் காலை எடுத்து விட்டால் சரியாகி விடும்; கை எலும்பில் வந்தால் கையைத் துண்டித் தால் சரியாகிவிடும் என்றெல்லாம் கொடுமையான நிலைமை முன்பு இருந்தது. ஆனால், ஒருவரது அங் கத்தை வெட்டி எடுப்பது அவரது தோற்றத்தையே சிதைத்து விடும் அல்லவா? அதுபற்றிய சிந்தனை தான் என்னை இதுபற்றிய தனிப் படிப்பிற்கும் பயிற்சிக்குமே தூண்டி யது என்று கூறலாம்!'' என்று குறிப்பிட்டார் டாக்டர் மயில் வாகனன் நடராசன்.

''காலிலோ, கையிலோ புற்று நோய்க்கட்டி வந்துவிட்டால், அந்த உறுப்பை அடியோடு எடுத்துவிட வேண்டிய அவசியமே இல்லை'' - என்கிறார் அவர்.


''கால் எலும்பில் ஒருவருக்குப் புற்றுநோய்க்கட்டி வந்திருந்தால் அப்படிப் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள எலும்பை மட்டும் அறுவை செய்து எடுத்துவிட வேண்டும்; பிறகு அதே அமைப்பிலும் அளவிலு மான 'டைட்டானியம்' (Titanium) என்கிற ஒருவகை இலேசான உலோகத்தாலான செயற்கை எலும்பு அமைப்பைச் செய்து அங்கே பொருத்திச் சதையை பழையபடி மூடிவிட வேண்டும். இதனால் இரத்த ஓட்டமோ வேறு எதுவுமோ அப்பகுதியில் எந்தவகையிலும் பாதிக் காது!''

இப்படிச் செய்வதன்மூலம், சிகிச்சை பெற்ற இரண்டே வாரத் தில் தையல் பிரிக்கப்பட்டு ஒரு மனிதன் எந்தவித ஊனமும் இல்லா தவன் போலவே பழையபடி நடக்க முடியுமாம்!

''இதற்கான அறுவைச் சிகிச்சை நடத்த சுமார் நான்கிலிருந்து ஆறு மணிநேரம் வரை தேவைப்படும். எந்த வயதில் உள்ளவர் உடம்பிலும் இந்தச் சிகிச்சையை மேற்கொள்ள முடியும். எந்த ஒரு மனிதனும் கடைசி வரை முடவனாகவே வாழ்ந்து இறக்கச் சம்மதிக்க மாட்டான்; தவிரவும், எலும்புப் புற்றுநோய் கண்டபின், 'எந்த நேரத்தில் இறப் போமோ?' என்கிற அச்சத்தோடும் வாழ விரும்பமாட்டான்.

முன்பெல்லாம், யாருக்காவது கையிலோ காலிலோ எலும்புப் புற்றுநோய் கண்டு - அந்தப் பகுதியை வெட்டியெடுத்து விடலாம் என்று டாக்டர் சொன்னால்... வேண்டவே வேண்டாம்; இருக்கிறவரை ஊன மில்லாமல் இருந்துவிட்டுச் செத்துப் போகிறேன் என்பார்கள்; அல்லது அப்படி வெட்டியெடுத்த பிறகு நீண்ட ஆயுளுக்கு நீங்கள் உத்திர

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மூட்டெலும்பும் செயற்கை உலோக எலும்புப் பொருத்தப்பட்ட மூட் டெலும்பும் (எக்ஸ்ரே-படம்).



வாதம் தருவீர்களா என்று டாக்டரிடம் கேட்பார்கள். நாம் அதற்கு ஐம்பது சதவிகிதம் உத்திரவாதம் தரலாம்; முழு உயிருக்கும் உத்திர வாதம் தர டாக்டரால் முடியுமென்றால், கடவுளுக்கும் டாக்டருக்கும் வித்தியாசமில்லாமல் போய் விடுமல்லவா! தரமாக வாழவேண்டும்; கண்ணியமாச் சாகவேண்டும் (Quality of life and dignity of death)என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருப்பதே அதற்கு முக்கியக் காரணம்'' என்று சிரித்துக் கொண்டே சொன்ன டாக்டர் மயில்வாகனன், ''என் சிகிச்சையே அதை உறுதிப்படுத்துவதுதான்'' என்றார். அவர் மேலும் நம்மிடம் தெரிவித்ததாவது:

''இப்போதெல்லாம் மக்களிடம் அப்படிப்பட்ட தயக்கம் இல்லை; புற்றுநோயுடன் போராடிச் சாவதை விட... நோய்கண்ட எலும்பை நீக்கிவிட்டுச் செயற்கை எலும்பைப் பொருத்திக் கொண்டு, வாழ்கிற காலம் வரை எந்தவித அங்கக் குறைவுமின்றி முழுத் தோற்றத்துடன் நிம்மதியாக இருக்கலாமே என்ற முடிவுக்கு மக்கள் முன்வரத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு வீட்டில்... ஒரு சின்னஞ்சிறு குழந்தைக்கு எலும்புப் புற்றுநோய் என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதனால் அந்தக் குழந்தைக்கு மட்டுமா துன்பம்? அவ்வீட்டில் உள்ள எல்லோரையுமல்லவா அந்தக் கவலைபிடித்துக் கொள்ளும்? அப்படிப்பட்ட துன்பத்தைத் துடைப்பதுதான் நான் செய்கிற சிகிச்சை!''

செயற்கை எலும்பாகிய அமைப்பைச் செய்யப் பயன்படும் மூலப் பொருளான 'டைட்டானியம்' என்ற ஒருவகை உலோகம் துருப்பிடித்தல் போன்ற எவ்வகைக் கோளாறும் அற்றதும் இலேசானதும் ஆகும். அந்த மூலப்பொருள் வெளிநாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனாலேயே அதற்கு மட்டும் சற்றுக் கூடுதல் செலவு செய்ய நேரிடக் கூடும். சென்னையில் 'TEAM' என்கிற ஒரு அமைப்பு (Titanium Equipment and Anode Manufacturing Company) மட்டுமே. இப்போது, தேவையின் பேரில் அதைப் பத்தே நாட்களில் செய்து தந்து விடுகிறது. திரு. கிருஷ்ண மூர்த்தி ராவ் என்பவர் அந்த அமைப்பின் தலைவராக இருந்து, நமது பணியில் முழு ஒத்துழைப்புத் தருகிறார்.

''கையிலோ காலிலோ எலும்புப் புற்றுநோய் காரணமாகப் பாதிக்கப் பட்ட பகுதியை 'Scan' செய்து computer-ல் கொடுத்தால், செயற்கை உலோக எலும்பின் அளவைக் கம்ப்யூட்டரே மிக்சரியாகக் கணக்கிட்டு தாமாக வடிவமைத்துக் கொடுத்து விடும் (Computer Assisted Designing). இதனால் அளவில் தவறுதல் ஏற்பட்டு அதனால் டாக்டரோ, நோயாளியோ தொல்லைப்பட வாய்ப்பில்லை. அப்படிப் பொருத்தப்பட்ட நபர், பல்லாண்டுகள் கவலையின்றி இயல்பாக வாழலாம். கவனக் குறைவாக எப்போதாவது கீழே விழ நேர்ந்தால், அந்தச் செயற்கை அமைப்பில் தெறிப்பு ஏற்படக் கூடும்; அப்படி ஆனாலும் மறுபடி அதை எளிதில் மாற்றிக் கொண்டு விடலாம். சிகிச்சை செய்த இடத்தில் சீழ் பிடித்தாலோ, உடலின் வேறு இடத்தில் அதேபோல் எலும்புப் புற்றுநோய் கண்டாலோ தான் நோயாளிக்குச் துன்பம்! இவ்வகை சிகிச்சைபெற்ற நோயாளிகளில் பத்து சதவிகிதம் பேருக்கு, அதே இடத்தில் மறுபடியும் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு இருப்பதையும் நான் குறிப்பிடத்தான் வேண்டும்!'' என்றார், டாக்டர்.

இந்தியாவில்-பம்பாய்(டாடா மருத்துவமனை), குஜராத், சென்னை ஆகிய மூன்றே நகரங்களில் உள்ள புற்றுநோய் மருத்துவமனைகளில் தான் இந்தவிதச் சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால், சென்னைதான் இந்தவகையில் முதலிடம் வகிக்கிறது. டில்லி, கல்கத்தா போன்ற பெரும் நகரங்களிலிருந்தும், வேறு பல மாநிலங்களிலிருந்துமெல்லாம் கூட, இவ்வகைச் சிகிச்சைக்காக இங்கே வருகிறார்கள்.

குறிப்பாக - சென்னை அடையாறில் உள்ள புற்றுநோய்க் கழக மருத்துவமனையில்தான் இந்தச் சிகிச்சை, கடந்த மூன்றாண்டுக் காலமாகச் செய்யப்படுகிறது. டாக்டர் மயில்வாகனன் நடராசனே அங்கு இச்சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து வருகிறார்.

''இந்த மூன்றாண்டுக் காலத்தில் அங்கே பதின்மூன்று ஆண்களுக்கும், பதினேழு பெண்களுக்குமாக - ஆக மொத்தம் முப்பது பேர்களுக்கு நான், புற்றுநோய் கண்ட எலும்பை நீக்கி விட்டுச் செயற்கை மூட்டு பொருத்தும் சிகிச்சையை (Limb Salvage by Custom Prosthisis) வெற்றிகரமாகச் செய்திருக்கிறேன்.




பாதிக்கப்பட்ட எலும்பை எடுத்துவிட்டுப் பொருத்தப் படும் 'டைடானியம்' உலோக எலும்பு அமைப்பு.

''தந்தை மகனுக்கு ஆற்றும் உதவி, அவையத்து முந்தி இருக்கச் செயல்'' என்பதற்கு ஏற்ப, என்னை இந்த எலும்புச் சிகிச்சைத் துறையில் ஈடுபடச் செய்து, முன்னணிப் பயிற்சி அளித்து, ஊனமில்லாமல் வாழ மக்களுக்குச் சேவை செய்யும் பணியில் எனக்கு முன்னோடியாய் இருந்து, என்னை உருவாக்கிய எனது தந்தையார் டாக்டர் ம.நடராஜன் அவர்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும். அடுத்தபடியாக- இங்கிலாந்து நாட்டுக்குச் சென்று இவ்வகையில் பயிற்சி பெற்று வந்த என்னை, முதன்முதல் அப்படிப்பட்ட அறுவைச் சிகிச்சை செய்ய அனுமதித்த அடையாறு புற்றுநோய்க்கழக (Musculo Skeletal Tumour Service, Cancer Institute, Adyar) நிர்வாக டாக்டர்களான திரு. கிருஷ்ண மூர்த்தி, திருமதி சாந்தா இருவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்றார் டாக்டர் மயில் வாகனன் நடராசன்.

''மாற்று இருதயம் பொருத்தும் சிகிச்சை மேனாடுகளில் பதினைந் தாண்டுக் காலமாகச் செய்யப்பட்டு

# பார்த்தோம் படித்தோம்




## காவிரி நதிநீர்ப் பங்கீடு சிறப்பிதழ் குறித்து கருத்துரைகள்: (1-4-'91)

'**கா**விரி ஆறும் கன்னித்தமிழ் நாடும் என்னும் கட்டுரை, காவிரி ஆற்றின் தோற்றம், அது எந்தெந்த மலைகளையும் பகுதிகளையும் கடந்து கடலில் கலக்கிறது என்ற விவரமும் தெளிவாக உள்ளன. மேலும் பருவ மழைகள், மழையளவு, காவிரியில் கிடைக்கும் மொத்த நீரளவு முதலியனவும் புள்ளி விவரங்களுடன் துல்லியமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**1892,1924-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்த விவரங்களைத் தெரிவித்து, 1956-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆற்றுப்படுகையில் ஏற்பட்ட பாசன மேம்பாட்டையும் தெரிவித்துள்ளது.**

—மா.சு.சம்பந்தன்,
சென்னை-600 001.



**க**ல்வெட்டு, வரலாறு, இலக்கியம், வேதம், புராணம், ஒப்பந்தம், இந்திய அரசமைப்பு முதலிய பல்வேறு பகுதிகளில் இருந்தும் செய்திகள் திரட்டித் தொகுத்துப் பகுத்துத் தரப்பட்டுள்ளன. 'காவிரிக்கு ஒரு கடிதம்' என்று கவியரசர் இளந்தேவன் எழுதியிருப்பது தமிழர்கள், உழவர்களின் இதய எண்ணத்தின் வெளிப்பாடாகும்.

—வ.வேம்பையன்,
கல்பாக்கம்-603 102.

'**இ**லக்கியத்தில் காவிரி' - என்னும் இனிய கட்டுரை, அரிய பல செய்திகள் கொண்டதாக இருந்தது.

—ஜி.மாணிக்கவாசகன்,
சென்னை-600 004.

**கா**விரி நதிநீர்ப்பங்கீடு சிறப்பிதழைமிகச்சிறப்பானதாக அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் காவிரியின் பெருமையை உணரும் வகையிலும், காவிரி நீர்ப் பங்கீட்டில் நாம் செலுத்த வேண்டிய நிலையையும் விளக்கி உள்ளீர்கள். நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

-எம்.சி.தேவேந்திரன்
மிட்டப்பள்ளி
தருமபுரி மாவட்டம்.

**கா**விரி பற்றி கவிஇளந் தேவனவர்
பாவிரித்த ஓலை படித்துவந்தேன்;
—நாவிரித்துக்
காட்டு நதிபோல் கருத்துக் கரைபுரளக்
கூட்டுவித்தார்; வெல்கஅவர் கூற்று!

—இ.பதுருத்தின்,
சென்னை-600 081.

---

வருகிறது; நம் இந்தியாவில் இன்னும் அந்த நிலை வரவில்லை! ஆனால்- இங்கே மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுகிறது, கண்தானம் - இரத்த தானமெல்லாம் செய்யப்படுகிறது. அதேபோல, ஒருவர் இறந்தபின் எலும்பு தானம் செய்வது என்ற நிலைமையும் வரவேண்டும். எலும்புப் புற்றுநோய் கண்ட ஒருவர், அந்தப் பகுதி எலும்பை நீக்கிவிட்டுச் செயற்கை உலோக எலும்பைப் பொருத்திக் கொள்ள ஆகும் பெரும் செலவை அதன்மூலம் தவிர்க்கலாம். அமெரிக்க நாட்டில் அப்படி இறந்தவர் எலும்பை வைத்துச் சிகிச்சை செய்ய அனுமதிக்கப்படுகிறது. ஒருவர் இறந்த ஆறுமணி நேரத்திற்குள்ளாக குறிப்பிட்ட பகுதி எலும்பை மட்டும் எடுத்தால், பாதிக்கப்பட்டவர் உடலில் பொருத்திவிட முடியும். இதுபற்றி அரசாங்கமே பரிசீலித்து அதற்கான ஒரு திட்டமேகூட அமல்படுத்தினால் ஏழைஎளிய மக்களும் இந்தச் சிகிச்சையால் பயன்பெற முடியும். இறந்தவனின் எலும்பு மண்ணுக்கோ நெருப்புக்கோ போய்ச் சேருவதைவிட, இன்னொருவனுக்கு உதவுமானால் நல்லதல்லவா!'' என்று மிக உருக்கத்தோடு அவர் சொன்னார்.

''அமெரிக்க நாட்டில் 'Hospice' என்றொரு அமைப்பு வைத்திருக்கிறார்கள். அங்கே என்ன செய்கிறார்கள் தெரியுமா? நோயாளி ஒருவருக்கு எந்தச் சிகிச்சையும் பலனளிக்காமல் விரைவிலேயே சாவு நிச்சயம் என்று மருத்துவர்களால் தீர்மானிக்கப்பட்ட பிறகு- அதில் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவார்கள். அங்கு அவர்களுக்கு மாத்திரை மருந்துகள் மட்டுமல்ல; அவர்கள் ஆசைப்பட்டுக் கேட்பதையெல்லாம் தட்டாமல் வாங்கித் தருவார்கள். ஏனென்றால், சாகிற போதாவது அந்த நபர் மன நிம்மதியோடு இறக்கட்டுமே என்பது தான்! இங்கே நம் நாட்டில் அப்படியெல்லாம் செய்யமுடியாது. எலும்புப் புற்றுநோய் கண்டு, கையையோ, காலையோ இழந்து இறந்து போகிற ஒருவர் - 'முடமாக அல்லவா கேவலமாக இறந்து போகிறோம்! என்று நிச்சயமாகக் கவலைப்படக் கூடும், அல்லது அப்படிப்பட்ட கவலையே அவரைக் கொன்று விடவும்கூடும். அதுபோலெல்லாம் அங்கத்தில் ஒரு குறைவும் வெளித் தோற்றத்தில் தெரியாதபடி, ஒருவரை மனநிம்மதியோடு கடைசிக் காலம் வரை முழுத் தோற்றத்தோடு வாழ வைக்க முடிகிறதே என்ற திருப்தி எனக்கு நிறைய இருக்கிறது!'' என்று பெருமிதத்தோடும் பெருமையோடும் நம்மிடம் தெரிவித்தார் டாக்டர் மயில்வாகனன்.

இலக்கிய விருந்து:

# தமிழகமும் ரோமாபுரியும்

**தங்கவயல் லோகிதாசன்**

"**ய**வனர் தம் கப்பல்களில்-
குளிர்ந்த, இனிய, மணம் கமழும் மதுவைக் கொண்டு வந்தார்கள்.
அழகிய வடிவழகிகள்-
அந்த மதுவைத் தங்கக் கோப்பைகளில் அரசர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்!"
என்று '**புறநானூறு**' கூறுகிறது.

வெண்ணுரை கிளப்பிக் கொண்டு-
யவனரின் கப்பல்கள் தங்கத்தை இறக்கிவிட்டு, கொடுங்கல்லூரிலிருந்து மிளகு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு செல்வதாக '**அகநானூறு**' உரைக்கிறது.

இதே செய்தியைத்தான்-
'**பெரும்பாணாற்றுப் படை**யும், '**நெடுநல்வாடை**'யும் குறிப்பிடுகின்றன.



அழகான விளக்குகளை-
அரசர்களுக்கு யவனர் விற்றார்கள் என்ற குறிப்பு '**நெடுநல்வாடை**'யில் காண்கிறது.
அரசரின் மெய்க்காப்பாளர் போன்ற பதவிகளில் யவனர்களை நியமித்ததாக '**முல்லைப்பாட்டு**' அறிவிக்கிறது.

கோட்டை வாயில் காவலராக-
யவனர் பணி செய்திருக்கிறார்கள் என்பதைச் '**சிலப்பதிகாரம்**' செப்புகிறது.

யவனச் சிற்பிகளைப் பற்றிச் சில விவரங்களை '**மணிமேகலை**' அளிக்கிறது.

'அகஸ்டஸ்' என்பவருடைய-
முடிசூட்டு விழாவிற்குப் பாண்டிய மன்னன் ஒரு பிரதிநிதிக் குழுவை அனுப்பியிருந்ததாக 'ஸ்ட்ராபோ' என்பவர் குறித்திருக்கிறார்.

கி.மு.27-ஆம் ஆண்டிலேயே-
தமிழகமும், ரோம சாம்ராஜ்யமும் பரஸ்பர வாணிபத்தில் ஈடுபட்டிருந்தன என்பது இதனால் புலனாகிறது.

இதற்கு முன்பே ஃபினீஷியரும், கிரேக்கரும்-
அரேபியரும், சிரியாக்சூரரும்,
நம்நாட்டு விளைபொருளைக் கொண்டு சென்று வாணிபம் நடத்தி வந்தார்கள்.
இது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் நடந்ததாக





'ஹீரோடோட்டஸ்' என்பவர் எழுதியிருக்கிறார்.

எகிப்தைக் கைப்பற்றிய ரோம் நாட்டினர்-
அதன்பின் தமிழகத்தோடு வாணிபத்தில் முனைந்து
ஈடுபட்டார்கள்.
அகஸ்டஸ் முதலிய சக்கரவர்த்திகளின்
நாணயங்கள் தென் இந்தியாவில் பல இடங்களில்
கிடைப்பது இதற்குத் தக்க சான்றாகும்.

உலக வாணிபம் அந்த நாளில்-
முக்கியமாகக் கேரளத்து விளைபொருள்களைச்
சார்ந்தே நடந்து வந்தது.

எல்லோரும் விரும்பும்-
ஏலம், லவங்கப்பட்டை, சந்தனம், தந்தம்,
சுக்கு, தேக்கு இவை போன்ற பொருள்களைப்
பெரும்பாலும் குத்தகை எடுப்பார்கள்.

கி.பி.18-ஆம் நூற்றாண்டில்-
டச்சுக்காரர்களின் மிளகு வியாபாரம்
ஜாவாவுக்குப் பரவுகிற வரையில்-
உலகிலேயே கேரளத்தைத் தவிர வேறெங்கும்
மிளகு விளையவில்லை.

மிளகின் தேவையும்-
மிக அதிகமாகிக் கொண்டிருந்தது.
குளிர் காலத்தில் மாமிசத்தை உப்புப் போட்டுக்
காப்பாற்றுவதற்கு ஐரோப்பாவில் மிளகு பயன்பட்டது.
'மிளகுக்கு மருந்து குணம் உண்டு'-
என்று பொதுவாக ஐரோப்பியர் நம்பினார்கள்.

'இந்திய மருந்து'-
என்று கிரேக்க, ரோமன் நூல்களில்
மிளகைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்
உணவு அருந்தும் சமயத்தில்-
தேவைக்கு ஏற்றபடி எடுத்துக்கொள்ள
மிளகைப் பொடி செய்து கண்ணாடிச் சீசாக்களில்
போட்டு வைப்பது ஐரோப்பியரின் வழக்கம்.

ஐரோப்பிய தேவாலய வழிபாடுகளில்-
காணிக்கை செலுத்தி வந்ததும் முக்கியமாக மிளகுதான்.
ஆப்பிரிக்காவின் தென்கோடியைப்
'பார்த்தலம்யூஸ்' கண்டுபிடித்ததும், 'வாஸ்கோடகாமா'
அதன் வழியாகக் கேரளத்துக்கு வந்ததும்,
அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டுபிடித்ததும்-
எல்லாம் மிளகுக்காகத்தான்!

'மார்க்கோபோலோ'வின்-
எழுத்துக்களிலிருந்து கிறிஸ்து சகாப்தத்தின்
ஆரம்பத்திலேயே சீனருக்கும் தமிழகத்திற்கும்
வாணிபத் தொடர்பு இருந்ததாகத் தெரிகிறது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரையில்-
கேரளத்தின் செல்வ வாழ்க்கையில் மிளகின் இடம்
ஒப்புயர்வற்றதாக இருந்தது.
இரண்டு ராத்தல் மிளகு விற்ற பணத்தைக் கொண்டு
ஒருவன் ஒருமாத காலம் நலமாய் வாழலாம்.
எனவே, மிளகு பயிர் செய்யும் தொழில்
கேரளத்தில் ஓங்கி வளர்ந்தது.

பரங்கிகளின் தொடர்பு இருந்த வரையில்-
இந்த நிலை நீடித்திருந்தது
அரேபியரும், சீனரும், போர்ச்சுகீசியர்களும்
கேரள அரசர்களின் உத்தரவுப்படி
அந்த நாட்டு மிளகை மொத்தமாக வாங்கிச்
சென்றார்கள்.













இதன் பயனாக அரசர்கள்-
அந்த வெள்ளைக்காரரின் செல்வாக்குக்கு
உட்பட்டதுடன் மிளகை மலிவாக அவர்களுக்கு
விற்கவும் செய்தார்கள்.
அன்பளிப்பாகப் பணமும் கொடுத்தார்கள்.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டு பிறந்தது.
'கேரளத்தின் கறுப்புப் பொன்' என்ற கீர்த்தி பெற்ற
மிளகின் விலை வீழ்ந்தது.
மிளகு விவசாயமும் அதோகதியாகிவிட்டது.
கேரளத்தின் செல்வநிலையும் குலைந்தது.

வியாபாரக் காற்றை 'ஹிப்பாலஸ்'-
என்பவர் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து
நாற்பது நாட்களில் ரோமாபுரியிலிருந்து
கொடுங்கலலூருக்கு வரும் வசதி ஏற்பட்டது!

ஐரோப்பாவுடன்-
தமிழகத்தின் மிளகு வியாபாரம் வலுத்தது.
ஒரு ராத்தல் மிளகின் விலை 15 தினார்.
சுமார் ஏழு ரூபாயாகக் குறைந்தது.
இது முந்தைய விலையில் பாதியாகும்.

விலை குறைந்த காரணத்தால்-
சாதாரண மக்களும் மிளகை உபபோகிக்கத்
தொடங்கினார்கள்.
இதன் காரணமாக ரோமிலிருந்து-
தமிழகத்திற்கு ஆண்டுதோறும் செண்ட்டும்
பணமுமாக ஐந்தரைக் கோடி வந்தது.


இந்த நிலை அகஸ்டஸ் காலம் முதல்-
நீரோ காலம் வரையில் இருந்து வந்தது என்று
தென்னிந்தியாவில் கிடைக்கும் புராதன
நாணயங்களைக் கொண்டு தீர்மானிக்கிறார்கள்.

கி.மு. முதல் நூற்றாண்டு முதல்-
கி.பி. முதல் நூற்றாண்டு முடிய புதுச்சேரிக்கு அருகே
உள்ள அரிக்கமேடு என்னும் ஊரை
ரோம்நாட்டு மக்கள் சிறந்த வாணிபத் தலமாக
உபயோகித்து வந்தார்கள்.

பிளினி முதலிய பயணிகள்-
இந்தச் செய்தியைக் குறித்து வைத்திருக்கிறார்கள்.
பிளினி தம் குறிப்பில் கடல் கொள்ளைக்காரரின்
இருப்பிடமான 'நித்யாஸி' என்னும்
இடத்தைப் பற்றியும், மிளகு உள்ள இடமான
'கொட்டநாரா' வைப்பற்றியும் தமக்குத்
தெரியுமென்று எழுதியிருக்கிறார்.

ரோமானிய சாம்ராஜ்யமும்-
தமிழகமும் நடத்திய வாணிபத்தில் முக்கியமாய்ப்





அடுத்தபடியாக ரோம் மக்கள்-
அதிகமாக விரும்பிய பொருள் யானைத் தந்தம்.
கொடுங்கல்லூர்த் துறைமுகத்திலிருந்து-
ஏற்றுமதியான பொருள்களில் தந்தமும்
முக்கியமான ஒன்று
மெல்லிய பட்டாடைகள், வைரம்-
வைடூரியம், சந்தனம், அகில் கட்டை,
தேக்கு முதலியவையும் ஏற்றுமதியாயின!

நாணயங்கள், பூவேலையுடைய சட்டைகள்-
மை, சிந்தூரம், கண்ணாடி, தகரம்,
ஈயம், தாமிரம், பித்தளை, மது முதலியவற்றைக்
கேரளத்தில் இறக்குமதி செய்து வந்தார்கள்.
அழகிய யவனப் பெண்களைத்தமிழ்நாட்டு
மன்னர்களுக்கு ரோம் வியாபாரிகள் விற்றார்கள்.
தென்னிந்தியாவில் பலவிடங்களில்-
ரோமன் நாணயங்கள் தோண்டி
எடுக்கப் பெற்றிருப்பது இந்தச் செய்தியைப்
புலப்படுத்தும்.

தமிழகத்திற்கும்-
ரோம் நாட்டிற்கும் வணிகத் தொடர்பு
கி.பி. முதலாம் நூற்றாண்டில் மும்முரமாகவும்,
இரண்டாம் நூற்றாண்டில் சாமானியமாகவும்
இருந்தது.

அலெக்ஸாண்டிரியாவிலும்-
ரோமிலும் இந்திய வியாபாரிகளும், மந்திரவாதிகளும்
அந்த நாளில் வாழ்ந்து வந்தார்கள்.
ரோமானியரும் அதிகமாகத் தமிழகத்தில்
வாழ்ந்து வந்தார்கள்.

கிழக்கு ரோமன் சாம்ராஜ்யம்-
நிறுவப்பட்ட கி.பி. 320-ஆம் ஆண்டுக்குப்பிறகு
கேரளத்துடன் ரோம் மக்களின் வியாபாரம்
வளர்ந்ததாகப் பல காரணங்களால் தீர்மானிக்கலாம்

ஆயினும்-
'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' என்று
யவனரைப் பற்றிச் சங்க நூல்களில் கூறியிருப்பது
கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்கே பொருந்தும்.
யவனர் என்று சங்க நூல்களில் கூறியிருப்பது
யாரை? ஆசியா மைனரில் அயோனிய என்ற
இடத்தில் வாழ்ந்திருந்ததால், 'யவனர்'
என்ற பெயர் அவர்களுக்கு ஏற்பட்டது!

பிற்காலத்தில் பெர்ஷியாக்காரர்-
சிரியாக்காரர், அரேபியர், யூதர் முதலிய
எல்லோரையுமே 'யவனர்' என்றும்
'யோனகர்' என்றும் கூறத் தொடங்கி விட்டார்கள்.
கூர்ஜரர், ஹூணர் போன்ற எல்லோரையுமே
கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் யவனராகக்
குறிப்பிட்டார்கள். நெடுஞ்சேரலாதன்
யவனருடன் போரிட்டதாகப் **'பதிற்றுப்பத்து'**க்
கூறுகிறது.

சங்க நூல்கள் குறிக்கும் யவனர்-
ரோமானியர்கள் என்றும், கி.பி. 2-ஆம்
நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும்-
தீர்மானிப்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை
என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.
அதற்கு அவர்கள் கூறும் காரணம்,
கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில்
நடந்த வாணிபத்தைப் பற்றித்தான் **புறநானூறு,**
அகநானூறு கூறியிருப்பதாக எடுத்துக் காட்டுகின்றனர்!

பங்கு கொண்டவர்கள் அலெக்ஸாண்டிரியாவில்
வாழ்ந்த கிரேக்கரும், சிரியர்களும், யூதர்களுமே!
அவர்களில் பலர் வியாபாரத்திற்காக-
அந்தக் காலத்தில் சேரநாட்டிலும்,
பாண்டிய நாட்டிலும் வந்து வசித்தார்கள்.

கிரேக்கர் ஒருவர்-
கி.பி. எண்பதாவது ஆண்டில் எழுதி வெளியிட்ட
'பெரிப்ளூஸ்' என்று நூலில் தமிழகத்தைப் பற்றிக் கூறும்
போது 'நவ்ற', 'திண்டிஸ்' என்ற இரண்டு
துறைமுகங்களையும் குறிப்பிடுகிறார்.
இவை சங்க நூல்களில் புகழ்பெற்ற
'நறவு', 'தொண்டி' என்ற இரண்டு இடங்களுந்தான்!

கி.பி. 150-ஆம் ஆண்டில்-
டாலமி என்பவர் எழுதிய பூகோள நூலிலும்
இந்த இடங்களைப்பற்றிய குறிப்புகள் உண்டு.

ரோமானிய சாம்ராஜ்யம் வெகுகாலம் வரையில்
செல்வச் செழிப்புடன் இருந்து வந்தது.
காலப் போக்கில் அந்த நாட்டு மக்கள்
சுகபோகங்களில் ஈடுபட்டதால், அந்தச்
சாம்ராஜ்யம் அழியலாயிற்று.
பணத்தை மக்கள் வீண் செலவு செய்யவும்
தொடங்கினார்கள்.


ரோம் நாட்டு மக்களை-
மிளகானது கவர்ந்ததால், அதற்கு
'யவனப் ப்ரிய' என்று ஒரு பெயரும் ஏற்பட்டது.
நம் நாட்டு வாசனைப் பொருள்கள்-
பஞ்சவர்ணக்கிளி, மயில், குரங்கு இவையெல்லாம்
யவனப் பெண்மணிகளின் மனத்தை மிகவும்
கவர்ந்திருந்தன!

கிளிகளை-
வெள்ளிக் கூண்டில் வைத்துத்தான்
அந்தப் பெண்கள் வளர்ப்பார்கள்
முத்தும் பவளமும் ரோம்நாட்டுப் பெண்களை
வெகுவாக மயக்கி விட்டன.

ஜூலியஸ் சீசர் தம் நண்பனின் தாய்க்கு
நாற்பத் தெண்ணாயிரத்து ஐம்பத்தேழு பவுன்கள்
விலையுள்ள ஒரு முத்தைப்பரிசாகக்
கொடுத்தார் என்று கூறுவதுண்டு.

கிளியோபாத்ரா என்ற அழகுராணி
தன் காதில் அணிந்திருந்த முத்து ஒரு இலட்சத்து
அறுபத் தோராயிரத்து 458 பவுன்கள் பெறும்
என்று மதிப்பிடுகிறார்கள்.









# அறிவியல் செய்திகள்

## சைக்கிள் ஓட்டினால் இதயநோயைக் குறைக்கலாம்!

சைக்கிள் ஓட்டுவது மிகச்சிறந்த உடற்பயிற்சி என்கின்றனர் அமெரிக்க மருத்துவர்கள்.

மிகவும் கடினமான உடற்பயிற்சிகளால் கிடைக்கும் அத்தனை நன்மைகளையும், சீரான சைக்கிள் சவாரி மூலம் பெறமுடியும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர். முறையாகச் சைக்கிள் சவாரி செய்வதானது-

★ இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகிறது.

★ இதய நோய் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது.

★ பதற்றத்தையும் மன இறுக்கத்தையும் தணிக்கிறது.

★ நல்ல தூக்கம் வர உதவுகிறது.

★ இரத்தத்தில் கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்துகிறது.

★ எடையைச் சீராக வைத்திருக்கத் துணை புரிகிறது.

★ தோலின் நிறத்தை மேம்படுத்துகிறது;

★ வைரஸ்களையும், பாக்டீரியாக்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு, உடலின் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கிறது.

ஆனால், இந்த நன்மைகளைப் பெற வேண்டுமானால், தினசரி ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 20 நிமிடங்களாவது, வாரத்திற்கு மூன்று முறையாவது சீரான சைக்கிள் சவாரி செய்ய வேண்டும்.

சைக்கிளை நிற்க வைத்துவிட்டுப் பெடலை மிதித்து, உடற்பயிற்சி செய்வதும் இதே நன்மைகளைக் கொடுக்கும். ஆனால், இத்தகைய உடற்பயிற்சிகளை மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்வதே நல்லது. இவ்வாறு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## அரிசியிலிருந்து புரதம்: ஜப்பானின் கண்டுபிடிப்பு

டோக்கியோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் புரதம் ஒன்றை அரிசியிலிருந்து தயாரித்துள்ளனர். இப்புரதத்தின் பெயர் ''அர்ஸா சிஸ்டட்டின்'' என்பதாகும். இது வெப்பத்தைத் தாங்கக் கூடியதும் மிகவும் தீவிரமாகச் செயல்படக் கூடியதும் ஆகும். காய்ச்சல் மற்றும் வயிற்றுப் போக்கு நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சிறிதளவு புரதமே போதுமானது. இப்புரதத்தினால் எவ்விதப் பக்க விளைவுகளும் இல்லை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.



பாலாடைக் கட்டியை உண்பதால் பற்சிதைவு தடுக்கப்படுகிறது. ஏற்கெனவே ஏற்பட்டுள்ள பற்சிதைவுகளையும் அது சரி செய்கிறது.

'சீஸ்' எனப்படும் பாலாடைக் கட்டியை உண்பதால், அதிலுள்ள கால்சியம் சத்தானது பற்சிதைவைத் தடுக்கிறது. அன்றியும் ஏற்கனவே சிதைந்து போயுள்ள பற்களில் புதிய தாதுக்களைச் சேர்ப்பதன் மூலம் அவற்றை வலுப்படுத்துகிறது.

**பற்சிதைவைத் தடுக்கும் பாலாடைக் கட்டி!**

பற்கள் ஆரோக்கியமாக இருக்கச் சூரிய வெளிச்சமும் உதவுகிறது. நல்ல சூரிய வெளிச்சம் உள்ள வகுப்பறைகளில் படிக்கிற குழந்தைகளுக்கு, மின்விளக்குகள் கொண்ட வகுப்பறைகளில் படிக்கின்ற குழந்தைகளைக் காட்டிலும், பல் தொந்தரவுகள் மிகவும் குறைவாக இருந்தனவாம்.



- அமெரிக்கத் தகவல் நிலையம்.

## பூமியை வெப்பமடையச் செய்யும் வாயுக்கள் அளவு அதிகரிப்பு

பூமியை வெப்பமடையச் செய்யக் கூடிய 5 முக்கிய வாயுக்கள், காற்று மண்டலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் அதிகமாகி உள்ளது. இத்தகவலை அமெரிக்கக் கடலியல் மற்றும் காற்று மண்டல ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. கரியமில வாயு, மீதேன் வாயு, நைட்ரஸ் ஆக்ஸைடு, குளோரோப்ளோரோ-கார்பன், சி.எப்.சி.12 ஆகியவை அவை.

நிலக்கரி, மண்ணெண்ணெய், விறகு போன்றவற்றை எரிப்பதனால் உருவாகும் கார்பன்-டை-ஆக்ஸைடு, வாயுமண்டலத்தில் மண்டிப் பெருகிப் போய், பூமியின் வெப்பமானது வாயுமண்டலத்துக்குள் வெளியேறிச் சென்று விடாமல் தடுத்துவிடக் கூடும் என்றும், இதனால் பூமி மிகவும் வெப்பமடையக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதன் விளைவாக அடுத்த நூற்றாண்டின் மையப்பகுதிக்குள், கடல்மட்டம் உயரக்கூடும் என்றும், பருவ நிலையில் மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்றும் அவர்கள் அச்சம் தெரிவித்தார்கள்.

கடந்த 4 ஆண்டுகளில் கரியமில வாயு ஆண்டுதோறும் 0.5 சதவீதம் பெருகியுள்ளதாகக் கடலியல் மற்றும் காற்று மண்டல ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. வாயு மண்டலத்தில் இது 10 இலட்சத்துக்கு 350 என்னும் அளவுக்கு வளர்ந்து இருப்பதாக அது குறிப்பிடுகிறது. ஆண்டுக்கு ஆண்டு இந்த வளர்ச்சி விகிதம் மாறுபட்டு வருவதாகவும் அது குறிப்பிடுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!





கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ்; பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



